REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2021 மே 1 சனிக்கிழமை
# தினகரன்
THINAKARAN
89
1932 - 2021
வரு. 89 இல. 102 | May 01, Saturday, 2021 | 16பக்கங்கள் | 30/-

## ஹரின் எம்.பி. ஜூலை 14 வரை கைதாகார்

### சட்ட மாஅதிபர் நீதிமன்றில் அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவை எதிர்வரும் ஜூலை 14 ஆம் திகதி வரை கைது செய்வதில்லையென 06



இஸ்ரேலில் நெரிசலில் சிக்கி 44 பேர் பலி 02



கொடிகாமம் மரக்கறி சந்தை பூட்டு 09




10



டெஸ்ட் அரங்கில் புதிய மைல்கல்லை எட்டிய திமுத், திரிமான்ன 16

## உழைக்கும் சமூகத்தின் வறுமையை ஒழிக்க பொருளாதார திட்டம்

### மே தின செய்தியில் ஜனாதிபதி கோட்டாபய



உழைக்கும் சமூகங்களை பெரிதும் பாதிக்கும் வறுமையை எமது சமூகத்திலிருந்து ஒழிப்பதற்கான தெளிவான பொருளாதார திட்டத்தை அரசாங்கம் வகுத்து, முறையாக செயற்படுத்தி வருகிறது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது மே தின செய்தியில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தேசிய கைத்தொழில் துறையை மேம்படுத்தும் அதே நேரம், விவசாய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு 06

## பொருளாதாரத்தை கட்டியெழுப்ப உழைக்கும் வர்க்கம் கைகோர்க்கும்

### மே தினச் செய்தியில் பிரதமர் நம்பிக்கை



'மக்கள் நலன் சார்ந்த பணியிடம்; பாதுகாப்பான தேசம்' எனும் தொனிப்பொருளில் இவ்வாண்டு கொண்டாடப்படும் மே தினத்தில் தேசிய பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு உழைக்கும் மக்கள் அனைவரும் கைகோர்ப்பார்களென்று நான் உறுதியாக நம்புகின்றேன் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது மே தினச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். 06

கொவிட்19 தொற்றால் பாதிக்கப்பட்ட

## மக்கள் விரைவில் குணமடைய வீட்டிலிருந்தவாறு பிரார்த்தியுங்கள்

### மே தினச் செய்தியில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் வேண்டுகோள்



நாட்டில் கொவிட் தொற்று மீண்டும் தலைதூக்கியிருக்கும் இவ்வேளையில் வருடாவருடம் மேதினம், உழைக்கும் மக்களது உரிமைப் போராட்டத்தை நினைவுகூரும் நாளாக உலக தொழிலாளர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. எனினும் கொவிட் 19 கொரோனா தொற்று மக்கள் மத்தியில் 06

நாட்டில் அதிகரித்து வரும் கொரோனா வைரஸ் பரவல்;

# திருமணங்கள் உட்பட அனைத்து வைபவங்களும் 02 வாரம் தடை

### அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக இராணுவத் தளபதி தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

திருமணங்கள் உள்ளிட்ட அனைத்து உற்சவங்களும் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் இரண்டு வாரங்களுக்கு முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக கொரோனா வைரஸ் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவர் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

தடையை மீறி செயற்படுவோருக்கு

**எதிர்வரும் திங்கட்கிழமை முதல் இரண்டு வாரங்களுக்கு வைபவங்கள், உற்சவங்களுக்கு முற்றாக தடை விதிப்பு**

எதிராக கடும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

நாட்டில் அதிகரித்து வரும் கொரோனா வைரஸ் பரவலை கருத்திற்கொண்டு அரசாங்கம் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகளை இனங்காணும் பிசிஆர் பரிசோதனை 06





ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து தயாரித்த 21 தீர்மானங்களுடனான சர்வதேச தொழிலாளர் தின பிரேரணை நேற்று (30) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டபோது...

## அமரர் ரணசிங்க பிரேமதாசவின் 28ஆவது நினைவுதினம் இன்று



முன்னாள் ஜனாதிபதி அமரர் ரணசிங்க பிரேமதாசவின் 28ஆவது நினைவுதினம் இன்று சனிக்கிழமை அனுஷ்டிக்கப்படுகிறது. ஒப்பற்ற தலைமைத்துவத்தை வழங்கி இலங்கையின் எதிர்கால அபிவிருத்திக்காக அவர் ஆற்றிய சேவைகள் 06

ரமழான் தொழுகை நேரம்

| திகதி | 01-03 |
|---|---|
| சஹர் | 04-23 |
| சுபஹ் | 04-38 |
| சூ. உதயம் | 05-57 |
| லுஹர் | 12-09 |
| அஸர் | 03-26 |
| ம:ரிப் | 06-19 |
| இஷா | 07-31 |

Halo
Complete Family Protection
Hotline: 077 4648855


உயிர்த்த ஞாயிறு தாக்குதலை நடத்த

## சஹ்ரான் குழுவுக்கு வெடிபொருட்கள் வழங்கியதை ஒப்புக்கொண்ட ராஸிக்ராசா

### புதிய ஆதாரங்களை தொடர்ந்துTID பிரிவு தீவிர விசாரணை

**சுப்பிரமணியம் நிசாந்தன்**

உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் திட்டமிட்டமை தொடர்பாக ஏராளமான தகவல்களை அறிந்த ஒருவர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். 06



## இன்று தொழிலாளர் தினம்



## முன்னாள் IGP மஹிந்த பாலசூரிய காலமானார்

### இன்று பொரளையில் இறுதிச்சடங்கு



முன்னாள் பொலிஸ் மாஅதிபர் மஹிந்த பாலசூரிய தனது 68 ஆவது வயதில் காலமானார்.

அவர் நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் காலமானதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண 06

## புதிய வைரஸுடன் போராட 02 மீ. இடைவெளி அவசியம்

### கடைப்பிடிக்குமாறு Dr. பத்மா வேண்டுகோள்

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**



ஒரு மீற்றருக்கு பதிலாக இரண்டு மீற்றர் சமூக இடைவெளியை பேணுவதன் ஊடாக புதிய கொவிட் 19 வைரஸிலிருந்து எம்மை பாதுகாத்துக்கொள்ள முடியுமென இலங்கை வைத்திய சங்கத்தின் தலைவர் 06



## முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அரசு அனுமதிக்க வேண்டும்

சிறீதரன் MP கோரிக்கை 03



## தடுப்புக் காவலிலுள்ள ரிஷாத் ரியாஜிடம் CID தீவிர விசாரணை

செப்பு வழங்கல், தொலைபேசி உரையாடல் குறித்தும் கேள்வி 03

## சுமந்திரன் பயணித்த வாகனம் விபத்து

### எம்.பிக்கு எதுவுமில்லை; வாகனத்திற்கு சேதம்



தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் பயணித்த வாகனம் கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் நேற்று விபத்துக்குள்ளாகியது.

கொழும்பிலிருந்து கல்முனை நோக்கி பயணித்த போது நேற்று அதிகாலை 3.45 அளவில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

வாகனம் முழுமையாக சேதமடைந்தபோதும் 06

## பாடசாலைகள் திறப்பதா? நாளை இறுதித்தீர்மானம்

### கல்வியமைச்சர் ஜீ.எல். பீரிஸ் அறிவிப்பு



பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பான இறுதித் தீர்மானம் நாளை ஞாயிற்றுக்கிழமை எடுக்கப்படவிருப்பதாக கல்வியமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

முழு நாட்டை உள்ளடக்கும் வகையில் மாகாண மற்றும் வலய கல்விப் பணிப்பாளர்களிடமிருந்து இது தொடர்பான தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றன. 06

பொத்துவில்-பொலிகண்டி வரை

## கல்முனை நீதிமன்றால் வழக்கு தள்ளுபடி

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான மக்கள் எழுச்சி பேரணிக்கு எதிராக கல்முனை பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை நேற்று கல்முனை நீதவான் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

நேற்றுக் காலை கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்கு விசாரணையில் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம். ஏ. சுமந்திரன் ஆஜராகியிருந்தார். இவ் வழக்கு தொடர்பாக அவர் தெரிவிக்கையில்.

கல்முனை நீதவான் இல்லாத சமயத்தில் ஒரு பதில் நீதவான் முன்னிலையில் 06

## ரிஷாத்துக்கு கேரள நபர்களுடன் தொடர்பு?

### இந்திய ஊடகங்கள் தகவல்




சிஐடியின் தடுப்புக்காவலில் இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன், இந்தியாவின் கேரள மாநிலத்தில் ஏற்படுத்திக்கொண்டிருந்த தொடர்புகள் தொடர்பாக இந்திய பாதுகாப்புத் துறையினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ரிஷாத் பதியுதீன் 2009ஆம் ஆண்டு கேரளாவின் கசராகோட் 06

**விக்கல் வீராச்சாமி**



தலைவரே, நீங்க விடுகிற அறிக்கை–கள், சொல்லுற கருத்துக்கள், பேசுற பேச்–சுக்கள் எல்லாம் மக்கள ஆழமாக சிந்திக்க வைக்குது....

அப்படியா, அப்ப அதுகள எழுதித் தாற தம்பிக்குத்தான் நன்றி சொல்லணும், நான் சும்மா டம்மி தான்...!!!







அரச பொசன் உற்சவத்தை முன்னிட்டு மிஹிந்தலை மஹாசேயவுக்கு வெள்ளை வர்ணம் பூசுதல் மற்றும் அங்குள்ள ஏனைய விகாரைகள், தாது கோபுரங்களுக்கு வர்ணம் பூசும் நடவடிக்கைகள் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. நிகழ்வில் மையத்தின் தலைவரான டட்லி சிறிசேன, மடகொட அபயதிஸ்ஸ தேரர், லேக்ஹவுஸ் நிறுவனத்தின் துணைப் பொது மேலாளர் சந்தன பண்டார உள்ளிட்டோர் வண்ணப்பூச்சு பூசும் போது பிடிக்கப்பட்ட படம்.

# சர்வதேச செய்திகள்

## இஸ்ரேலில் சமய விழாவில் நெரிசலில் சிக்கி 44 பேர் பலி



வடகிழக்கு இஸ்ரேலில் சமய விழா ஒன்றில் ஏற்பட்ட சனநெரிசலில் சிக்கி குறைந்தது 44 பேர் உயிரிழந்துள்ளனர்.

மெரோன் மலை அடிவாரத்தில் வருடாந்தம் இடம்பெறும் லாக் ஓமர் விழாவின்போதே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது. இதில் பலரும் காயமடைந்துள்ளனர்.

இதனை ஒரு பேரழிவு என்று விபரித்திருக்கும் பிரதமர் பென்ஜமின் நெதன்யாகு, காயமடைந்தவர்களுக்காக பிரார்த்திப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா தொற்று ஆரம்பமானது தொடக்கம் இஸ்ரேலில் இடம்பெற்ற மிகப்பெரிய நிகழ்வான இந்த விழாவில் ஆயிரக்கணக்கான பழைமைவாத யூதர்கள் பங்கேற்றனர்.

இஸ்ரேலில் கொரோனா தடுப்பு மருந்து செலுத்தும் திட்டம் வெற்றிகரமாக நடைபெற்று வரும் நிலையில் அங்கு பல கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டு வருகின்றன. எனினும் இந்த விழா ஆரம்பிப்பதற்கு முன்னரே கொவிட்–19 அச்சுறுத்தல் குறித்து சுகாதார அதிகாரிகள் எச்சரித்திருந்தனர்.

இந்த விழா இடம்பெறும் பகுதியில் கட்டுமானம் ஒன்று இடிந்து விழுந்ததாக ஆரம்பக்கட்ட செய்திகள் தெரிவித்தன. உள்ளூர் நேரப்படி நேற்று அதிகாலை இந்த விபத்து நேர்ந்திருப்பதாக அவசரப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். இதன்போது பங்கேற்பாளர்கள் சிலர் படிகளில் தடுக்கி விழுந்த நிலையில் அதனைத் தொடர்ந்து மேலும் பலர் ஒருவர் மேல் ஒருவர் விழ ஆரம்பித்ததாக பொலிஸாரை மேற்கோள் காட்டி ஹாரட்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

'சில வினாடிகளில் அது நிகழ்ந்தது. மக்கள் விழுந்து, ஒருவருக்கு ஒருவர் மிதித்துக்கொண்டனர். அது ஒரு பேரழிவாக இருந்தது' என்று சம்பவத்தை பார்த்த ஒருவர் மேற்படி பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

சம்பவத்தின்போது, குறுகலான பாதை ஒன்றால் ஆயிரக்கணக்கானவர்கள் நுழைய முயன்றதால் அங்கு பெரும் குழப்பம் ஏற்பட்டிருக்கும் வீடியோ காட்சி ஒன்று இணையதளத்தில் வெளியாகியுள்ளது.

மக்களை வெளியேறும்படி ஒலிபெருக்கியில் கூறியபோது குண்டு எச்சரிக்கை விடுக்கப்பட்டதாக நினைத்தே என்று ஒரு யாத்திரிகர் குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்து அந்தத் தலத்தில் இருக்கும் அனைவரையும் வெளியேறும்படி பொலிஸார் கேட்டுக்கொண்டனர்.

'இவ்வாறான ஒரு நிகழ்வு இங்கு நடந்திருக்கும் என்று யாரும் நினைத்திருக்க மாட்டார்கள்' என்று அவர் சென்னல் 12 தொலைக்காட்சிக்கு தெரிவித்தார்.

பல டஜன் அம்புலன்ஸ் வண்டிகள் சம்பவ இடத்திற்கு விரைந்ததோடு உடல்கள் தரையில் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. காயமடைந்தவர்கள் ஹெலிகொப்டர்கள் மூலம் அழைத்துக் செல்லப்பட்டதோடு, தேடுதல் மற்றும் மீட்பு படையினர் சம்பவ இடத்திற்கு அனுப்பப்பட்டதாக இராணுவம் தெரிவித்தது.

இந்த சம்பவத்தில் குறைந்தது 103 பேர் காயமடைந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதில் 38 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ளனர்.

'அங்கே பெரும் கூட்டம் இருந்தது. நகர்வதற்கு இடம் இருக்கவில்லை. மக்கள் தரையில் விழ ஆரம்பித்தார்கள். அதிகமானவர்கள் தரையில் விழுந்தார்கள்' என்று அந்த நிகழ்வில் பங்கேற்க வந்த ஒருவர் பி.பி.சி தொலைக்காட்சிக்கு தெரிவித்துள்ளார்.

'1000க்கும் அதிகமானவர்கள் மிக மிக சிறிய இடத்தின் வழியாக குறுகலான பாதையில் ஒன்றாக செல்ல முயன்றபோது ஒருவர் மீது ஒருவர் விழுந்தனர்' என்று ஓர்தடொக்ஸ் ஜூஸ் இணையதளத்தின் செய்தியாளர் பெஹட்ரே ஹரடிம் குறிப்பிட்டுள்ளார்.

பெரும் கூட்டம் காரணமாக குறித்த தலத்தில் கொரோனா கட்டுப்பாடுகளை செயற்படுத்த முடியவில்லை என்று அதிகாரிகள் முன்னதாக கூறி இருந்தனர்.

இந்த அனர்த்தம் இடம்பெறுவதற்கு முன்னர் ஒழுங்கு விதிகளை பேணுவதில் இடையூறு செய்த இருவரை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

## பிரேசிலில் கொரோனா பலி 400,000ஐ தாண்டியது



பிரேசிலில் கொவிட்– 19 நோய்த்தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 400,000ஐத் தாண்டியுள்ளது.

கடந்த 24 மணிநேரத்தில் அங்கு சுமார் 3,000 பேர் நோய்த்தொற்றால் உயிரிழந்துள்ளனர். இதன்படி நோய்த்தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 401,186 ஆக உள்ளது.

பிரேசிலில் 100,000 மக்களில் 189 பேர் நோய்க்குப் பலியாகின்றனர். போதிய தடுப்புமருந்துகளைக் கையகப்படுத்த பிரேசில் தவறியதால் அது பெரும் நெருக்கடியில் உள்ளது.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் பிரேசிலில் கொவிட்– 19 கட்டுக்கடங்காமல் பரவ ஆரம்பித்தது. அங்கு கொரோனா வைரஸ் உருமாறியதால் பரவும் வேகம் கூடியது.

அதனால் மருத்துவமனைகளில் கூட்டம் அலைமோதியது, போதிய வசதிகள் இல்லாததால் சுகாதார அளவில் எண்ணற்ற சிக்கல்கள் எழுந்தன.

கடந்த வாரம் மட்டும் பிரேசிலில் நாள் ஒன்றுக்குச் சராசரியாக 2,526 பேர் உயிரிழந்தனர். குறிப்பாக மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கு இடைப்பட்ட வெறும் 37 நாட்களுக்குள் அந்நாட்டில் 100,000 பேர் உயிரிழந்தனர் . இது அந்நாட்டில் மிக மோசமான பாதிப்பை எற்படுத்திய மாதமாக இருந்தது. இது அமெரிக்காவுக்கு மாத்திரமே இரண்டாவதாக இருந்தது. இந்த பெருந்தொற்று ஆரம்பித்தது தொடக்கம் பிரேசிலில் 14.5 மில்லியன் நோய்த் தொற்று சம்பவங்கள் பதிவாகி உள்ளன.

அந்நாட்டின் மூன்றில் ஒரு பங்கு மாநிலங்களில் அவரச சிகிச்சை பிரிவு 90 வீதத்திற்கு அதிகம் நிரம்பிக் காணப்படுவதாக சுகாதார நிறுவனமான பியோக்ரூஸ் தெரிவித்துள்ளது.

இதேநேரம் தடுப்பு மருந்து தட்டுப்பாட்டால் சில மாநிலங்கல் தடுப்பு மருந்து வழங்குவதையும் தற்காலிகமாக இடை நிறுத்தியுள்ளன. 212 மில்லியன் மக்கள் தொகை கொண்ட பிரேசிலில் சுமார் 13 வீதமானவர்களுக்கே தடுப்பு மருந்து வழங்கப்பட்டிருப்பதாக தரவுகள் காட்டுகின்றன.

## பேஸ்புக் இலாபம் இரட்டிப்பானது



பேஸ்புக் நிறுவனத்தின் இலாபம், அண்மைக் காலாண்டில் கிட்டத்தட்ட இருமடங்காக அதிகரித்துள்ளது. அது 9.5 பில்லியன் டொலர் லாபத்தை ஈட்டியுள்ளதாகத் தெரிவித்தது.

கொரோனா நோய்த்தொற்றுக் காலத்தில் அதிகமானோர் இணையத்தைப் பயன்படுத்தியதால், மின்னிலக்க விளம்பரங்கள் மூலம் நிறுவனம் அதிக இலாபம் பெற்றுள்ளது.

பேஸ்புக் ஒரு வலுவான காலாண்டைக் கண்டுள்ளதாகவும், மக்கள் தொடர்ந்து இணைந்திருக்கவும் வர்த்தகங்கள் வளரவும் உதவியுள்ளதாகவும் அதன் தலைவர் மார்க் ஸக்கர்பர்க் வருவாய் வெளியீடு ஒன்றில் தெரிவித்தார்.

நிறுவனம், இணைய விளம்பரங்கள் மூலம் பெற்ற வருவாய் 25.4 பில்லியன் டொலரை எட்டியது. முந்தைய ஆண்டின் அதே காலாண்டுடன் ஒப்பிட்டுகையில் அது 46 வீதம் அதிகம்.

பேஸ்புக்கை மாதந்தோறும் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 2.85 பில்லியனாக உயர்ந்துள்ளது. அது 10 வீத அதிகரிப்பாகும்.

## மஞ்சள் கடலில் எண்ணெய் கசிவு



எண்ணெய் கப்பல் ஒன்று இவ்வார ஆரம்பத்தில் சீனத் துறைமுகத்திற்கு அப்பால் இன்னொரு கப்பலுடன் மோதியதில் சுமார் 400 தொன் எண்ணெய் மஞ்சள் கடலில் கசிந்துள்ளது. அந்தச் சம்பவத்தால் சிங்டாவ் துறைமுகத்திற்குள் நுழையும், வெளியேறும் கப்பல்களுக்கு எவ்விதச் சிரமமும் இல்லை என்று அதிகாரிகள் கூறியுள்ளனர்.

எண்ணெயை அகற்ற மாசுநீக்கும் 12 கலங்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இருப்பினும் அங்கு சுற்று வட்டாரத்தைப் பார்ப்பது தெளிவாக இல்லாத காரணத்தால் எண்ணெயை அகற்றும் நடவடிக்கையில் இடையூறு எற்பட்டுள்ளது. அந்தச் சம்பவத்தால் உயிருடற்சேதம் ஏதும் இல்லை. எவரும் காயமடையவில்லை.

## பலஸ்தீன பாராளுமன்றத் தேர்தலை ஒத்திவைத்தார் ஜனாதிபதி அப்பாஸ்



வாக்குறுமை தொடர்பான பிரச்சினை காரணமாக பலஸ்தீன பாராளுமன்ற தேர்தலை ஒத்திவைப்பதாக பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் அறிவித்துள்ளார். ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்கு ஜெரூசலத்தில் இருக்கும் பலஸ்தீனர்களுக்கு வாக்களிக்க இஸ்ரேல் அனுமதித்தால் மாத்திரமே இந்தத் தேர்தல் நடைபெறும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

எந்த கட்டுப்பாடும் விதிக்காது தேர்தலில் பங்கேற்பதற்கு அனுமதிப்பது பற்றி இஸ்ரேல் தரப்பில் தெளிவான எந்த பதிலும் அளிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

2006 ஆம் ஆண்டுக்கு பின்னர் பலஸ்தீனத்தில் முதலாவது பாராளுமன்ற மற்றும் ஜனாதிபதி தேர்தல்கள் மே மற்றும் ஜூலை மாதங்களில் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. இதில் ஜனாதிபதி தேர்தல் திட்டமிட்டபடி நடத்தப்படுவது குறித்து எந்த தெளிவான அறிவத்தலும் வெளியிடப்படவில்லை. ஜனாதிபதி அப்பாஸ் தனது போட்டியாளர்கள் மத்தியில் கடும் சவாலை எதிர்கொண்டுள்ள நிலையில் இந்தத் தேர்தலில் அவரது கட்சி வெற்றி பெறுவது சந்தேகமாக இருந்த சூழலிலேயே இந்த அறிவிப்பு வெளியாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

தேர்தல் நிறுத்தப்படுவது, கடந்த பல ஆண்டுகளில் நீடித்த பிளவை முடிவுக்குக் கொண்டுவந்து தேசிய ஐக்கியம் ஒன்றை ஏற்படுத்தும் எதிர்பார்ப்பை பலவீனப்படுத்துவதாக பார்க்கப்படுகிறது. கடந்த தேர்தலில் இடம்பெற்ற வன்முறைகளால் அப்பாசின் பத்தா கட்சி இஸ்ரேல் ஆக்கிரமிப்பு மேற்குக் கரையிலும் இஸ்லாமிய போராட்ட அமைப்பான ஹமாஸ் காசா பகுதியிலும் பிளவுபட்டு அட்சி புரியும் நிலை ஏற்பட்டது.

எதிர்வரும் தேர்தலை ரத்துச் செய்வது தொடர்பில் ஹமாஸ் அமைப்பு அப்பாஸை அண்மையில் எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2021 மே 1 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN

**தொழுகை நேரம்**
01 முதல் 03 வரை
சுபஹ் - 04.38
லுஹர் - 12.09
அஸர் - 03.26
மஃரிப் - 06.19
இஷா - 07.31

**இன்றைய சுபதினம்**
சார்வரி வருடம் பங்குனி 19
ராகுகாலம் : பகல் : 01.30 - 03.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சதுர்த்தி



### எடுக்கப்பட்ட தீர்மானங்களில் மாற்றமில்லை

# இரசாயன உரப் பயன்பாட்டை முற்றிலும் நீக்கிய உலகின் முதல் நாடாக இலங்கையை மாற்றுவேன்

## சேதன உர உற்பத்தி மாவட்ட மட்டத்தில் ஊக்குவிக்கப்படும்



முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் இருந்து பின்வாங்காமல் இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதை முழுமையாக நீக்கிய உலகின் முதல் நாடாக இலங்கையை மாற்றும் சவாலை தான் ஏற்றுக்கொள்வதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இரசாயன உரங்களின் பயன்பாட்டிலிருந்து நீங்கிய எந்த நாடும் உலகில் இல்லாதிருப்பது இலக்கை அடைவதற்கு ஒரு தடையல்ல. பேசிப் பேசி இருக்காது விவசாயிகளுக்கு அறிவூட்டி ஆரோக்கியமான தலைமுறையை உருவாக்குவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென்று ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகள் பயன்பாடு மற்றும் இறக்குமதி மீதான தடை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக (29) காலை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

"ஆரோக்கியமான மற்றும் உற்பத்தித்திறன் வாய்ந்த குடிமகனை உருவாக்க நச்சு அல்லாத உணவுக்கான மக்களின் உரிமையை அரசாங்கம் உத்தரவாதம் செய்ய வேண்டும். அடுத்த பத்தாண்டுகளில் இலங்கையில் விவசாயத்திற்கு முழுமையாக சேதன உரங்களைப் பயன்படுத்த அந்த உற்பத்தியை துரிதப்படுத்த வேண்டும்" என "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கை பிரகடனத்தில் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

அதனை யதார்த்தமாக்குவதற்கு அடித்தளமிடும் வகையில் காலநிலை மாற்றத்திற்கான நிலையான தீர்வுகளுடன் பசுமை சமூகபொருளாதார மாதிரியை உருவாக்கும் நோக்கில் 20 அம்ச அமைச்சரவை பத்திரம் அண்மையில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

இரசாயன உர இறக்குமதிக்காக இலங்கை 2019 இல் 221 மில்லியன் டொலர்களை செலவிட்டது. எண்ணெய் விலை அதிகரிப்புடன், அந்த செலவு 300 தொடக்கம் 400 மில்லியன் டொலர் வரை அதிகரிக்கும். இரசாயன உரங்கள், களைக்கொல்லிகள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் ஆகியவற்றிற்கு பெரும் செலவு செய்த போதிலும், விவசாய உற்பத்தியில் தரமான அதிகரிப்பு எதுவும் ஏற்படவில்லையென்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

மண் வளம் குறைந்து விளைச்சல் குறைந்து, பல்லுயிர் அழிவுக்கு வழி வகுத்துள்ளது. இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளின் பயன்பாடு ஆறுகள் மற்றும் நீரோடைகளை மாசுபடுத்துவதுடன், தரமான குடிநீர் விநியோகத்திற்கு கடுமையான சவாலாக உள்ளது. சிறுநீரகம், புற்றுநோய் உள்ளிட்ட பல தொற்றா நோய்களுக்கான அரசாங்க செலவுகள் ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகின்றன. கிராமப்புற மக்களின் வாழ்வாதாரங்கள் இழக்கப்படுதல், சுகாதார நிலைமைகள் மோசமடைதல் மற்றும் மக்களின் உற்பத்தித் திறன் குறைதல் ஆகியவை நாடு எதிர்கொள்ளும் சவாலாக மாறியுள்ளது.

வேலைத்திட்டத்தின் ஆரம்பத்தில் சிக்கல்கள் ஏற்படலாம். ஆனால் ஒரு நிலையான பசுமை சமூகபொருளாதார முறையை உருவாக்குவது தாமதமாகக்கூடாது. எழும் பிரச்சினைகளுக்கு சரியான தீர்வுகளை நாம் அடையாளம் காண வேண்டும். இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதை விட்டுவிடுவது உற்பத்தியைக் குறைக்கும்

06




## குர்ஆன் சரிபார்க்கப்பட்ட மாதம்

அல் குர்ஆன் அருளப்பட்ட மாதத்தில் ஆற்றப்படும் ஒவ்வொரு நற்காரியத்திற்கும் ஒன்றுக்கு பத்து முதல் 700 மடங்கு வரை நன்மைகளை அளிக்கப்படுகின்றன. அதனால் இம்மாதத்தை உச்சளவில் பயன்படுத்திட வேண்டும். இதற்கு தேவையான வழிகாட்டுதல்களை முஹம்மத் (ஸல்) அவர்கள் வழங்கியுள்ளார்கள்.

குறிப்பாக ரமழான் மாதத்தில் காற்றை விடவும் வேகமாக நபி(ஸல்) அவர்கள் தானதர்மத்தில் ஈடுபட்டுள்ளார்கள். இது தொடர்பில் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், 'நபி (ஸல்) அவர்கள் வழமையாகவே எல்லோரையும் விட அதிகம் தானதர்மங்களில் ஈடுபடக்கூடியவராக இருந்தார்கள். ரமழான் மாதத்தின் ஒவ்வொரு இரவிலும் ஜிப்ரீல் (அலை) அவர்கள் அன்னாரை சந்தித்து குர்ஆனை ஒதிக்கேட்டு சரி செய்யக்கூடியவர்களாக இருந்தார்கள். அந்நாட்களில் ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபி (ஸல்) அவர்களை சந்திக்க வருகை தரும் போது அன்னார் வேகமாக வீசும் காற்றுக்கு ஒப்பாக தானதர்மம் செய்யக்கூடியவராக இருந்தார்கள்' என்றுள்ளார்கள். (ஆதாரம்: புகாரி)

இந்நபிமொழி இம்மாதத்தில் தானதர்மங்களை அதிகதிகம் மேற்கொள்வது அல்லாஹ்விடம் அதிக நன்மைகளை பெற்றுத்தரும் காரியம் என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

அதேநேரம் இம்மாதம் மற்றொரு சிறப்பைக் கொண்டிருப்பதையும் இந்நபிமொழி எடுத்தியம்புகின்றன. அதாவது அல் குர்ஆன் நபி (ஸல்) அவர்கள் ஊடாக 23 வருட காலப்பகுதியில் கால இட சூழல் நிலைகளுக்கு ஏற்ப கட்டம் கட்டமாக அருளப்பட்டிருக்கின்றது. அதன் படி வருடத்தில் எல்லா மாதங்களிலும் இக்குர்ஆனின் வசனங்கள் அருளப்பட்டுள்ளன. இருப்பினும் அதனை ஓதிக் காட்டி சரிபார்க்கும் பணியை ரமழான் மாதத்தில் தான் அல்லாஹ்வின் கட்டளைப்படி ஜிப்ரீல் (அலை) அவர்கள் மேற்கொண்டுள்ளார்கள் என்பது தெளிவாகின்றது. இதன்படி இம்மாதம் எவ்வளவு சிறப்புக்குரியது என்பதைச் சொல்லித்தான் தெரிய வேண்டியதில்லை.

அதனால் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல்கள் படி இம்மாதத்தை பயன்படுத்திடுவதில் ஆர்வம் காட்டுவோம். அது அல்லாஹ்வின் அன்பையும் அருளையும் பெற்றுத்தரும் காரியமாக அமையும்.

மர்லின் மரிக்கார் ...

# சிகிச்சை பெறும் கொரோனா தொற்றாளர் எண்ணிக்கை 10 ஆயிரத்தை தாண்டியது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டிலுள்ள வைத்தியசாலைகளில் தற்போது 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கொரோனா வைரஸ் நோயாளிகள் சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆஸ்பத்திரிகளிலும் சிகிச்சை மத்திய நிலையங்களிலும் 10 ஆயிரத்து 372 வைரஸ் தொற்று நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். வைரஸ் தொற்று ஆரம்பமாகியதன் பின்னர் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெறும் அதிகரித்த நோயாளிகள் உள்ள சந்தர்ப்பம் இதுவாகும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது கொழும்பு கிழக்கு போதனா வைத்தியசாலையில் உச்ச அளவில் நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருவதாக ஆஸ்பத்திரியின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் பிரியந்த கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

மேற்படி வைத்திய சாலையில் 120 நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க முடியுமென தெரிவித்துள்ள அவர்,

தற்போது 116 நோயாளிகள் அங்கு சிகிச்சை பெற்று வருவதாகவும் அந்த வகையில் உச்ச அளவில் அந்த வைத்தியசாலையில் நோயாளிகள் உள்ளதாகவும் அதேபோன்று தீவிர சிகிச்சைப் பிரிவில் தற்போது 08 கட்டில்களில் நோயாளிகள் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை நோய் தொற்றுக்கு உள்ளானவர்களென அடையாளம் காணப்பட்டுள்ள நபர்கள் பலர் சிகிச்சை மத்திய நிலையங்களுக்கு அனுப்புவதற்கு தாமதமாகும் காரணத்தால் வீடுகளில் தங்கியுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார். (ஸ)



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து தயாரித்த 21 தீர்மானங்களுடனான சர்வதேச தொழிலாளர் தின பிரேரணை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊழியர் சங்கத்தின் செயலாளர் லெஸ்லி தேவேந்திரவினால் நேற்று (30) அலரி மாளிகையில் வைத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்ட போது...

### கொவிசீல்ட் தடுப்பூசிகளை

# இந்தியாவிடமிருந்து பெறுவதில் நெருக்கடியான சூழ்நிலை

## மாற்றுத் திட்டங்கள் குறித்து ஆலோசித்து வருவதாக விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவிப்பு

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**



இந்தியாவில் ஏற்பட்டுள்ள கொவிட்19 பரவல் நெருக்கடியால் கொவிசீல்ட் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக தொற்று நோய் தடுப்பு பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

இந்தியாவில் ஏற்பட்டுள்ள கொவிட்19 பரவல் மற்றும் நெருக்கடிக்கு மத்தியில் அந்நாட்டிடமிருந்து கொவிசீல்ட் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள முடியுமென நாம் எதிர்பார்க்க முடியாது. கொவேக்ஸ் வேலைத்திட்டத்தின் கீழ் கொவிசீல்ட் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டு ஏனைய நாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்தியாவில்

06

# தடுப்புக் காவலிலுள்ள ரிஷாத்; ரியாஜிடம் CID தீவிர விசாரணை

## செப்பு வழங்கல், தொலைபேசி உரையாடல் குறித்தும் கேள்வி



உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டுதாரிகளுக்கு உதவி ஒத்தாசை வழங்கியமை தொடர்பில் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனிடமும் அவரது சகோதரர் ரியாஜ் பதியுதீனிடமும் சிஐடியின் சிறப்புக் குழுக்கள் தடுப்புக் காவலில் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

2019 ஏப்ரல் 21 ஆம் திகதி கொழும்பு, சினமன் கிராண்ட் ஹோட்டலில் தற்கொலை தாக்குதல் நடத்திய மொஹம்மட் இப்ராஹீம் இன்சாப் அஹமட்டுக்கு சொந்தமான குளோசஸ் எனும் செப்புத் தொழிற்சாலைக்கு செப்புக் கழிவுகளை சட்டத்துக்கு முரணாக விநியோகித்ததாக ரிஷாத்திடம் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதில் குறிப்பாக ரிஷாத் பதியுதீன், இந்த தற்கொலைதாரியின் திருமண நிகழ்வில் கலந்து கொண்டது முதல், தற்கொலைதாரியின் மனைவியின் தந்தையுடனான நெருக்கம்

06

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்; அரசு அனுமதிக்க வேண்டும்

## சிறீதரன் MP கோரிக்கை



முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தோரை நினைவு கூர அரசாங்கம் அனுமதி வழங்க வேண்டுமென தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் மே 18 இல் முள்ளிவாய்க்கால் நினைவு நாளில் தமிழ் மக்கள் தங்கள் இறந்து போன உறவுகளை நினைவு கூர அரசாங்கம் சந்தர்ப்பமளிக்க வேண்டும். அரசாங்கம் அதனை தவிர்த்துவிட முயன்று வருகிறது. ஆனால் அது தமிழ் மக்களுக்கு அரசாங்கம் செய்கின்ற மிகப் பெரிய அநியாயமான செயலாகும்.

கடந்த காலங்களில் 2016 இலிருந்து தமிழர்கள் இந்த வணக்கத்தை முள்ளிவாய்க்காலில் சென்று உணர்வு பூர்வமாக மேற்கொண்டனர். அதே போன்று நினைவு கூருவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார்.

# உழைப்பவர் உரிமைகள் வென்றிட உறுதியுடன் உழைப்போம்!

## அமைச்சர் டக்ளஸ் மே தினச் செய்தி



உழைக்கும் மக்களின் உரிமைகள் சகலதும் வென்றிடவும், அரசியலுரிமையிலும் அபிவிருத்தியிலும் அன்றாட வாழ்விலும் தமிழர் தேசம் தலை நிமிர்வு பெற்றிடவும் தொடர்ந்தும் உறுதியுடன் உழைப்போமென ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மேதின செய்தியில் தெவித்துள்ளார். மேலும் அந்த செய்தியில்,..

'நாம் தமிழ் தேசிய இனத்தின் தேச விடுதலைக்காக மட்டும் போராட எழுந்தவர்கள் அல்ல. தமிழ், சிங்கள முஸ்லிம் தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமையின் எழுச்சியையும் ஒன்றுபட்ட இலங்கைத் தீவின் ஒட்டு மொத்த புரட்சியையுமே எமது ஆரம்பகால இலட்சிய கனவாக நாம் கொண்டிருந்தவர்கள்.

எமது நெடுங்கனவை நிஜமாக்க நெஞ்சில் உறுதி கொண்டு நாம் எமது நீதியான உரிமைப்போராட்டக் களத்தில் அன்று நின்றிருந்தோம்.

தமிழர் தேசத்தின் ஒற்றுமைக்கு வேட்டு வைக்கப்பட்டதால் எமது உரிமை போராட்டம்

06

# அரச ஊழியர்கள் வாரத்துக்கு 03 தினங்கள் மட்டும் கடமைக்கு

- அதற்கு மேல் நிறுவனத் தலைவர் தீர்மானிக்கலாம்
- பொதுநிர்வாக அமைச்சு புதிய சுற்றுநிருபம் வெளியீடு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொரோனா வைரஸ் பரவலை கருத்திற் கொண்டு அரசாங்க ஊழியர்கள் வாரத்துக்கு 03 தினங்கள் கடமைக்கு சமுகமளித்தல் உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கிய சுற்றுநிருபம் பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி சேவை நிறுவனங்களில் சமூக இடைவெளியை பேணுதல் உள்ளிட்ட நடைமுறைகளை முறையாக செயற்படுத்தும் வகையிலேயே மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஜே.ஜே. ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

இச்சுற்றுநிருபத்தின் படி மாதத்திற்கு அவர்களது விடுமுறை நாட்கள் தவிர்த்து எட்டு தினங்கள் மட்டும்

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 120.37 | 126.14 |
| கனடியன் டொலர் | 132.20 | 138.18 |
| யூரோ | 201.26 | 209.00 |
| ஜப்பான் யென் | 1.6887 | 1.7628 |
| சிங்கப்பூர் டொலர் | 128.46 | 133.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 224.45 | 232.40 |
| சுவிஸ் பிராங்க் | 187.86 | 195.81 |
| அமெரிக்க டொலர் | 183.51 | 188.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 492.89 | கட்டார் ரியால் | 50.73 |
| குவைத் டினார் | 603.09 | சவூதி ரியால் | 49.54 |
| ஓமான் ரியால் | 483.42 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் சித்திரை மாதம் 18ம் நாள் சனிக்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1442 ரமழான் பிறை 18

### குறள் தரும் சிந்தனை



வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேல் செல்லு மிடத்து

*(அருள் இல்லாதவன்) தன்னை விட மெலிந்தவர் மேல் துன்புறுத்த செல்லும்போது, தன்னை விட வலியவரின் முன் தான் அஞ்சி நிற்கும் நிலைமையை நினைக்க வேண்டும்.*

## தொழிலாளர் நலன்கள் மேம்பட அனைவரும் கைகோர்ப்போம்!

உலக தொழிலாளர்கள் தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது. பாட்டாளிகளின் தொழில் பாதுகாப்பையும், அவர்களது உரிமைகளையும் வலியுறுத்தி வருடம் தோறும் மே மாதம் முதலாம் திகதி சர்வதேச தொழிலாளர் தினம் கொண்டாடப்படுகின்றது.

தொழிலாளர்களின் செயற்பாடுகள் இல்லாமல் இவ்வுலகினால் இயங்க முடியாது. உலக மக்களுக்கான பொருட்கள் மற்றும் சேவைகளான அத்தனை தேவைகளையும் தமது உடல் உழைப்பினால் பெற்றுக் கொடுப்பவர்கள் தொழிலாளர்கள் ஆவர். அவர்களது உழைப்பே செல்வந்த வர்க்கத்தினரை வாழ வைக்கின்றது. அது மாத்திரமன்றி, மக்கள் ஒவ்வொருவரின் அத்தியாவசிய தேவைகளையும் நிறைவேற்றி வைக்கின்றது.

தொழிலாளர்களின் உழைப்பின்றி எந்தவொரு நாட்டினதும் அரசாங்கமும் இயங்க முடியாது. எனவேதான் அனைத்து நாடுகளிலும் தொழிலாளர்களுக்கும், அவர்களது உழைப்புக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகின்றது. பாட்டாளி வர்க்கத்தை அனைவருமே போற்றுகின்றனர். அவர்களது உரிமைகளையும், தொழில் பாதுகாப்பையும் வலியுறுத்துகின்றனர்.

ஒவ்வொரு நாட்டிலும் அரசாங்கத் துறையிலும், தனியார் துறைகளிலும் ஏராளமான தொழிலாளர்கள் பணி புரிகின்றனர். அரசாங்கத் துறைகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு அவர்களது தொழிலுக்கான முழுமையான உத்தரவாதம் கிடைக்கின்றது. விடுமுறைகள், மருத்துவக் காப்புறுதி, இலவச பயணச் சீட்டு உட்பட பலவிதமான சலுகைகள் வரப்பிரசாதமாகக் கிடைக்கின்றன. அவர்களுக்கு பணி ஓய்வுக்குப் பின்னர் ஓய்வூதியக் கொடுப்பனவும் ஆயுள் வரை கிடைக்கின்றது.

ஆனால் தனியார் துறையில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் அநேகருக்கு இவை போன்ற சலுகைகள் கிடைப்பதில்லை. தொழிலில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் போது கையில் கிடைக்கின்ற கொடுப்பனவுகள் மாத்திரமே அவர்களது வாழ்வாதாரத்துக்கான உதவியாக உள்ளது. எனவேதான் தனியார் துறைகளில் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்வோரில் பலர் பிற்காலத்தில் வறுமையில் வாழ வேண்டியுள்ளது.

தனியார் துறையைப் பொறுத்தவரை இதுவொரு துன்பகரமான அனுபவமாகும். அது மாத்திரமன்றி, தனியார் துறைகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களில் ஏராளமானோர் உரிய வேதனம் மற்றும் தொழில் பாதுகாப்பு இன்றி அல்லல்படுவதை நாம் காண்கின்றோம். பணியில் இருந்து நீக்கப்படுகின்ற தொழிலாளர்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை முறையிட்டு உரிய தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியாத பரிதாப நிலையில் உள்ளதையும் காண முடிகின்றது.

இது தவிர, இலங்கையைப் பொறுத்த வரை ஊதியம் மற்றும் சலுகைகளில் அநீதியை எதிர்கொள்பவர்களில் தோட்டத் தொழிலாளர்கள் குறிப்பிட்டுக் கூறப்பட வேண்டியவர்களாவர். அவர்கள் முன்வைத்துள்ள ஆயிரம் ரூபா சம்பள உயர்வுக் கோரிக்கையானது முடிவின்றி பல வருடங்களாக இழுபறி நிலையில் இருந்து வருகின்றது. அத்தொழிலாளர்களில் பெருமளவானோர் இன்னும் அடிப்படை வசதிகளற்ற லயன் குடியிருப்புகளிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

வாழ்க்கையை நடத்துவதற்கான வருமானம் அவர்களுக்கு கிடைப்பதில்லை. வறிய நிலைமையிலேயே அவர்கள் வாழ்கின்றனர். அவர்களின் பிள்ளைகளுக்கு முழுமையான கல்வி வசதி கிடைப்பதில்லை. பெருந்தோட்டங்களில் தொழில் புரிகின்ற அவர்கள் போசாக்கு மட்டம் குறைந்தவர்களாகவே உள்ளனர். தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதென்பது நிறைவேற்றப்படாத நீண்ட காலக் கோரிக்கையாகும்.

தொழிலாளர்களின் உரிமைகளைப் பற்றிப் பேசுகின்ற போது, பெருநிறுவனங்களில் மாத்திரம் பணியாற்றுகின்ற தொழிலாளர்களை மாத்திரமே கருத்தில் கொள்வது முறையன்று. எந்தவிதமான தொழில் பாதுகாப்புமே இல்லாத நிலையில் அன்றாடம் கூலித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றவர்களும் தொழிலாளர்களேயாவர். அவர்களது உரிமைகள் பற்றி பொதுவெளியில் பேசப்படுவதில்லை.

கூலித் தொழிலாளர்களது உரிமைகளும் பேசப்பட வேண்டும். அவர்களுக்கான சலுகைத் திட்டங்களும் ஏற்படுத்தப்பட வேண்டும். அவர்களும் பாட்டாளி வர்க்கத்தினரேயாவர். பல்வேறு துறைகளிலும் இலட்சக்கணக்கான கூலித் தொழிலாளர்கள் இவ்விதம் தொழில் புரிந்து வருகின்றனர். இன்றைய தினத்தில் அவர்களது நலன்களுக்காகவும் நாம் அனைவரும் குரல் கொடுப்பது அவசியம்.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, உலகெங்கும் பரவியுள்ள கொரோனா பெருந்தொற்று காரணமாக கடந்த வருடத்தைப் போன்று இவ்வருடமும் தொழிலாளர்களால் மேதினத்தை கொண்டாட முடியாத துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது. கொவிட்19 தொற்று பரவுவதை கட்டுப்படுத்த வேண்டுமானால் சமூக இடைவெளியைப் பேண வேண்டியதே பிரதானமாகும்.

இவ்வாறான இக்கட்டானதொரு நிலையில், தொழிலாளர் தின ஊர்வலங்களையோ அல்லது பொதுக் கூட்டங்களையோ நடத்துவது புத்திசாலித்தனமானதல்ல. அவ்வாறு நடத்துவது கொரோனா தொற்றை தீவிரமாக அதிகரிக்கும் நிலைமைக்கே வழிகோலும். இலங்கைக்கு மட்டுமன்றி முழு உலகுக்குமே தற்போதைய நிலைமை நெருக்கடி நிறைந்ததென்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

தொழிலாளர் நலன் சிறக்கட்டும். அவர்களது உரிமைகள் உறுதிப்படுத்தப்படட்டும். அதற்காக என்றும் குரல் கொடுப்போம். இன்றைய வலியுறுத்தலாக அது அமையட்டும்!

editor.tkn@lakehouse.lk

# தொழிலாளர் உரிமைகளுக்காக அனைவரும் பேதங்கள் கடந்து குரல் கொடுக்க வேண்டும்

**இன்று மேதினம்**



முக்கிய நிகழ்வுகளை ஆண்டு தோறும் நினைவிலிருத்தி அதன் நோக்கங்களை அடையவதற்காக குறிப்பிட்ட ஒவ்வொரு தினங்கள் பெயரிடப்பட்டு உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. அவை சமய தினங்கள், சமூக தினங்கள் என்று பல வகைப்படுகின்றன. ஒவ்வொரு சமயத்தவருக்கும் ஒவ்வொரு குறிப்பிட்ட தினங்கள் முக்கியத்துவம் பெறுவதைப் போன்று சமயம் கடந்த, நாடுகள் கடந்த, இனங்கள் கடந்த பல தினங்களும் நடைமுறையில் உள்ளன.

அவ்வாறான ஒரு தினமாக ஆண்டுதோறும் மே மாதம் முதலாம் திகதி உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படும் தினமாக மேதினம் என்ற தொழிலாளர் தினம் அமைகின்றது. பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தொழிலாளர் வர்க்கத்தினரால் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தின்பிரதிபலனாக அவர்கள் பெற்றுக் கொண்ட உரிமைகளை உறுதிப்படுத்தி, வலுப்படுத்தும் ஒரு நாளாக இந்நாள் அமைகின்றது.

உழைக்கும் உழைப்பாளிகளுக்கும் உயரிடம் கொடுத்து, கௌரவித்து போற்றும் பண்பு ஆதிகாலம் முதல் இருந்து வருகின்றது. அது இன்றும் தொடர்கின்றது. உழைப்பாளர் தினத்தை மேலைநாட்டுத் தொழிலாளர்கள் போராடி வென்றனர். அதுவே மேதினம் (தொழிலாளர் தினம்) எனப்படுகின்றது.

இன,மத,மொழி பேதமற்ற முறையில் தொழிலாளர் வர்க்கம் ஒன்றுபட்டு தமது உரிமைகளை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும், அதற்காக குரல் கொடுக்க வேண்டும், முனைய வேண்டும் என்ற உன்னத நோக்கில் அதையே இலட்சியமாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் மேதினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

ஆனால், இன்று தொழிலாளர் நலனுக்காக, அவர்களது தொழில் உரிமையைப் பேணுவதற்காகவென்று இலட்சிய நோக்கோடு தொழிலாளர் தினமென்று பெயர் குறிப்பிடப்பட்ட இந்நாள், அதன் அடிப்படை நோக்கம் மறக்கப்பட்டு வெளிச்சக்திகளின் ஆளுகைக்கு உட்பட்டு அவர்களது நலன் நோக்கிய செயற்பாட்டில் பயணிப்பது தெளிவாகின்றது. உண்மையைக் கூறுவதானால் மேதினம் அதாவது தொழிலாளர் தினத்தின் நோக்கம் தடம் புரண்டு விட்டது. அதுவே உண்மை.

## தொழில் சட்டதிட்டங்களை உழைக்கும் வர்க்கத்தினர் அறிந்திருப்பது அவசியம்

நாட்டிலே பல்வேறு தொழில்துறைகள் உள்ளன. அவற்றின் செயற்பாடுகளும் பலவாகும். குறித்த தொழிற்துறையில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலன்களை பேணவும், அவர்களது முன்னேற்றம் கருதிச் செயற்படவும் அமைக்கப்பட்டவையே அந்தந்த துறைசார் தொழிற்சங்கங்கள்.

இலங்கையைப் பொறுத்தவரை அரசுத் துறை, தனியார் துறை, சுயதொழில் துறை என்று பல துறைகள் உள்ளன. அது போன்று மாதச் சம்பளம், நாட்சம்பளம், ஒப்பந்த அடிப்படையில் சம்பளம் என்று பல்வேறு வகைப்பட்ட ஊதியம் பெறும் தொழில்களும் உள்ளன. அவற்றுக்கான பிரச்சினைகள், தேவைகள் மாறுபட்டவை.

இவ்வாறுள்ள ஒவ்வொரு துறைக்கும் உரித்தானதொழிற் சட்டங்களும்நாட்டில் நடைமுறையிலுள்ளன. அனைத்து தொழிற்சட்டங்களும் நாட்டில் நடைமுறையிலுள்ளன. அனைத்து தொழிற்சங்கங்களும் தொழிலாளர் நலன் சார்ந்தவையாகவே உருவாக்கப்பட்டுள்ளன.

தொழிற் சங்கங்கள் தொழிற் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒரு தொழிலுக்கு ஒரு சங்கமென்று இல்லாமல் ஒன்றுக்கு பல தொழிற்சங்கங்கள் தொழிற் திணைக்களத்தில் பதிவாகியுள்ளமையைக் காணலாம்.

நடைமுறையிலுள்ள பதிவு செய்யப்பட்டுள்ள தொழிற் சங்கங்களை நோக்குமிடத்து அவற்றில் பெரும்பாலானவை நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் சார்ந்தவையாகவேயுள்ளன.

அரசியல் கட்சிகளுக்கு நிரந்தர வருமானம் ஈட்டித் தரும் துணை அமைப்புக்களாக தொழிற்சங்கங்கள் செயற்படுகின்றனவே அன்றி, தமது அங்கத்தவரின் தொழில்சார் நலன்களில் கருத்தூன்றிச் செயற்படுவனவாயில்லை என்பது கசக்கும் உண்மையாகும்.

ஒவ்வொரு தொழிற் துறைக்கும் உரித்தான சட்டங்கள் உள்ளன. அவை முறையாகச் செயற்படுத்தப்பட்டு முதலாளி, தொழிலாளி உறவைப் பேணி தொழிற்சங்க அமைதியைப் பேண வேண்டும் என்ற நோக்கத்தை விட, தான் சார்ந்த அரசியல் அமைப்புக்கு எப்படி இலாபம் சேர்க்கலாம் என்று சிந்திக்கும் பல தொழிற்சங்க தலைவர்கள் உள்ளனர். இது மறுக்க முடியாத, மறைக்க முடியாத உண்மை.

துறைசார் தொழிற்சங்க சட்டங்கள் பற்றி அறிவே அற்றவர்கள் தொழிற்சங்கங்களில் அங்கம் வகிக்கின்றமையும், குறித்த துறைக்கு எந்த விதத்திலும் தொடர்பில்லாதவர்கள் தொழிற்சங்கம் நடத்தவதும் நாம் கண்டுள்ள விநோதம்.

நம் நாட்டில் இன ரீதியாக, மொழி ரீதியாக, அரசியல் ரீதியாகப் பிணைக்கப்பட்ட தொழிலாளர்களும், தொழிற்சங்கங்களுமேயுள்ளன. தொழிற்சங்கங்கள் அரசியல் கட்சிகளின் அடிமைகளாகவே செயற்படுகின்றன. தொழிலாளர் நலனை விட தாம் சார்ந்த அரசியல் கட்சிகளின், அவற்றின் தலைவர்களின் நலனையே நோக்காகக் கொண்டு இயங்குகின்றன.

இலங்கையின் தொழிற்சங்க வரலாற்றை நோக்கும் போது படிப்படியாக கட்டுக்கோப்பாக இயங்கிய தொழிற்சங்கங்கள் சிதைந்து, சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளமையைத் தெளிவாக உணர முடிகின்றது.

மேதினம் என்ற தொழிலாளர் தினம் தொழிலாளர் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவே செயற்பட வேண்டும்.

ஒவ்வொரு தொழிலாளியும் தான் ஆற்றும் தொழிற்துறை சார்ந்த நாட்டில் நடைமுறையிலுள்ள தொழிற் சட்டங்கள் பற்றிய போதிய அறிவைப் பெற்றுக் கொள்வதுடன், அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கவாதிகளும் தொழிற்சங்கங்கள் தொடர்பில் பூரண அறிவைப் பெற்றிருப்பது அவசியமாகும். மேதினம் என்பது ஒரு நாள் நிகழ்வாக அமைந்து விடாது, தொழிலாளர் பயனடைய வழி காட்டும் நன்னாளாக அமைய வேண்டும்.



த.மனோகரன்...
(கைத்தொழில் நீதிமன்ற ஓய்வு பெற்ற பதிவாளர்)

# மானிடர்களை புனிதர்களாக்குவதற்கு அருளப்பட்ட புனித மாதமே றமழான்



நோன்பு என்பதன் அரபுப் பதம் றமழான். றமழான் என்பதன் பொருள் சுட்டெரித்தல் என்பதாகும். ஒவ்வொரு முஸ்லிமும், மூமினும் தெரிந்தும் தெரியாமலும் செய்த பாவங்கள் அனைத்தையும் எரித்து மானிடப் பிறவிகளை மனிதப் புனிதர்களாக ஆக்குவதற்கு எமக்கு அருளிய புனித மாதமே றமழான் மாதம்.

இதனை ஒவ்வொரு முஸ்லிமும், மூமினும் முறையாகப் பேணி முப்பது நோன்புகளையும் பிடிப்பது மட்டுமல்ல, அதன் ஒழுக்கம் பேணுவதும் ஒவ்வொருவரின் மீதுள்ள கடமையாகும். இதனை உதாசீனம் செய்து தான்தோன்றித்தனமாக நடந்தால், ஈருலகிலும் பாரிய நட்டத்தினை சந்திக்க வேண்டி ஏற்படலாம்.

புனித நோன்பு மாதத்தில் பாதியைக் கடத்தி விட்டோம். அடுத்த பாதியில் காலெடுத்து வைக்கும் போது அல்லாஹ்வும், ரஸூல்(ஸல்) அவர்களும் நமக்கு எடுத்தியம்பிய பிரகாரம் செயற்பட்டோமா? அல்லது வெறுமனே எமது விருப்பத்தின் பிரகாரம் செய்யற்பட்டோமா? என்பதை ஒரு கணம் நினைத்துப் பார்த்தல் சிறந்தது. முந்திய பாதியில் தவறிழைத்தோம் என்றால், அவற்றைச் சீர்செய்து கொண்டு பிந்திய பாதியில் செயற்பட்டாவது எமது பிழைகளை சரிசெய்து கொண்டு முன்னோக்கிப் பயணிப்பதே சாலச் சிறந்தது.

வல்லவன் அல்லாஹ் பிந்திய பத்தில் ஒருநாளை ஏற்பாடு செய்து வைத்துள்ளதாகவும், அத்தினத்தை பிந்திய பத்தில் ஒற்றையாக வரும் நாட்களில் வைத்துள்ளதாகவும், மக்களுக்கு அதை அடைந்து கொள்வதற்கு இலகு படுத்தியுள்ளதாகவும் சொல்லப்பட்டுள்ளது.

அது புனித லைலத்துல் கத்ர் என்னும் நாளாகும். இந்த நாள் ஆயிரம் மாதங்களை விடவும் சிறந்தது. இதனை அடைந்து அத்தினத்தில் அமல் செய்து சகல பாக்கியங்களையும் அடைந்து சுவன வாழ்வை அடைந்து கொள்ள வழிகாட்டியுள்ளான். இதனை சிந்தனைக்கு எடுத்து செயற்படுவது ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும்.

நோன்பு என்பது வெறும் விளையாட்டுக்குரிய மாதமல்ல. கடந்து போன வருடத்தில் தம்மால் தெரிந்தும் தெரியாமலும் செய்யப்பட்ட பாவங்களை களைந்து மனிதப் புனிதர்களாக மாறுவதற்குரிய மாதம், அருள் நிறைந்த மாதம், பாவ மான்னிப்புக்குரிய மாதம் என்றெல்லாம் பொருள் கூறப்படுகிறது.

சிலர் இதனை வெறுமனே பசித்திருத்தல், விழித்திருத்தல், விளையாடிக் களிப்பது என்றெல்லாம் வீணாக பொழுது போக்குகின்றனர். சிறப்பான மாதத்தின் புனிதத் தன்மை பேண தவறி விடுகின்றனர். பாவச் சுமையை மேலும் கூட்டிக் கொண்டு நட்டத்தைச் சம்பாதித்துக் கொள்வதையும் காணக் கூடியது கவலைக்குரியது.

நோன்பு மாதத்தில் வல்லவன் அல்லாஹ் அடியானின் அனைத்து பாவங்களையும் களைவதற்கு தகஜ்ஜத் தொழுகை, தராவிஹ் தொழுகையுடன் பல வணக்க வழிபாடுகளையும் மற்றும் குர்ஆன் பாராயணம், குர்ஆன் இறக்கப்பட்ட மாதம் ஆகிய தனிச் சிறப்பு வாய்ந்த அமல்களை எமக்குத் தந்துள்ளான். இம் மாதம் அனைத்துப் பிரார்த்தனைகளையும் அல்லாஹ் ஏற்று விடிவைத் தருகின்றான்.

உலகில் தாண்டவமாடும் பயங்கர நோயில் இருந்து பாதுகாப்பு பெறவும், சகல இன மக்களும் செழிப்பாக வாழவும், வளமான நாட்டுக்கும் பிரார்த்திப்போம், நடப்பவை அனைத்தும் நல்லதாகவும், நன்மையானதாக நடக்கட்டும் எனப் பிரார்த்திப்போம்.

ஏ.ஸீ.எம்.ஜிப்ரி...

# இந்திய மத்திய அரசு 14 மாதங்களாக என்னதான் செய்து கொண்டிருந்தது?




கொரோனா பரவலை தடுக்க கடந்த 14 மாதங்களாக இந்திய மத்திய அரசு என்னதான் செய்து கொண்டிருந்தது என சென்னை உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

கொரோனா சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் ரெம்டெசிவிர் மருந்து தட்டுப்பாடு, ஒக்சிஜன் பற்றாக்குறை தொடர்பாக உயர்நீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்தது. இந்த வழக்கு, தலைமை நீதிபதி சஞ்சிவ் பானர்ஜி மற்றும் நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது, மத்திய அரசு தரப்பில் ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் சங்கரநாராயணன், கொரோனா பரவலை தடுக்க எடுத்த நடவடிக்கைகளை பட்டியலிட்டார். அப்போது அவர், இரண்டாவது அலை என்பது எதிர்பாராதது எனக் குறிப்பிட்டார்.

அப்போது குறுக்கிட்ட தலைமை நீதிபதி, கடந்த 14 மாதங்களாக மத்திய அரசு என்ன செய்து கொண்டிருந்தது எனவும், இரண்டாவது அலை தீவிரமாகியுள்ள தற்போதைய நிலையில் நடவடிக்கைகளை துரிதப்படுத்தியது குறித்தும் கேள்வி எழுப்பினார்.

கொரோனாவை தடுக்க நிபுணர்கள் ஆலோசனைகளைப் பெற்று, திட்டமிட்டு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அறிவுறுத்திய நீதிபதிகள், கொரோனா பேரிடரின் போது, அவ்வப் போதைக்கு ஏற்றவாறு நடவடிக்கைகளை எடுக்க கூடாது எனவும் அறிவுறுத்தினர்.

# வறிய மக்களின் துயர் துடைக்க பாடுபட்ட முன்னாள் ஜனாதிபதி அமரர் பிரேமதாச

**முன்னாள் ஜனாதிபதி அமரர் ஆர்.பிரேமதாச நகரத்தில் இருந்து கிராம மட்டங்களுக்கு அரச பணிகளை முன்னெடுத்துச் சென்றவர். அவரது அன்றைய சேவைகள் இன்றும் நினைவு கூரப்படுகின்றன. வறிய மக்களுக்காக இறுதி வரை வாழ்ந்தவர் அவர். ஒவ்வொரு வருடமும் மக்கள் தத்தமது காணிகளில் 10 இலட்சம் மரக் கன்றுகள் நடும் திட்டத்தை அவர் அமுல்படுத்தினார்.**

மக்களுக்கான வீடுகளை நாடு முழுவதும் நிர்மாணிக்கும் போது அக்காணியில் மேலதிகமாக காணித் துண்டொன்றை வழங்கி அதில் வீட்டுத் தோட்டங்களை அமைக்க ஆலோசனை வழங்கி அதனை செயற்படுத்தியவர் அவர்.

வீடுகளில் முடங்கிக் கிடக்கும் இளைஞர், யுவதிகள் தாம் வாழும் பிரதேசத்தில் இருந்து கொண்டே வருமானம் ஈட்டுவதற்காக 200 ஆடைத் தொழிற்சாலைகளை கிராமங்களில் அவர் ஆரம்பித்து வைத்தார். மக்கள் தமது உற்பத்திப் பொருட்களை கிராமங்களில் இருந்தே விற்பனை செய்வதற்காக கம்உதாவ திட்டத்தின் கீழ் பொருளாதார விற்பனை நிலையங்களையும் ஆரம்பித்து வைத்தார்.

ஜனாதிபதியாகப் பதவி வகித்து வறிய மக்களின் மனங்களை வென்றவர் அவர். அமரர் ரணசிங்க பிரேமதாச 1924 ஜுன் மாதம் 23ஆம் திகதி பிறந்தார். அமரர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன இரண்டு முறை ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலத்தில் அமரர் பிரேமதாச பிரதமராக பதவி வகித்தார்.

39 வருடங்கள் அரசியல் வாழ்க்கையில் ஈடுபட்டு மக்களுக்காகப் பணி புரிந்தார். அவர் தமது 69வது வயதில் அதாவது 1993ஆம் ஆண்டு மே மாதம் 1ஆம் திகதி கொழும்பு, ஆமர் வீதியில் வைத்து மே தின ஊர்வலத்தின் போது புலிகளின் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார். அவர் மரணமடைந்து இன்றுடன் 28 வருடங்களாகின்றன.

முன்னாள் தொழிற்சங்கவாதியான காலம் சென்ற ஏ.ஈ.குணசிங்கவின் ஊடாகவே தமது அரசியல் வாழ்வை பிரேமதாசஆரம்பித்தார். அதன் பின்னர் 1960ஆம் ஆண்டு ஐ.தே.கட்சியில் இணைந்தார். கொழும்பு மாநகர சபை உறுப்பிராகவும், பிரதி மேயராகவும் அவர் பதவி வகித்துள்ளார். கொழும்பு மத்திய தொகுதியில் இருந்து அரசியலில் அவர் பிரவேசித்தார்.



அமரர் பிரேமதாச பிரதமராக பதவி வகித்த காலத்தில் நாடு முழுவதிலும் 10 இலட்சம் வீடமைப்புத் திட்டம், கம்உதாவ கிராம எழுச்சித் திட்டம் உட்பட பல திட்டங்களை முன்னெடுத்தார். மகாவலி அபிவிருத்தித் திட்டம், கிராமோதய திட்டம், சுதந்திர வர்த்தக வலயங்கள் போன்ற திட்டங்களையும் ஆரம்பித்தார். பாடசாலை மாணவர்களுக்கு மதிய

## இன்று 28 வது நினைவு தினம்

உணவுத் திட்டத்தையும் ஏற்படுத்தினார். சகல அமைச்சுக்களையும் திணைக்களங்களையும் கிராமங்களுக்கு மக்களின் காலடிக்குக் கொண்டு சென்றார்.

ஜனாதிபதி நடமாடும் சேவை ஊடாக மக்களது பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தார். நாடு முழுவதிலும் ஒரே நாளில் 25ஆயிரம் ஜனசவிய ஆசிரியர்களுக்கு நியமனங்களை வழங்கி வைத்தார்.

கொழும்பு வாழைத்தோட்டத்தில் உள்ள 'சுச்சரித்த' என்ற அவரது இல்லத்தில் அதிகாலை 4 மணிக்கே பொதுமக்கள் சந்திப்பினை ஏற்படுத்தி மக்களது பிரச்சினைகளைக் கேட்டறிந்து உடன் நிவாரணங்களைப் பெற்றுக் கொடுத்தார். அத்துடன் கொழும்பு மாவட்டத்தில் வீடற்ற மக்களுக்காக தொடர்மாடி வீடமைப்புத் திட்டங்களை ஏற்படுத்திக் கொடுத்தார்.

நாட்டில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்காக 'ஜனசவிய' எனும் உதவித் திட்டத்தினை உருவாக்கினார். ஏழை மக்களது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு பாடுபட்டார். நாடுகளில் பல இடங்களில் தொழில் பேட்டைகளை ஆரம்பித்தார். கிராமத்து இளைஞர், யுவதிகள் தொழில் வாய்ப்பை பெறுவதற்கு காரணகர்த்தாவாக இருந்தார்.

**ஏ.எஸ்...**

---

# மலையக தோட்டத் தொழிலாளரின் காணி உரிமையை வென்றெடுப்பதே மேதின கோரிக்கையாக அமையட்டும்!



**உலக தொழிலாளர்களின் ஒன்றுபட்ட குரலை ஒலிக்கச் செய்யும் 2021 ஆம் ஆண்டு மேதின நிகழ்வுகள் கொவிட்19 காரணமாக முடக்கத்திற்கு உள்ளாகியமை உழைக்கும் வர்கத்தினருக்கு இடையூறாக அமைந்துள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் மலையக மக்களின் 2021 ம் ஆண்டு மேதின குரலை சமூக ஊடகங்கள் வாயிலாகவும், ஏனைய தொழில்நுட்பங்களை பயன்படுத்தியும் முன்னெடுப்பது அவசியம்.**

தொழிலாளர் உரிமைக்கான போராட்டத்தில் மலையகத்தில் உயிர் நீத்த தியாகிகளை இன்றைய தினம் நினைவில் கொள்வோம். 200 வருட காலத்துக்கும் மேலாக தமது அடிப்படை உரிமைகளை இழந்து மலையக சமூகம் வாழ்ந்து வருகின்றது. கௌரவமான வாழ்க்கைக்கு அடிப்படை அம்சமாக உள்ள நில உரிமையை பெற்றுக் கொடுக்க இதுவரை முடியாமல் போயுள்ளது. ஆதலால் மலையக மக்களுக்கான நில உரிமையை வென்றெடுப்பது பிரதான கோரிக்கையாக அமைய வேண்டும்.

மலையக மக்களுக்கான நில உரிமையை உறுதி செய்து கொடுத்தல் மற்றும் அதனை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தியின் மூலமாக கட்டியெழுப்பப்படும் வாழ்வாதார மார்க்கங்களுக்கு ஒத்துழைப்பை பெற்றுக் கொடுப்பதன் மூலம் அந்த மக்களின் உரிமைகளை மட்டுமன்றி நாட்டின் பொருளாதார மற்றும் சுற்றாடல் பிரச்சினைகளுக்கான தீர்வை பெற்றுக் கொள்ள முடியும்.

இயற்கைக்கு எதிராக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை முறை இன்று பல்வேறு சுற்றாடல் மற்றும் சமூகப் பிரச்சினைகளை தோற்றுவிக்க காரணமாக அமைந்துள்ளது. இதனை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்த சந்தர்ப்பம் வழங்குவது என்பது நாட்டின் சுற்றாடல் கட்டமைப்பு மற்றும் காலநிலை என்பவற்றின் மீது பாதகமான தாக்கங்களை ஏற்படுத்த காரணமாக அமைவதோடு ஏனைய விவசாயக் கட்டமைப்புக்கள் மீதும் பாதிப்புக்களை எற்படுத்தும்.

இந்த நிலைமையில் நாம் தொழிலாளர் கோரிக்கைகள் மற்றும் போராட்டங்கள் என்பவற்றையும் தாண்டி முன்னோக்கிச் செல்ல வேண்டியுள்ளது. மாற்றுவழி முறையாக இலங்கையின் பயிர்ச்செய்கை மற்றும் பொருளாதாரத் துறையின் இதயமான பெருந்தோட்டப் பிரதேசங்கள் உட்பட மத்திய மலையகப் பிரதேசம் மற்றும் அங்கு அமைந்துள்ள இயற்கை வளங்கள், சுற்றாடல் கட்டமைப்புக்கள், நீர்ரேந்து பிரதேசங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி முறையை கடைப்பிடித்தல் மிகவும் அவசியமாகும்.

## பெண்களின் அவலங்களை ஆராய்ந்து தீர்வு காண தனியான அதிகார சபை அமைக்கப்பட வேண்டும்

இதனை பெற்றுக் கொள்ள பொருத்தமான நிர்வாக முறையை கட்டியெழுப்புதல் முக்கியமாகும். மலையக சமூகத்தின் காணி, வீடு, கல்வி, சுகாதாரம், உணவு, தொழில் பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி உட்பட வாழ்வாதார உரிமைகளை வென்றெடுப்பதற்காக அவர்களது பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகள் அவசியமாகும்.

மலையக சமூகத்தின் தீவிரமான காணி பிரச்சினைகளுக்கு தீர்வு காணல், காணிகளை தங்களது வீடமைப்பிற்கும் மற்றும் பல்லின பயிர்ச்செய்கைக்கும் பயன்படுத்துவதற்கான காணி உரித்துடைய சமூகமாக இவர்களை மாற்றுதல் மற்றும் கௌரவமான வாழ்வுக்கான உற்பத்தியின் மூலமாக நிலைபேறான வாழ்வாதாரத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பன அவசியம்.

மலையக சமூகத்தினது போதியளவு தனியான வீடு மற்றும் வாழ்வாதார அபிவிருத்தியினை உறுதிப்படுத்த, தோட்டத் தொழிலாளர் அல்லாத குடும்பங்கள் உள்ளடங்களாக ஒவ்வொரு குடியிருப்பாளருக்கும் தெளிவான காணி உரித்து உறுதிகளுடன் கூட்டு உரித்து அல்லது ஆண் பெண் இருபாலாருக்குமான சம உரிமையுடன் காணி வழங்க வேண்டும்.

பெருந்தோட்டக் கைத்தொழிலை இலாபமுடைய, சூழல் நேய, எதிர்கால நோக்காக கொண்ட தொழில் துறையாக மாற்றுவதற்கு பாரம்பரிய முறையிலான தற்போதைய பெருந்தோட்டக் கைத்தொழிலை தொழிலாளர்களுடைய சுய முகாமை கூட்டுப் பெருந்தோட்ட கம்பனிகளாக மாற்றியமைத்தல் வேண்டும். இதற்காக, தனிப்பயிரில் இருந்து பல்லின பயிர்ச் செய்கை அடிப்படையிலான சூழலியல் விவசாய முறைமைக்கு மாற்றியமைத்தல், நீரேந்து பிரதேசங்களை அடிப்படையாக கொண்ட ஒட்டுமொத்த ஒருங்கிணைந்த அபிவிருத்தியை முன்னெடுத்தல், ஒன்றிணைந்த பொருளாதார அணுகுமுறைகளின் அடிப்படையில் புதிய பொருளாதார அமைப்பை உருவாக்குதல் போன்றவையெல்லாம் அவசியம்.

உணவு மற்றும் பால் உற்பத்தியில் நாடு தன்னிறைவு பெறுவதற்காகவும், அதேநேரம் உணவு இறையாண்மையை உறுதிப்படுத்துவதற்காகவும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கூட்டுப் பொருளாதார செயற் திட்டங்களை முன்னெடுப்பதற்கான பொறுப்புக்களை பெருந்தோட்ட சமூகத்திற்கு கையளித்தல் வேண்டும்.

விவசாய திணைக்களம் மற்றும் ஏனைய தொடர்புடைய அரச நிறுவனங்கள் மூலமாக அவசியமான மானியங்கள் மற்றும் ஏனைய உள்ளீடுகள் (விதைகள், உரம்) வழங்கப்படல் முக்கியம்.

தேசிய வீடமைப்புக் கொள்கைகளில் மலையக சமூகமானது உள்ளடக்கப்படுவதுடன் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் பொருத்தமான வீடமைப்பினை மேற்கொள்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை உடனடியாக எடுத்தல் பிரதானம்.

1993ம் ஆண்டிலிருந்து ஊழியர் சேமலாப நிதியக் கடன், தோட்ட வீடமைப்பு கூட்டுறவு நிதி, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் ஏனைய நிதி உதவிகள் போன்ற வேறுபட்ட வீடமைப்புத் திட்டங்களினால் கட்டப்பட்ட 37000 வீடுகளுக்கும் பொருத்தமான ஆவணங்களுடன் தெளிவான உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படல் வேண்டும்.

மண்சரிவிற்கான அபாய வலயமாக அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகளில் வாழும் மலையக சமூகத்தினரை மீள்குடியேற்ற நடவடிக்கை எடுத்தல் பிரதானம். பெருந்தோட்ட தொழிலாளர்களின் நாளாந்த வேதனம் 1000.00 ரூபாவாக அதிகரிக்கப்பட்டதனால் பெருந்தோட்டக் கம்பனிகளால் தொழிலாளர்களின் மீது திணிக்கப்படும் தொழில் பலவந்தங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டு தொழில் சட்டங்களையும், தொழில் மரபுகளையும் உறுதிப்படுத்துதல்,கொவிட்19 பரவலின் காரணமாக உலக தேயிலை சந்தையின் கேள்வி அதிகரித்துள்ளதால் ஊக்க கொடுப்பனவு அடிப்படையில் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படல், மலையக அபிவிருத்தி அதிகார சபைக்கு தேவையானநிதி மற்றும் மூல வளங்களை பெற்றுக் கொடுத்து அதன் சேவையை மக்களுக்காக இலகுபடுத்துதல் போன்றவையெல்லாம் அவசியமாகும்.

பெருந்தோட்ட பெண்களின் அவலங்களை ஆராய்தல் மற்றும் கௌரவம், உரிமை, தொழிலில் நிர்வாக மட்டத்துக்கு பதவி உயர்வு மற்றும் எதிர்கால நோக்குநிலை வாய்ப்புக்களை வலுவாக வலியுறுத்தக் கூடிய வகையில் பெண்களின் தேவைகளுக்கான நிரந்தர அதிகாரசபையினை முன்மொழிதல் வேண்டும்.

இளைஞர்களின் வாழ்வை கௌரமாகவும், உற்பத்தியில் ஈடுபடக் கூடியவர்களாகவும் மாற்றும் வகையில் தொழிலாளர்களுக்கு உரித்துடைய கம்பனியின் பங்குதாரர்களாக இளைஞர்களை எவ்வாறு ஈடுபடுத்தலாம் என்ற முன்மொழிவுகளைவழங்குதல்பற்றி கவனம்செலுத்த வேண்டும்.

**மலையக மக்களின் காணி உரிமைக்கான இயக்கம்,**
**மஸ்கெலியா**

---

# கொரோனா தொற்று நிலவும் இவ்வேளையில் தொழிலாளர் உரிமைகளை நினைவு கூருவோம்!

**கொரோனா பெருந் தொற்றுப் பரவலின் காரணமாக எம்மால் வழமை போன்று தொழிலாளர் தினத்தைக் கொண்டாட முடியாத போதும், உளரீதியாக எம்மால் முழுமையாகக் கொண்டாட முடியும் என்பதில் ஐயமில்லை. எனவே, உலக தொழிலாளர் தினத்தைக் கொண்டாடுதல் என்பதை விடவும் நினைவு கூர்தல் என்ற பதம் சாலப் பொருந்தும் எனலாம்.**

அவரவர் தத்தமது இடத்திலிருந்து கொண்டு தம்மாலியன்ற சேவைகளை உலகுக்கு வழங்குவதன் மூலமே உலகம் இயங்குகின்றது; செழிப்புறுகின்றது. எனவே, உலக இயக்கத்திற்கு தொழிலாளர் அனைவரது சேவையும் தேவையாக உள்ளது.

தொழிலினதும், தொழிலாளர்களினதும் சிறப்பைப் பலரும் சிலாகித்துப் பேசியிருக்கின்றார்கள் என்பது தெளிவாகின்றது. இச் சந்தர்ப்பத்தில் உலக தொழிலாளர் தினம் கொண்டாடப் படுவதற்கான வரலாற்றுப் பின்னணி முக்கியம் பெறுகின்றது.

18, 19 ஆம் நூற்றாண்டுகளில் தொழிலாளர்கள் தினமும் 12 அல்லது 18 மணித்தியாலங்கள் பணியாற்றும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். அபிவிருத்தி அடைந்த நாடுகளிலேயே இந்நிலை தோன்றியது. அப்போது குறைந்த வேலை நேரம் கோரி தொழிலாளர்கள் போராட்டம் நடத்தினர். இப்போராட்டமே உலக தொழிலாளர் தினம் உருவாகக் காரணியாய் அமைந்தது.

இங்கிலாந்தில் உருவான சாசன இயக்கம் 10 மணிநேர வேலைக் கோரிக்கை உட்பட முக்கியமான 6 கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டம் நடத்தியது. 1806ம் ஆண்டு பிலடெல்பியா நகரத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். அவர்களின் தலைவர்களுக்கெதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது தொழிலாளர்கள் பத்தொன்பது, இருபது மணி நேரம் வேலை வாங்கப்பட்டார்கள் என்பது தெரியவந்தது.

பிலடெல்பியா நகர இயந்திரத் தொழிலாளர்களின் சங்கம்தான் உலகின் முதற் தொழிற்சங்கமாக கருதப்படுகிறது. 1834இல் நியூயோர்க்கில் ரொட்டி தொழிலாளர்கள் எகிப்திய அடிமைகளைக் காட்டிலும் அதிகம் துன்புற்றனர். தினமும் அவர்கள் பதினெட்டு, இருபது மணி நேரம் வேலை செய்ய வேண்டி இருந்தது.

பிரான்சில் 15 மணி நேரம் உழைத்து வந்த தொழிலாளர்கள் 1834 ஆம் ஆண்டு அதனை எதிர்த்துப் போராடினர். எனினும் அவர்களது 'ஜனநாயகம் அல்லது மரணம்' என்ற சுலோகத்தைக் கொண்ட இப்போராட்டம் வெற்றியளிக்கவில்லை. அவ்வாறே 1856 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவிலுள்ள 'மெல்போர்ன்' நகரில் கட்டடக் கலைஞர்கள் 8 மணி நேர வேலை கோரிப் போராடி அதில் வெற்றியும் பெற்றனர்.




1886 மே மாதம் 03 ஆம் திகதி மெக்கார்மிக் ஹார்வெஸ்டிங் மெசின் என்ற நிறுவனத்தின் வாயிலில் தொழிலாளர்கள் கண்டனக் கூட்டமொன்றை நடத்தினர். இதனால் கோபம் கொண்ட தேசியப் படையினர் தொழிலாளர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். அதில் 4 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர். இச்சம்பவத்தைக் கண்டிக்கும் வகையில் 'ஹே' சதுக்கத்தில் அமைதியான முறையில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது. அவ்வேளை தேசியப் படையினர் மீது குண்டு வீசப்பட்டது. குண்டு வீசியது யாரென்பது எவருக்கும் தெரியாத போதும், தொழிலாளர் இயக்கத்தை முன்னின்று நடத்திய 'அனார்கிஸ்ட்' என்ற அமைப்பைச் சேர்ந்த எட்டுப் பேர் மீது கொலை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கின் முடிவில் அல்பர்ட் பார்சன்ஸ், ஆகஸ்ட் ஸ்பைஸ், ஜோர்ஜ் ஏங்கல், அடொல்ஃப் பிட்சர் ஆகியோர் 1887 நவம்பர் மாதம் 11 ஆம் திகதி தூக்கிலிடப்பட்டனர். லூயிஸ் லிங்க் என்பவர் சிறையிலேயே தற்கொலை செய்து கொண்டார்.

1889 ஜுலை 14 ஆம் திகதி பாரிசில் சோசலிச தொழிலாளர்களின் சர்வதேச தொழிலாளர் பாராளுமன்றம் கூடியது. இக்கூட்டத்தில் கார்ல் மார்க்ஸ் வலியுறுத்திய 8 மணிநேர வேலைக் கோரிக்கையை முன்னெடுத்துச் செல்வதென்றும் 1890 மே 01 ஆம் திகதி உலகெங்கும் தொழிலாளர்கள் இயக்கங்களை நடத்திட வேண்டும் என்றும் அறைகூவல் விடுக்கப்பட்டது. இந்த அறைகூவலே இன்று வரை மே மாதம் 01 ஆம் திகதியை உலக தொழிலாளர் தினமாகக் கொண்டாட வழியமைத்தது எனலாம்.

1896 ஏப்ரலில் லெனின், ரஷ்யத் தொழிலாளர் களின் நிலைமை குறித்து விரிவாகப் பேசினார். மேற்படி தொழிலாளிகளின் 8 மணி நேர வேலைக்கான போராட்டங்களே ரஷ்யப் புரட்சிக்கு வித்திட்டன. அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள தொழிலாளர் இயக்கங்களை இணைத்து உருவாக்கப்பட்ட அமெரிக்கத் தொழிலாளர் கூட்டமைப்பே மே தினம் தோன்றக் காரணமாக இருந்தது.

தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் இலங்கையில் பல சட்டங்கள் காணப்படுகின்றன. 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டம், 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டம், 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டம், 1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க தொழிற் பிணக்குச் சட்டம், 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிலாளர் பணி முடிவுறுத்தற் சட்டம் என்பன முக்கியமான சில சட்டங்களாகும். ஒரு தொழிலாளி தனக்கு இழைக்கப்படும் தீங்கு தொடர்பில் முறைப்பாடு செய்வதற்கும், தீர்ப்பினைப் பெறுவதற்கும் தொழில் நியாய சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

எனவே, உலக தொழிலாளர் தினமாகிய இன்று தொழிலாளர்களின் உரிமைகளையும் உணர்வுகளையும் நாம் மதிப்பதோடு மட்டுமன்றி கொரோனாத் தொற்று பரவலினால் நிர்க்கதிக்குள்ளாகியிருக்கும் அவர்களுக்கு உதவிக் கரம் நீட்டி, நலிவடைந்த அவர்களது பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப நாம் முன்வர வேண்டும்.

*சட்டத்தரணி*
**Z.A.அஷ்ரஃப் (M.A) ...**
*சர்வதேச உறவுகள்,*
*கொழும்பு பல்கலைக்கழகம்*

## முன்னாள் IGP...

தெரிவித்துள்ளார். அவரது இறுதிச் சடங்குகள் இன்று பொரளை பொது மயானத்தில் நடைபெறும்.

இலங்கையின் 32 ஆவது பொலிஸ் மாஅதிபரான மஹிந்த பாலசூரிய 119 என்ற பொலிஸ் அவசரகால இலக்கத்தை அறிமுகப்படுத்துவதில் முன்னோடியாக இருந்தார்.

மஹிந்த பாலசூரிய, 1978 இல் பொலிஸ் சேவையில் இணைந்தார், 2010 மற்றும் 2011 க்கு இடையில் பொலிஸ் மாஅதிபராக கடமையாற்றினார்.

பிரேஸில் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்துக்கான இலங்கை தூதராகவும், 2014 ஆம் ஆண்டில் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் செயலாளராகவும் அவர் பணியாற்றியுள்ளார்.

## சுமந்திரன் பயணித்த...

தமக்கோ வாகனத்தில் பயணித்த ஏனையோருக்கோ எந்த பாதிப்பும் இல்லையென, பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார். விபத்தையடுத்து வேறொரு வாகனத்தின் மூலம் அவர் பயணத்தை தொடர்ந்துள்ளார். பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணியில் பங்கேற்றமைக்காக அவருக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கு விசாரணை, கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று நடைபெற்றது. இந்த வழக்கில் ஆஜராகும் நோக்குடன் அவர் செல்லும் வழியிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

## திருமணங்கள் உட்பட அனைத்து...

களை மேலும் அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்கிணங்க நேற்று முன்தினம் ஒரே நாளில் 23 ஆயிரத்து 700 பேருக்கு பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அந்த எண்ணிக்கையானது இதுவரை ஒரு நாளில் மேற்கொள்ளப்பட்ட அதிஉச்ச பிசிஆர் பரிசோதனையாகும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் இதுவரை 20 லட்சத்திற்கு அதிகமானவர்களுக்கு பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, என்ரிஜன் பரிசோதனை மூலமான நான்காயிரம் மாதிரிகள் ஸ்ரீ ஜயவர்தன பல்கலைக்கழகத்திற்கு கொரோனா பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை அடையாளம் காணப்படும் கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகளுக்கு தீவிர சிகிச்சை வழங்குவதற்காக ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக வைத்தியசாலை தயார் படுத்தப்பட்டுள்ளது. அங்கு தீவிர சிகிச்சைகளை மேற் கொள்ளும் வகையில் வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்துள்ளார்.அதனை பார்வையிடுவதற்காக அங்கு நேரில் சென்றுள்ள சுகாதார அமைச்சர்,தீவிர சிகிச்சைப் பிரிவை முன்னெடுத்துச் செல்வதற்காக தேவைப்படும் 30 டாக்டர்கள் 80 தாதிமார் மற்றும் 25 கனிஷ்ட பிரிவு உத்தியோகத்தர்கள் ஆகியோரை விரைவாக அந்த ஆஸ்பத்திரியில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப் போவதாக தெரிவித்தார். அது தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் சுகாதார சேவை பணிப்பாளருக்கும் அமைச்சர் உடனடி பணிப்புரை வழங்கியுள்ளார்.

ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் வைத்தியசாலையில் கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகளுக்காக மூன்று தீவிர சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் 24 தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டில்கள் மற்றும் 12 பாதுகாப்பான கட்டில்கள் உள்ளிட்ட அனைத்து உபகரணங்கள் வசதிகளையும் உடனடியாக பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.(ஸ)

## சஹ்ரான் குழுவுக்கு...

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக இச் சந்தேகநபர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு அங்குனுகொலபெலஸ்சவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவரிடம் மேற்கொள்ளப்பட்ட நீண்ட விசாரணையில் ஏராளமான தகவல்களை பெற்றுக்கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இவர் காத்தான்குடியைச் சேர்ந்த ராசிக் ராசா என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண மேலும் கூறியுள்ளதாவது, ‘பயங்கரவாதி சஹ்ரான் ஹாஷிமின் சகோதரர் மொஹமட் ரில்வான், கடந்த 2018 இல் வெடிக்கும் சாதனமொன்றை பரிசோதிக்க முயன்ற போது காயமடைந்தார்.

இந்த சம்பவம் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன்னர் நடைபெற்றுள்ளது.

மேலும் வெடிபொருட்களை யார் சோதனைக்கு கொண்டு வந்தார்கள், சோதனை எவ்வாறு மேற்கொள்ளப்பட்டது என்பது தொடர்பாக தெளிவாகத் தெரியவில்லை. இந்நிலையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் கல்முனையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் முகமது ரில்வான் உயிரிழந்தார். இச் சம்பவம் தொடர்பாக பயங்கரவாத புலனாய்வு பிரிவு நீண்ட விசாரணைகளை நடத்தியது. இந்த விசாரணையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் திட்டமிட்டவர்கள் யார்?, வெடிக்கும் சோதனைக்கான மூலப்பொருள் வழங்கியவர்கள் யார்? உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக பயங்கரவாத புலனாய்வு பிரிவு தொடர்ந்து விசாரணையை மேற்கொண்டு வருகின்றது.

இந்நிலையில் காந்தான்குடியில் வசிக்கும் 28 வயதான ராசிக் ராசா, ரில்வானுடைய பரிசோதனைக்கு உதவியதாக நீண்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

அவர் அங்குனகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளார்.

இருப்பினும், பயங்கரவாத பிரிவு, நீதிமன்றத்தில் முன்வைத்த கோரிக்கையின் அடிப்படையில், அவரை தடுத்து வைத்து விசாரிக்க அனுமதி வழங்கியுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன்னர் பயங்கரவாதிகள் எவ்வாறு திட்டமிட்டார்கள் என்பது பற்றி அவருக்கு நிறைய விடயங்கள் தெரியும் என்று சந்தேகிக்கப்படுகிறது.

எனவே அவரை பயங்கரவாத தடுப்புப்பிரினர் தொடர்ந்து தடுத்து வைத்து விரிவான விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

## ரிஷாத்துக்கு கேரள...

பகுதிக்குச் சென்று அங்கு சில மதத் தலைவர்களுடன் உறவை பேணியுள்ளதாக தெரியவந்துள்ளது.

அதேபோன்று வர்த்தக அமைச்சராகவிருந்த போது ரிஷாத் பதியுதீன் 2013ஆம் ஆண்டு சென்னைக்கு விஜயம் செய்தபோதும் கேரளாவில் தொடர்பை பேணியிருந்த சம்பந்தப்பட்ட தரப்பினரை சந்தித்துள்ளார்.

இந்த சம்பவம் குறித்து இந்திய புலனாய்வுத்துறையினரும் கேரள பொலிஸாரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். ரிஷாத் பதியுதீனின் தந்தை கேரளாவின் கசராகோட் பத்னாவைச் சேர்ந்தவராவார். இவர் அப்பகுதியில் உள்ள பலருடன் தொடர்பு கொண்டிருந்ததாக இந்திய புலனாய்வுத்துறை கண்டறிந்துள்ளது.

இதற்கிடையில், கேரளாவின் கசராகோட் பகுதியில் வசிக்கும் ஐந்து இளம் முஸ்லிம் குடும்பங்கள் அப்பகுதியை விட்டு வெளியேறி 2016ல் சிரியாவுக்கு தப்பிச் சென்றுள்ளன. இக்குடும்பத்தை சேர்ந்தவர்கள் ஐ.எஸ். அமைப்பில் சேர்ந்துள்ளதாக தெரிய வந்துள்ளதாகவும் அவர்களில் பலர் இலங்கைக்கு வந்து தேசிய தவ்ஹீத் ஜமாத் அமைப்பினர் உறுப்பினர்களை சந்தித்துள்ளதாகவும் இந்திய புலனாய்வுத்துறை கண்டறிந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## பாடசாலைகள் திறப்பதா?...

பாடசாலைகளை மீண்டும் திறக்கும் போது பிரதானமாக மாணவர்களின் பாதுகாப்பு விடயத்தில் கவனம் செலுத்த வேண்டியிருப்பதாக கல்வியமைச்சர் கூறினார். கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாடு முழுவதுமுள்ள பாடசாலைகள், முன்பள்ளி பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்கள் நேற்று வெள்ளிக்கிழமை வரை மூடுவதற்கு அரசாங்கம் கடந்த திங்கட்கிழமை தீர்மானித்திருந்தது.

## மக்கள் விரைவில் குணமடைய...

மீண்டும் பரவி ஒரு நிம்மதியற்ற வாழ்வை தோற்றுவித்துள்ளது. இதன் காரணமாக இம்முறை இ.தொ.காவின் மேதின நிகழ்வை கைவிடுவது என்று இ.தொ.கா முடிவு செய்ததையடுத்து இதற்காக செலவிடப்படும் தொகையை எமது மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக செலவிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என இ.தொ.கா பொதுச்செயலாளரும் தோட்டவீடமைப்பு மற்றும் சமூகஉட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தனது மேதினச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது. ,

மறைந்த தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமானின் 1,000 ரூபா சம்பள கோரிக்கையை, எமது இடைவிடாமுயற்சியின் பின் சம்பள நிர்ணயசபைக்கூடாக பெற்றுக்கொடுத்துள்ளோம். இந்தநாட்டு மக்கள் தொற்றுநோயால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற்றுவரும் நிலையில் அவர்கள் மிகவிரைவில் குணமடைந்து இயல்பு வாழ்க்கைக்கு திரும்பிவர எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம். இதேவேளை, மக்கள் அனைவரும் சுகாதார விதிமுறைகளை சரியாக கடைப்பிடித்து கொவிட்19 தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுமாறு மீண்டும் வலியுறுத்துகின்றோம். எமது மக்களின் நலனில் அக்கறையுடனும்,அர்ப்பணிப்புடனும் இ.தொ.கா என்றும் கவனம் செலுத்தும் என்பதை அறியத்தருவதோடு, வீட்டிலிருந்தவாறு சகலரும் இந்த நோயினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக பிரார்த்தனையில் ஈடுபடுமாறு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தனது மேதினச்செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார்.

## உழைக்கும் சமூகத்தின்...

தேவையான கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போதைய கோவிட் 19 நோய்த் தொற்றினால் உலகில் மிகவும் சவாலுக்குள்ளாகியுள்ள பிரிவினர் தொழிலாளர் வர்க்கமாகும். எமது நாட்டின் உழைக்கும் மக்களும் முகம்கொடுத்திருக்கும் அந்த யதார்த்தத்தை அரசாங்கம் நன்கறிந்திருக்கிறது. எனவே, உழைக்கும் மக்களின் இயல்பு வாழ்க்கையை பாதிக்கக் கூடிய கட்டுப்பாடுகளை விதிக்காமல் அவர்கள் தமது இயல்பு வாழ்க்கையை பேணுவதற்கு ஏற்ற வகையில் அரசாங்கம் தொடர்ந்தும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

கல்வித் தகைமைகள் இல்லாத காரணத்தினால் நிர்க்கதியான நிலையிலிருந்த ஒரு இலட்சம் தொழிலாளர்களுக்கு அரச சேவையில் தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்ததன் மூலம் மிக உயர்ந்த பயனை அனுபவிக்கும் வாய்ப்பு உழைக்கும் மக்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் கிடைத்துள்ளது. கோவிட்19 தொற்றுநோயினால் பாதிக்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 05 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு அளித்து உழைக்கும் மக்களின் போராட்டத்திற்கு அரசாங்கம் ஆதரவு அளித்தது.

கோவிட்19 தொற்றுநோய் காரணமாக எதிர்பாராத விதமாக தொடர்ந்து இரண்டாவது வருடமாகவும் மேதின கொண்டாட்டங்களையும் ஊர்வலங்களையும் தொழிலாளர்கள் இழந்துள்ளனர். ஆயினும்கூட, உங்கள் உறுதிப்பாடு, அர்ப்பணிப்பு மற்றும் போராட்டம் வலுவானது என்பதை நாங்கள் அறிவோம்.

மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரத்திற்கான திட்டத்துடன் கைகோர்க்கும் உங்களுக்கு சர்வதேச தொழிலாளர் உரிமைகளை பாதுகாத்த, அர்த்தப்படுத்திய மகிழ்ச்சியுடன் எனது சர்வதேச தொழிலாளர் தின வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

எமது நாட்டின் உழைக்கும் மக்கள் வெற்றிபெற வாழ்த்துக்கள் என்றும் ஜனாதிபதி தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## புதிய வைரஸுடன் போராட...

விசேட வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாம் இருமும் போது அல்லது தும்மும் போது எமது எச்சின் துளிகள் அருகில் உள்ள நபர்கள் மீது தெளிக்கக் கூடும். அதேபோன்று சுவாசத்தின் ஊடாகவும் இந்த வைரஸ் பரக் கூடியதாகவுள்ளது. இந்த இரண்டு காரணிகளின் மூலமே தொற்றானது அதிகமானவர்களுக்கு பரவக் கூடும்.

மிகவும் நெருக்கமாக இருப்பவர்களுக்கு தொற்று பரவுவது அதிகமாகும். ஒரு மீற்றர் சமூக இடைவெளிக்கு பதிலாக இரண்டு மீற்றர் சமூக இடைவெளியை இனிவரும் காலங்களில் பேணுவதன் ஊடாக தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியும். புதிய வைரஸானது மிகவும் வேகமாக பரவக் கூடியதாகவும் அருகில் உள்ளவர்களுக்கு இலகுவாக தொற்றக் கூடியதுமாகவுள்ளது.

இந்த வைரஸ் தொற்றிலிருந்து எம்மை பாதுகாத்துக்கொள்ள வேண்டுமாயின் சுகாதார வழிகாட்டல்களை இறுக்கமாக கடைப்பிடிக்க வேண்டும். இல்லாவிடின் இதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருது கடினமாகும். இரண்டு மீற்றர் சமூக இடைவெளியின் ஊடாக வைரஸை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் என்பதால் இந்த இடைவெளியை அனைவரும் பின்பற்ற வேண்டுமென்றார்.

## கல்முனை நீதிமன்றால்...

அழைப்பாணைகளை பெற்றிருக்கின்றார்கள். நீதவான் நீதிமன்றத்திற்கு இந்த விடயத்தை விசாரிப்பதற்கான எந்தவிதமான நியாயாதிக்கங்களும் கிடையாது.

ஆகையினாலே அழைப்பாணையை பெற்ற சட்ட மாணவர் ஒருவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஒரு மேன்முறையீட்டு மனுவை தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவை நான் ஆதரித்து இருந்தேன். இதன் காராணமாக கல்முனை நீதிவான் நீதிமன்ற நடவடிக்கைகளை இடை நிறுத்துமாறு ஒரு கட்டளை கொடுக்கப்பட்டது.

இக்கட்டளை, பிரதிவாதிகளை கேட்காமல் கொடுக்கப்பட்ட கட்டளை என்பதனால் மே மாதம் 18 ஆம் திகதி வரை அமுலிலிருக்கும் . அதன் பின் பிரதிவாதிகள் சமுகமளித்ததன் பின் இந்த வழக்கை முன்னெடுப்பதா? இல்லையா? என்பது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படும். இந்த நிலையிலேயே அந்த தடையுத்தரவு மேன்முறையீட்டு நீதிமன்ற பதிவாளர் மூலம் கல்முனை நீதவான் நீதிமன்ற பதிவாளருக்கு நேற்றுக் காலை தொலைநகல் மூலம் அனுப்பப்பட்டுள்ளதென தெரிவித்துள்ளார்.

இவ் வழக்கில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களான கோ.கருணாகரம், இரா.சாணாக்கியன், த.கலையரசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன், அ.நிதான்சன், துணைச்செயலாளர் இலங்கை தமிழ் அரசுக் கட்சி வாலிப முன்னணி, செ.கணேஷ் தமிழ் மாணவர் மீட்பு அணித் தலைவரும், இலங்கை தமிழரசுக்கட்சியின் உறுப்பினரும் ஆகிய ஏழுபேருக்கு எதிராக கல்முனை பொலிசார் வழக்கு தாக்கல் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்க்கது.

## தடுப்புக் காவலிலுள்ள...

03ஆம் பக்கத் தொடர்

உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் சிஐடியின் இந்த சிறப்புக் குழு தீவிரமாக விசாரித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனைவிட, ரிஷாத் பதியுதீனின் சகோதரரான ரியாஜ் பதியுதீனிடம், இன்ஷாப் அஹமட் எனும் தற்கொலைதாரிக்கு எடுக்கப்பட்ட 07 தொலைபேசி அழைப்புகள் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக தெரிய வருகிறது.

## அரச ஊழியர்கள்...

03ஆம் பக்கத் தொடர்

கடமைக்கு சமுகமளிக்காதிருக்கும் வகையிலும் வாரத்திற்கு மூன்று தினங்களுக்கு மேல் சேவைக்கு அழைக்கப்படுவார் களானால் அது தொடர்பில் நிறுவனத்தின் தலைவர் தீர்மானிக்க வேண்டுமென்றும் மேற்படி சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ)

## இந்தியாவிடமிருந்து...

03ஆம் பக்கத் தொடர்

ஏற்பட்டுள்ள சூழ்நிலையால் அவர்களுக்கு தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது.

முதல் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொடுத்தவர்களுக்கு வேறு ஒரு தடுப்பூசியை பெற்றுக்கொடுப்பது தொடர்பிலான ஆய்வுகள் உலகளாவிய ரீதியில் நடைபெற்று வருகின்றன. இந்தஆய்வுகளில் சாதகத் தன்மை ஏற்பட்டு அந்த தடுப்பூசியை எமது நாட்டுக்குப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்தால் இரண்டாவது தடுப்பூசியாக அதனை வழங்க முடியும். அவ்வாறு முடியாவிடின் முதல் தடுப்பூசியை மறந்துவிட்டு வேறு இரண்டு தடுப்பூசிகளைதான் வழங்க முடியும்.

தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்தில் இரண்டு தடுப்பூசிகளை வழங்க முடியாத சூழலில் முடிந்தளவு முதல் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொடுக்குமாறும் அது மிகவும் சாதகத்தன்மையை ஏற்படுத்தக் கூடிய சூழல் உள்ளதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் கூறியுள்ளது என்றார்.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் கொவிசீல்ட் தடுப்பூசிகளை ஏனைய நாடுகளுக்கு வழங்கும் பணி எதிர்வரும் ஜுலை மாதம்வரை தாமதமாகலாமென ‘தி இந்து’ பத்திரிகை நேற்று வெள்ளிக்கிழமை செய்தி வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத் தக்கது.

## உழைப்பவர் உரிமைகள்...

03ஆம் பக்கத் தொடர்

அழிவு யுத்தமாக திசை மாறிச்சென்ற நிலையில், நாமும் அடுத்தவர்கள் போல் ஆற்றோடு அள்ளுண்டு போகாமல் எதிர் நீச்சலிட்டு, தீர்க்க தரிசனமாக எமது இலட்சிய பயணத்தின் பாதையை மாற்றியிருந்தோம்.

உழைக்கும் மக்களே!,..ஒடுக்கப்படுகின்ற தேசங்களின் மக்களே!!

ஒன்று படுங்கள்,.. இதுவே உலகத்தொழிலாளர் தினத்தின் உரிமைக் குரல்! அதை நிஜமாக்க,..இன்றுள்ள உலக, உள்நாட்டு ஜதார்த்த அரசியல் நிலைமைகளை உணர்ந்து தமிழ் தேசிய இனத்தின் நிரந்தர அரசியல் உரிமைகளை வென்றெடுக்க மாகாண சபைகளுக்கான அதிகாரப்பகிர்வில் இருந்து தொடங்கி இறுதி இலக்கு நோக்கி முன்னோக்கி செல்வோம்!..

எமது நிலத்தில், மக்கள் எமக்கு வழங்கும் அரசியல் பலத்தில்

எமக்கு கிடைக்கும் அரசியல் அதிகாரங்களை பயன்படுத்தி

உழைக்கும் மக்களின் உரிமைகளை வென்று அவர்களது வாழ்வில்

நிரந்தர ஒளியேற்றுவோம். தேசிய நல்லிணக்க

கதவுகளை மூடி விட்டு எழுப்பும் போலி உரிமை குரல்களால்

எந்த கோட்டையின் கதவுகளும் திறக்காது. இதுவே தமிழர் தேசத்தி அனுபவம். தீராப்பிணிகள் என்று எவையுமில்லை. நம்பிக்கையுடன் கொடிய நோய் பிணிகளை கடந்து செல்வோம். உழைக்கும் மக்களின் உரிமைகள் வெல்லட்டும்! தமிழர் தேசம் தலை நிமிரட்டும்!!’ என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரசாயன உரப் பயன்பாட்டை...

03ஆம் பக்கத் தொடர்

என்று விவசாயிகள் நினைக்கலாம். அப்படியானால், இரசாயன உர மானியத்திற்காக ஆண்டுதோறும் செலவிடப்படும் 50 பில்லியன் ரூபாயிலிருந்து குறைவடையும் வருமானம் ஈடு செய்யப்படும் என்று ஜனாதிபதி உறுதியளித்தார்.

திட்டத்தை செயல்படுத்த முறையான பயிற்சி மற்றும் சரியான ஆய்வுடன் ஒரு பிரிவினர் தேவை. நாடு மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய உணர்வும் முக்கியமானதாகும். இந்தத் திட்டத்தைப் பற்றி விரும்பாதவர்கள் அல்லது வேறு வகையாக சிந்திப்பவர்கள் ஆரம்பத்திலேயே நீங்கிக் கொள்வதற்கு தடையில்லை என்றும் ஜனாதிபதி கூறினார். சவாலை வெற்றிகொள்ள தான் தனிப்பட்ட முறையில் விவசாய சமூகத்திடம் செல்வதற்கு தயாராக இருப்பதாக ஜனாதிபதி கூறினார்.

மாவட்ட மட்டத்தில் சேதன உர உற்பத்தியை ஊக்குவிக்க உற்பத்தியாளர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் வழங்க அரசாங்கம் நேரடியாக தலையிடும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

விவசாயத்தில் ஈடுபடும் பலருக்கு இது ஒரு முக்கியமான விடயமாக இருப்பதால் எதிர்ப்புக்கள் வரலாம். சமயத் தலைவர்கள், விவசாய அமைப்புகள், தொழில் வல்லுநர்கள், ஆராய்ச்சியாளர்கள், அரச அதிகாரிகள், ஊடக ஆதரவு மற்றும் அனைத்து தரப்பினரும் பங்கேற்பதன் மூலம் இலக்கை எளிதில் அடைய முடியும் என்று பொருளாதார புத்தெழுச்சிக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பெசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு வசதியான வகையில் சேதன உர சந்தையை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியத்தையும் பெசில் ராஜபக்ஷ சுட்டிக் காட்டினார்.

பாராளுமன்ற உறுப்பினர் வண. அதுரலிய ரத்ன தேரர், கலாநிதி வண. கிரிந்தே அஸ்ஸஜி தேரர், அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, இராஜாங்க அமைச்சர்களான டீ.பீ ஹேரத், அஜித் நிவார்ட் கப்ரால், எஸ். வியாழேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் மஞ்சுளா திஸாநாயக்க, அனுப பாஸ்குவல், ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர ஆகியோருடன் அரச அதிகாரிகள், ஆராய்ச்சியாளர்கள், சேதன உர உற்பத்தியாளர்கள் மற்றும் விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## ஹரின் எம்.பி. ஜூலை...

சட்ட மாஅதிபர் தப்புல டி லிவேரா நேற்று உயர்நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார். ஹரின் பெர்னாண்டோவின் கைது தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் அவர் எதிர்வரும் ஜூலை 14ஆம் திகதி வரை கைது

செய்யப்பட மாட்டாரென்ற தகவலை சட்ட மாஅதிபர் நேற்று உயர்நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின் பேரில் தம்மை கைது செய்ய வேண்டாமெனக் கோரி பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மனு மீதான விசாரணை நேற்றையதினம் உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே சட்ட மாஅதிபர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின் பேரில் கைது செய்யப்படப்போவதாக பாராளுமன்றத்திலும் வெளியிலும் எதிர்க்கட்சியினர் பல்வேறு கருத்துக்களை தெரிவித்துவரும் நிலையில் நேற்றைய தினம் சட்ட மாஅதிபர் உச்சநீதிமன்றத்திற்கு இந்த தகவலை வழங்கியுள்ளார்.

(ஸ)

## பொருளாதாரத்தை கட்டியெழுப்ப...

அந்தச் செய்தியில் பிரதமர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

சர்வ தேச தொழிலாளர் தினமான இன் றைய தினத்தில் உழைக்கும் அனைத்து மக்களுக்கும் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். தொழிலாளர் உரிமைகளை வென்றெடுக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச தொழிலாளர் தினம் உழைக்கும் மக்களின் தலைசிறந்த தினமாகும்.

பொதுவாக தமது நாட்டிற்காக மட்டுமின்றி, ஒட்டுமொத்த உலகினதும் முன்னேற்றத்திற்காக உழைக்கும் மக்களின் அர்ப்பணிப்பு மிகவும் பாராட்டத்தக்கது.

பணியிடத்தில் வியர்வை சிந்தி அனைவரினதும் நல்வாழ்வுக்காக நீங்கள் ஆற்றும் சேவையை பாராட்டுவதற்கான ஒரு வாய்ப்பாக இந்த சந்தர்ப்பத்தை நான் பயன்படுத்திக் கொள்கிறேன். உலகளாவிய ரீதியில் பரவிவரும் கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக கடந்த ஆண்டு போன்றே இவ்வருடமும் பேரணிகள், கூட்டங்களின்றி சர்வதேச தொழிலாளர் தினத்தை கொண்டாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எவ்வாறான இக்கட்டான சூழ்நிலைக்கு மத்தியிலேனும் உழைக்கும் மக்களுக்கான உரிய மரியாதையை எமது அரசாங்கங்கள் வழங்கியுள்ளதென்பதை இத்தருணத்தில் நினைவூட்டுகின்றேன். அத்துடன் தொழிலாளர் உரிமைகளை பாதுகாப்பதிலும் உறுதியாக செயற்பட்டோம்.

2021 ஆம் ஆண்டுக்காக முன்வைக்கப்பட்ட வரவு செலவு திட்டத்தில், தோட்டத் தொழிலாளர்களுக்கு வாக்குறுதியளித்தபடி 1,000 ரூபாய் நாளாந்த சம்பளத்தை பெற்றுக் கொடுக்க முடிந்தமை நாம் பெற்ற வெற்றியாகும்.

அத்துடன் தொழிலாளர் சமூகத்தின் நலனை கருத்திற்கொண்டு ஊழியர் சேமலாப நிதி சட்டம், தொழில் பிணக்குகள் சட்டம் மற்றும் இழப்பீட்டு கட்டளை சட்டம் போன்ற பல தொழிலாளர் சட்டங்களை புதுப்பித்ததன் ஊடாக தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு எமது அரசாங்கத்திற்கு முடிந்துள்ளமை உங்களுக்கான மரியாதை என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

கொவிட்19 தொற்றுக்கு மத்தியில் சமூக பொருளாதார மேம்பாட்டுக்காக இரவு, பகலாக உழைக்கும் உங்களது அர்ப்பணிப்பையும், தொற்று நிலைமையை கட்டுப்படுத்துவதற்கான உங்களது பங்களிப்பையும் நான் மனதார பாராட்டுகின்றேன்.

உலகவாழ் உழைக்கும் மக்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள் என்றும் பிரதமர் மஹிந்த ரஜபக்ஷ தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## அமரர் ரணசிங்க பிரேமதாசவின்...

என்றென்றும் போற்றப்பட வேண்டியவை.

1924ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி பிறந்த ரணசிங்க பிரேமாச தொழில் கட்சியிலிருந்து அரசியலுக்கு பிரவேசித்து கொழும்பு மாநகர சபை உறுப்பினராகத் தெரிவாகி, பிரதி மேயராகவும் பதவி வகித்தார்.

மக்கள் சேவையை அர்ப்பணிப்புடன் செய்த அன்னார் 1965ஆம் ஆண்டு முதன்முறையாக பாராளுமன்றத்திற்கு தெரிவாகியிருந்தார். அன்று முதல் உள்ளூராட்சி அமைச்சராகவும், பிரதமராகவும் பதவிவகித்த ரணசிங்க பிரேமதாச, இலங்கையின் இரண்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அரியணையில் அமரும் வரையான பயணம் அவ்வளவு இலகுவானதாக அமையவில்லை.

பிரதமராக இருந்த போது ”அனைவருக்கும் நிழல்” எனும் திட்டத்தை ஆரம்பித்த பிரேமதாச, ஜனாதிபதியாக பதவியேற்றவுடன் இந்திய அமைதி காக்கும் படையினரை திருப்பி அனுப்பும் அளவிற்கு துணிச்சல் மிக்கவரானார். அவரின் இந்த நடவடிக்கை மக்கள் மத்தியில் பாராட்டு தலைப் பெற்றது.

கம் உதாவ, உதாகல கம்மான ஆகிய முன்மாதிரி வீடமைப்புத் திட்டங்கள் ஊடாக 2000ஆம் ஆண்டில் அனைவருக்கும் குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதே அவரின் முக்கிய இலக்காக இருந்தது.

கிராமிய அபிவிருத்தி தொடர்பில் கனவு கண்ட ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச 100 ஆடை உற்பத்தி தொழிற்சாலை திட்டத்தை ஆரம்பித்து அதனை 2000ஆக விஸ்தரிக்க நடவடிக்கை எடுத்தார்.

இந்த நடவடிக்கையால் ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளுக்கு தொழில்கள் கிட்டின. அந்த காலப்பகுதியில் ஏற்றுமதி வருமானம் சடுதியாக அதிகரித்ததுடன், பங்குச் சந்தையும் வரலாறு காணாத முன்னேற்றம் அடைந்தது.

வறிய மக்களுக்காக ஜன சவிய திட்டத்தை அறிமுகப்படுத்திய ரணசிங்க பிரேமதாச, எதிர்கால சந்ததியினரின் பாதுகாப்பிற்காகவும் பல திட்டங்களை அறிமுகப்படுத்திய பெருமையையும் தன்னகத்தே கொண்டிருந்தார்.

1993ஆம் ஆண்டு மே தின பேரணியின் போது சற்றும் எதிர்பாராத தருணத்தில் ரணசிங்க பிரேமதாச இவ்வுலகிற்கு விடை கொடுத்திருந்தார். மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவை நினைவுகூரும் வகையில், விசேட நிகழ்வுகள் ஒழுங்குச் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# மூடப்பட்டுள்ள தேயிலை தொழிற்சாலைகளை, கொவிட் 19 சிகிச்சை நிலையங்களாக பயன்படுத்த யோசனை



**பதுளை தினகரன் விசேட நிருபர்**

பதுளை மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள பெருந்தோட்ட தேயிலைத் தொழிற்சாலைகளை, கொவிட் 19 தனிமைப்படுத்தல் சிகிச்சை நிலையங்களாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்குமாறு பதுளை மாவட்ட விவசாயிகள் அமைப்பின் ஆலோசகர் ஜயந்த கன்னங்கர ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு அனுப்பியுள்ள அவசரக் கடிதமொன்றிலேயே, மேற்படி வேண்டுகோளை அவர் விடுத்துள்ளார். தொடர்ந்து அக் கடிதத்தில், பதுளை மாவட்ட பெருந்தோட்டப் பகுதிகளில் தற்போதைய நிலையில் 24 தேயிலைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன.

இத் தொழிற்சாலைகள் கைவிடப்பட்ட நிலையில், எவ்வித பிரயோசனமும் இன்றி இருந்து வருகின்றன. நான்கு மாடிகளைக் கொண்டுள்ள இத்தகைய தொழிற்சாலைகளில் பாதை வசதிகள், உட்கட்டமைப்பு வசதிகள் யாவும் இருந்து வருகின்றன. எனவே இத் தொழிற்சாலைகளை கொவிட் 19 சிகிச்சை நிலையங்களாகவும், தனிமைப்படுத்தல் நிலையங்களாகவும் மாற்றியமைக்கலாம். தற்போதைய நிலையில் கொவிட் 19 சிகிச்சை நிலையங்கள், தனிமைப்படுத்தல் நிலையங்கள் என்பவற்றுக்கு கட்டட வசதிகள் இல்லாது உள்ளது. ஆகவே, வெறுமனே, அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் இருந்து வரும் தொழிற்சாலைகளை இதற்காக பயன்படுத்தலாம். ஜனாதிபதி இது தொடர்பில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கொரோனாவுக்கு மத்தியில் ரிவஸ்டனில் உல்லாச பயணிகள்



நாட்டில் கொரோனா அச்சுறுத்தல் தலைதூக்கியுள்ள நிலையில், கடந்த வார இறுதியில் நீண்ட விடுமுறையை கழிப்பதற்காக, பெருமளவான உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் மாத்தளை ரிவஸ்டன் பிட்டவல பிரதேசத்துக்கு வருகைத் தந்திருந்தனர்.

கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களிலிருந்தே அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகைத் தந்திருந்ததுடன், இவர்களுள் பெரும்பாலானவர்கள், கொரோனா சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## பெருந்தோட்ட தொழிலாளர்களின் நலன்புரி திட்டங்களை இ.தொ.கா பெற்றுக்கொடுக்கும்

### மே தின வாழ்த்து செய்தியில் செந்தில் தொண்டமான்

உழைப்போரின் உன்னதத் திருநாளாம் மே தினத்தை உலகெங்கும் கொண்டாடிக் கொண்டிருக்கும் தொழிலாளர்கள் அனைவருக்கும் மே தின நல்வாழ்த்துக்கள் என இ.தொ.கா வின் உப தலைவரும், பெருந்தோட்டங்களுக்கான பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமான் "மே" தின வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

தொழிலாளர்களின் உழைப்பே உலகத்தின் மூலதனம் என்ற உண்மையை, பாட்டாளி வர்க்கம் இரத்தம் சிந்திப் பிரகடனம் செய்த நாள்தான் மே முதல் நாள் திகதி.

அதிகாலை முதல் அந்தி சாயும் வரை வேலை செய்ய வேண்டும் என்பதை எதிர்த்தும், எட்டு மணி நேர வேலையை வலியுறுத்தியும் எழுந்த போராட்டத்தின் வெற்றி தினமே மே தினம்! இ தொ கா பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1000 ரூபாய் அடிப்படை சம்பளத்தை பெற்று கொடுத்தது போல அவர்களின் நலன்புரி விடயங்களையும் பெற்றுத்தரும் என தனது மே தின வாழ்த்து செய்தியில் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

உழைப்புக்கேற்ற ஊதியமின்மை, கொத்தடிமைத் தனமான இன்னல்கள் ஆகியவற்றில் இருந்து தொழிலாளர்களுக்கு விடுதலை கிடைத்த இந்த மே தினத்தில் சிறுவர் தொழிலாளர் முறையை ஒழித்து, உழைப்பவரை உயர்த்துவோம் என்ற உறுதியை மேற்கொண்டுள்ளோம். தினக்கூலி அடிப்படையில் பணிபுரிபவர்கள், ஒப்பந்தத் தொழிலாளர்கள் உட்பட அனைத்து உழைக்கும் வர்க்கத்தினரும் தொழிலாளர்களுக்கு உரிய பயன்களை



அடையக் கூடிய சூழ்நிலைகளை உருவாக்க அனைவரும் பாடுபட வேண்டும். மறைந்த தலைவர் கௌரவ ஆறுமுகன் தொண்டமான் இந்த மே தினத்தில் நம்முடன் இல்லாதது பெரும் வருத்தத்தை அளிக்கின்றது. அவர் தொழிலாளர்களின் உரிமைக்கு குரல் கொடுத்தது போல, இ தொ கா தொடர்ந்தும் அவர் வகுத்த வழியில் தொழிலாளர்களுக்காக முன்நின்று செயற்படும்.

கொவிட் 19 தொற்று காரணமாக மக்களின் பாதுகாப்பு நலன் கருதி மே தின கொண்டாட்டங்கள் இந்த வருடம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. கொவிட் 19 தொற்றை முழுமையாக அழித்து, வறுமையை ஒழித்து எல்லோருக்கும் வாழ்வு கிடைக்க வழி தேடுவதே நமது திட்டமாகும். சமுதாயத்தில் அனைவருக்கும் கல்வி கிடைக்கவும், வேலை வாய்ப்பு கிடைக்கவும் அவற்றின் மூலம் சமவாய்ப்பு அமையவும் இந்த மே தின நன்னாளில் சூளுரை மேற்கொள்வோம் என அவர் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கொட்டகலை அரச வங்கி முகாமையாளருக்கு கொரோனா

**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**

கொட்டகலை அரச வங்கி கிளையின் உதவி முகாமையாளராக பணிபுரிந்து வந்தவருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதனைதொடர்ந்து வங்கி நடவடிக்கைகள் நேற்று முதல் காலவரையின்றி மூடப்பட்டுள்ளதாக பொது சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர் .



உதவி முகாமையாளரின் மனைவிக்கு தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து நேற்றுமுன்தினம் முகாமையாளர் சுகவீனம் காரணமாக டிக்கோய கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு என்டிஜன் பரிசோதன மேற்கொள்ளப்பட்ட போதே முகாமையாளருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து கொட்டகலை நகரிலுள்ள இலங்கை வங்கி கிளையில் பணிபுரிந்து வந்த அனைத்து உத்தியோகத்தர்களும் 14 நாள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளதோடு இலங்கை வங்கி கிளை மூடப்பட்டு கிருமி தொற்று நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

## பொகவந்தலாவையில் 08 பேருக்கு கொரோனா

**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**

பொகவந்தலாவ பொது சுகாதர பரிசோதகர் காரியாலயத்திற்குட்பட்ட பகுதியில் எட்டுபேருக்கு கொரோனா தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்தார்.

பொகவந்லாவ கிவ் தோட்டத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 04 பேரும் சென்ஜேன் டிலரி தோட்டத்தில் 04 பேருமாக எட்டுபேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. கடந்த 25 ஆம் திகதி மேற்கொண்ட பி.சி.ஆர் பரிசோதனையின் அறிக்கை நேற்று

கிடைக்கப்பெற்ற போதே இவர்களுக்கு தொற்று இருப்பது உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளானவர்கள் கொரோனா சிகிச்சை மத்திய நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொது சுகாதர பரிசோதகர் தெரிவித்தார்.

## லுணுகலையில் ஐவருக்கு கொரோனா தொற்று

**லுணுகல நிருபர்**

லுணுகலை பிரதேசத்தில் 05 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக பிரதேச பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவிக்கின்றனர்.

எக்கிரிய பகுதியில் இருவரும் லுணுகலை நகரில் ஒருவரும் அரவாகும்புர பகுதியில் இருவரும் உள்ளடங்குகின்றனர். இதேவேளை ஹப்புத்தளை பிரதேச சபை சாரதிக்கு என்டிஜன் பரிசோதனையில் கொவிட் தொற்று உறுதியாகியுள்ளதாக பிரதேச பொது சுகாதார பரிசோதகர் ரோய் விஜயசூரிய தெரிவித்தார்.

## பிரதேச வைத்தியசாலை தாதிக்கு கொரோனா

**கம்பளை நிருபர்**

கலஹா பிரதேச வைத்தியசாலையில் சேவையாற்றும் தாதியொருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனையடுத்து அவருடன் தொடர்பில் இருந்த அனைவரையும் தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவர்களில் 13 பேரிடம் பி சி ஆர் பரிசோதனைக்கான மாதிரிகள் நேற்று பெறப்பட்டன.

கலஹா வைத்தியசாலையில் கடந்த 23 ஆம் திகதி நோயாளர் ஒருவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருக்கான ஆரம்பக்கட்ட சிகிச்சைகளை தாதியர் ஒருவர் வழங்கியுள்ளார். குறித்த நபர் மேலதிக சிகிச்சைகளுக்காக கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். அங்கு வைத்து அவர் பி சி ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். பரிசோதனை முடிவுகள் 27 ஆம் திகதி வெளிவந்த நிலையில் அவருக்கு வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

இதனையடுத்து கலஹா வைத்தியசாலையிலுள்ள தாதிக்கு கடந்த 28 ஆம் திகதி பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பரிசோதனை முடிவு நேற்று வெளியானது. அதில் தாதி ஒருவருக்கு வைரஸ் தொற்றியிருப்பது உறுதியாகியுள்ளது.

இதனால் அவருடன் நேரடி தொடர்பில் இருந்த அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இதில் 13 பேரிடம் பி.சி.ஆர் பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டுள்ளன.

அதேவேளை, சுகாதார பாதுகாப்பு சகிதம், அவசர தேவையிருந்தால் மாத்திரம் கலஹா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு வருமாறு மக்களிடம் சுகாதார தரப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### கொரோனா பரவல் தீவிரம்

## மாத்தளை மாவட்டம் காலவரையரையின்றி முடக்கம்

**தம்புள்ள தினகரன் நிருபர்.**

கொவிட் 19 வைரஸ் பரவும் வேகம் அதிகரித்து வருகின்றமையால் மாத்தளை மாவட்டத்தை முடக்குவதற்கு தீர்மானித்துள்ளதாக மாத்தளை மாவட்ட சுகாதார மற்றும் பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்தனர். அதற்கமைய நேற்று (30) முற்பகல் 12 மணியுடன் மாத்தளை மாவட்டத்தின் 11 பிரதேச செயலகப் பிரிவுகளும் காலவரையரையின்றி முடக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொதுமக்கள் ஒலிபெருக்கி மூலம் அறிவுறுத்தப்பட்டதைத் தொடர்ந்து கலேவெல,தம்புள்ள, நாவுல,மாத்தளை, இறத்தோட்டை, மற்றும் பல்லேப்பொல, பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள நகரங்களில் மக்கள் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு முண்டியடித்துக் கொண்டிருந்தனர்.

எரிபொருள் நிலையங்களிலும், மருந்தகங்ளிலும் மக்கள் நீண்ட வரிசைகளில் நின்றிருந்ததை அவதானிக்க கூடியதாக விருந்தது.

தம்புள்ள நகரில் வீதியோர வர்த்தகர்கள் அதி கூடிய விலைக்கு பொருட்களை விற்பனை செய்து கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

இது இவ்வாறிருக்க மாத்தளை மாவட்டத்தில் 1757 கொவிட் 19 வைரஸ் தொற்றாளர்கள் உறுதிப் படுத்தப்பட்டிருப்பதுடன்,கடந்த 24 மணி நேரத்தில் புதிதாக 143 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்,இதனிடையே மாவட்டத்தில் 155 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. மாவட்ட கொவிட் ஒழிப்புக் குழுவினர்; மாத்தளை மாவட்டத்தில் இதுவரை 11 கொரோனா மரணங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

## பதுளை மாவட்டத்தில் இதுவரை 18 கொரோனா மரணங்கள்

**பதுளை தினகரன் விசேட நிருபர்**

வெலிமடையில் கொவிட் தொற்றுக்கு இலக்கான நிலையில் நேற்றைய தினம் உயிரிழந்த பெண்ணுடன், பதுளை மாவட்டத்தில் இதுவரை 18 கொரோனா மரணங்கள் இடம்பெற்றுள்ளன.

வெலிமடையைச் சேர்ந்த 72 வயதுடையை பெண்ணொருவர் வெலிமடை அரசினர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கொவிட் தொற்று காரணமாக ஹோமாகமை அரசினர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இம்மரணத்துடன் பதுளை மாவட்டத்தில் இதுவரை 18 பேர் உயிரிழந்துள்ளனர். வெலிமடையில் ஐந்து பேரும் தியத்தலாவையில் ஐந்து பேரும் பதுளையில் நான்கு பேரும் பண்டாரவளையில் நான்கு பேரும் என்ற வகையில் 18 பேர் கொவிட் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.





டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையின் வைத்தியர்கள் உள்ளிட்ட 230 பேருக்கு இரண்டாவது தடவையாகவும் கொரோனா தடுப்பூசி நேற்றைய தினம் செலுத்தப்பட்டது. (படங்கள்: நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)




# ரிஷாட்டின் கைதுக்கு எதிராக நிந்தவூர் பிரதேச சபையில் கண்டன தீர்மானம்

## கருப்பு சால்வை அணிந்து உறுப்பினர்கள் பங்கேற்பு



அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து நிந்தவூர் பிரதேச சபையில் கண்டன தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பிரதேச சபையின் மாதாந்த பொதுச் சபை அமர்வு வியாழக்கிழமை (29) நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஏ.எம்.தாஹிர் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது மத அனுஸ்டானம் இடம்பெற்ற பின்னர் 2021 மார்ச் மாதத்திற்கான கூட்டறிக்கை உறுதிப்படுத்தல், 2021 மார்ச் மாதத்திற்கான கணக்கறிக்கை உறுதிப்படுத்தல், தவிசாளர் எம்.ஏ.எம். தாஹிர் உரை, என்பன தொடர்ச்சியாக இடம்பெற்றன.

குறித்த அமர்விற்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர்கள் 6 பேர் கருப்புச்சால்வை அணிந்து வருகை தந்திருந்ததுடன், ஏனைய கட்சிகளை சேர்ந்த உறுப்பினர்களும் இவ்வாறு அணிந்து சபைக்கு வருகை தந்திருந்தனர்.

தவிசாளர் உட்பட சபையின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர்களான ஏ.அஸ்பர், ஏ.அப்துல் வாஹிது ஆகியோர் ரிஷாத் பதியுதீன் கைது செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் கண்டனம் தெரிவித்து உரையாற்றினர்.

இதன் பின்னர் முன்னாள் அமைச்சர் றிசாட் பதியுதீன் விடுதலை செய்யப்பட வேண்டும் என சபையில் ஏகமனதாக கண்டனத் தீர்மானமும் எடுக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

இதே வேளை சபையின் உப தவிசாளர் வை.எல் சுலைமாலெப்பை முன்னாள் அமைச்சர் றிசாட் பதியுதீனின் கைது நடவடிக்கை தொடர்பில் உரையாற்றியதுடன், அது தொடர்பில் ஏனைய உறுப்பினர்களின் கண்டனத் தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவிக்காமல் மௌனமாக இருந்ததை காண முடிந்தது.

சபை நடவடிக்கையின் போது திண்மக் கழிவுகளை தரம் பிரித்து அகற்றுவது தொடர்பாக தவிசாளரினால் உறுப்பினர்களுக்கிடையே வினவப்பட்ட ஆலோசனைக்கமைய உறுப்பினர் கே.எம்.ஜெஸீமா ஆக்கபூர்வமான விடயங்களை சுட்டிக்காட்டினார்.

**பாறுக் ஷிஹான்**

# பழுகாமம் புத்தடிமேடு வயலுக்கு செல்ல பாலம் அமைக்குமாறு கோரிக்கை

(மண்டூர் குறூப் நிருபர்)



வெல்லாவெளி மற்றும் பழுகாமம் கமநல சேவைகள் நிலையத்திற்குட்பட்ட புத்தடிமேடு வயல் கண்டத்திற்கு செல்வோர் பாதையில்லாமையில் பெரும் அவதிறுவதாக தெரியவருகிறது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

புத்தடிமேடு வயல் கண்டம் நாதனை ஆற்றுநீரினால் சூழப்பட்ட நிலையில் காணப்படுவதனால் விவசாய செய்கைகளை மேற்கொள்வோர் ஆற்றைக் கடக்கும் வேளையில் முதலைக் கடிக்குள்ளாகி, இற்றைவரை ஐவர் முதலைக்கு இரையாகியுள்ளதாகவும், பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியிலேயே புத்தடிமேடு வயல் நிலங்களை அடைவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிறுபோக வயல் விதைப்புக்காக உழவு இயந்திரம் ஆற்றைக் கடக்கும்போது, சேற்றில் புதையுண்டு நின்றுவிடுவதாகவும் அறுவடைக் காலங்களில் நெற்கதிர்களை தோணிகளில் கரையேற்றி

அறுவடை செய்வதுடன், இவ்வாறு அறுவடை செய்வதற்கு கூலியாட்கள் தயங்குவதுடன் பாரிய செலவு ஏற்படுவதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

மட்டு. மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் அபிவிருத்தி குழு இணைத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் முதலமைச்சராக இருந்த காலத்தில் இவ்விடயம் தொடர்பாக பார்வையிட்டு பாலமோ தாம்போதியோ அமைத்துத் தருவதாக உறுதியளித்தும், எந்த வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படவில்லையென விவசாயிகள் அங்கலாய்க்கின்றனர்.

புத்தடிமேடு விவசாய கண்டம் செல்வதற்குரிய பாதை மார்க்கத் தேவை கருதி புதிய பாலத்தையோ தாம்போதியையோ அமைத்துத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# கொரோனா வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த விழிப்புணர்வு அறிவிப்பு

மட்டக்களப்பு விசேட நிருபர்

மட்டக்களப்பு நகரில் கொரோனாவின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் அவற்றைக் கட்டப்படுத்தும் நோக்கோடு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டும் அறிவிப்பு நடவடிக்கைகளில் பொலிசாரும் பொதுச் சுகாதார பரிசோதகர்களும் வியாழக்கிழமை (29) ஈடுபட்டனர்.

வாகனங்களில் ஒலிபெருக்கிகளைப் பொருத்தி கொவிட் 19 வைரஸ் தொற்று பரவாமல் தடுக்கும் செயல்முறைகளையும் வங்கிகள், அரச நிறுவனங்கள் உள்ளிட்ட வியாபார நிலையங்களில் சேவைகளை தேடிச் செல்வோர் கடைப்பிடிக்க வேண்டிய முறைகளையும் தெரிவித்தனர்.

பொது மக்கள் கூடும் இடங்களான மட்டக்களப்பு தனியார் மற்றும் இ.போ.ச. பஸ் நிலையம், பொதுச் சந்தைகள் மற்றும் வைத்தியசாலைகளில் குறித்த விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# கந்தளாய் வலயக் கல்வி அலுவலகத்தில் கடமையாற்றிய ஐவருக்கு கொவிட்

கந்தளாய் தினகரன் நிருபர்

கந்தளாய் வலயக்கல்வி அலுவலகம் மற்றும் கந்தளாய் அக்போகம பாடசாலை என்பன தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. கந்தளாய் வலயக்கல்வி அலுவலகத்தில் கடமையாற்றிய ஐந்து உத்தியோகத்தர்களுக்கு கொவிட் தொற்று உறுதியானதையடுத்தே கந்தளாய் வலயக்கல்வி அலுவலகம் புதன்கிழமை (28) மூடப்பட்டுள்ளது.

கந்தளாயில் அனைத்து அலுவலகங்களிலும் ஊழியர்களின் சேவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதோடு, பிசி ஆர் மேற்கொள்ளும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று கந்தளாய் அக்போகம கனிஷ்ட வித்தியாலயத்தில் ஏழு மாணவர்களுக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக கந்தளாய் சுகாதார வைத்திய அலுவலகம் அறிவித்துள்ளது.

தொற்றாளர்களோடு பழகியவர்கள்,சென்ற இடங்கள் போன்றவற்றை இனங்கண்டு தனிமைப்படுத்தல் மற்றும் கிருமி நாசினி தெளித்தல் போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் 192 பேர் கால்களை இழந்துள்ளனர்

## செயற்கை கால் வழங்கும் நிகழ்வில் செஞ்சிலுவை சங்க மட்டு. கிளைத் தலைவர்

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)



மட்டக்களப்பு மாவட்டத்திலே பல்வேறு காரணங்களால் சுமார் 859 பேரின் கால்கள் பாதிப்புற்ற மாற்றுத்திறனாளிகள் உள்ளனர். அதில் 192 பேர் ஒருகால் அல்லது இரண்டு, கால்களையும் இழந்துள்ளனர். இவர்களுள் 14 பேருக்கு மாத்திரம்தான் செயற்கைக் கால்களை வழங்கியுள்ளோம். மிகுதியாகவுள்ள கால்களை இழந்த மாற்றுத்திறனாளிகளுக்கு, செயற்கைக் கால்களை வேண்டியுள்ளது என இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளைத் தலைவர் த.வசந்தராசா தெரிவித்துள்ளார்.

டென்மார்க் நாட்டில் அமைந்துள்ள வாணி சமூக பொருளாதார சுயமேம்பாட்டு நிறுவனத்தின் நிதி அனுசரணையில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையின் ஆதரவுடன், மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட கடந்த காலங்களில் பல்வெறு காரணங்களினால் கால்களை இழந்த 14 மாற்றுத்திறனாளிகளுக்கு செயற்கை கால்களை வழங்கி வைக்கும் நிகழ்வு மட்டக்களப்பு வெல்லாவெளியில் அமைந்துள்ள பொதுநோக்கு மண்டபத்தில் புதன்கிழமை (28) இடம்பெற்றது.

போரதீவுப்பற்று பிரதேச கதிரவன் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் செயலாளர் நா.பிரதீபராஜா தலைமையில் சுகாதார விதி முறைகளுக்கமைவாக நடைபெற்ற இந்நிகழ்வில், போரதீவுப் பற்று பிரதேச செயலாளர் ஆர்.இராகுலநாயகி மற்றும் மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது மாற்றுத்திறனாளிகளுக்கு புதிதாக செயற்கைக் கால்கள் வழங்கி வைக்கப்பட்டன. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது கம்போடியாவின் தரத்துக்கு ஏற்ப செயற்கை கால்களை, மன்னாரில் அமைந்துள்ள வாழ்வோதையம் அமைப்பினர் இந்த செயற்கை கால்களை தயாரித்துத் தந்துள்ளார்கள். இந்த நல்ல காரியத்திற்கு டென்மார்க்கில் அமைந்துள்ள வாணி எனும் சகோதரி நிதி உதவி செய்துள்ளார். பல இன்னல்களைத் தாங்கிக் கொண்டு வாழ்ந்து வரும் இவ்வாறான மாற்றுத்திறனாளின் வாழ்வாதாரத்திற்கு மேலும் உதவ வேண்டும் என்பதோடு, மிகுதியாகவுள்ள கால்களை இழந்தவர்களுக்கும் செயற்கை கால்களை பொருத்துவதற்கு தனவந்தர்கள் முன்வரவேண்டும் எனவும் அவர் இதன் போது தெரிவித்தார்.

# 'நஞ்சற்ற நாடு தேசிய உணவு உற்பத்தி'

## கல்முனையில் இரு நாள் செயலமர்வு

(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

எதிர்கால பரம்பரையின் நிலைபேற்றிற்காக நஞ்சற்ற நாடு தேசிய உணவு உற்பத்தி செயற்திட்டத்தின் கீழ் 'நஞ்சற்ற இலங்கை தேசத்தையும் நாட்டையும் கட்டியெழுப்புவோம்' எனும் தொணிப்பொருளில் இரண்டு நாள் செயலமர்வு கல்முனை கிறிஸ்டா இல்லத்தில் இடம்பெற்றது.

ஆசிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கெப்சோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இச்செயலமர்வில் குட்மார்கட்டிங் நிறுவன அதிகாரிகள் கலந்து கொண்டு நஞ்சற்ற விவசாய உணவு உற்பத்தி, நஞ்சற்ற உணவுப் பொருட்களை உணவாக கொள்ளாத பண்ணை வளர்ப்பு முறை மற்றும் அதனூடான பொருளாதார அபிவிருத்தி முன்னெடுப்பு எனும் தொணிப் பொருளில் இரண்டு நாள் செயலமர்வு இடம்பற்றது.

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட சுயதொழில் முயற்சியில் ஈடுபாடு கொண்ட மூவினங்களைச் சேர்ந்த உணவு உற்பத்தி பண்ணை வளர்ப்பு வர்த்தகத் தொழிலில் ஈடுபட்டுவரும் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக உரிமையாளர்கள் இச்செயலமர்வில் கலந்து கொண்டனர்.

கெப்சோ நிறுவனத்தின் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.ஜே.காமில் இம்டாட். தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வளவாளராக ஆசிய அபிவிருத்தி திட்டத்தின் பிரதிநிதிகள், குட்மார்கட்டிங் நிறுவன அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# மட்டு. மாவட்டத்தில் இரண்டாம் கட்ட டோஸ்

மட்டக்களப்பு குறூப் நிருபர்



கொரோனா தடுப்பூசி ஏற்றும் இரண்டாம் கட்டப் பணிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று (30) ஆரம்பமாகின. மட்டக்களப்பு சுகாதார வைத்தியதிகாரி பணிமனையில் சுகாதார வைத்தியதிகாரிகளான டொக்டர் ஈ.உதயகுமார், எஸ்.கிரிசுதன் ஆகியோர் தலைமையில் இடம்பெற்ற தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையின்போது வைத்தியதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், தாதியர்கள், பிராந்திய சுகாதரா சேவைகள் நிலைய ஊழியர்கள், வைத்தியசாலை ஊழியர்கள் ஆகியோர் இரண்டாம் கட்ட தடுப்பூசிகளை ஏற்றிக் கொண்டனர்.

தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெறுமென மட்டக்களப்பு சுகாதார வைத்தியதிகாரி ஈ.உதயகுமார் தெரிவித்தார்.

# போதை பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த ஐவர் கைது

(ஏறாவூர் நிருபர்)

போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த ஐவர் மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸாரால் வியாழக்கிழமை (29) அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து ஒரு தொகை போதைப் பொருட்கள் கைப்பற்றப் பட்டுள்ளன.

கொழும்பு அக்கரைப்பற்று போக்குவரத்து சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் நடாத்துனர் ஒருவரும் இதில் அடங்குவதாக ஏறாவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கீர்த்தி ஜயந்த தெரிவித்துள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து பொலிஸ் நிலைய ஊழல் ஒழிப்புப் பிரிவு பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் எச்.எம். ஷியாம் தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பஸ் நடாத்துனரிடமிருந்து 4320 மில்லி கிராம் ஹெரொயின் கைப்பற்றப்பட்டுள்ளதனால் இவர் மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளதாக பொலிஸார் கூறினர்.

# இறக்காமம் பள்ளிவாசலில் இடம்பெற்ற கொரோனா தொடர்பான விசேட கூட்டம்

இறக்காமம் தினகரன் நிருபர்

நாட்டில் கொரோனா மீண்டும் அதிகரித்து வருவதையிட்டு இறக்காமம் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் நிருவாகம் ஏற்பாடு செய்த விசேட கூட்டம் புதன்கிழமை (28) இறக்காமம் அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் மௌலவி ஏ.கே.அப்துல் றஊப் தலைமையில் பள்ளிவாசல் மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஏ.சுபைதீன், முஸ்லிம் சமய கலாசார, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எச்.எம்.றிபாஸ், பொதுச்சுகாதார பரிசோதகர்களான ஏ.றஹ்மான், ஏ.எல்.ஜௌஸ், இறக்காமம் உபபொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.வை.ஜௌபர் உட்பட பள்ளிவாசல் நிருவாகிகளும் கலந்து கொண்டனர்.

இதன்போது இறக்காமம் பிரதேசத்திலுள்ள சகல பள்ளிவாசல்களிலும் சுகாதார வழிமுறைகளைப் பேணி வணக்க வழிபாடுகளை நிறைவேற்றுவதற்கு மக்களுக்கு வலியுறுத்த வேண்டுமென சுட்டிக் காட்டப்பட்டதுடன், முகக்கவசம், தொழுகை விரிப்பு இல்லாமல் பள்ளிலாசல்களுக்குள் எவரையும் அனுமதிக்கக் கூடாது என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் நிருவாகிகளைக் கேட்டுக்கொண்டனர். அத்துடன் ஒவ்வொரு பள்ளிவசலிலும் கொரோனா தடுப்பு செயற்குழுக்களை நியமிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

# வடமாகாண சுகாதார தொண்டர்கள் 388 பேருக்கு நியமனம் வழங்க பணிப்பு

## அங்கஜனின் கோரிக்கைக்கு ஜனாதிபதி செவிசாய்ப்பு

*சாவகச்சேரி விசேட நிருபர்*

வடக்கு மாகாணத்தில் சுகாதாரத் தொண்டர்களாக பணியாற்றிய 388 பேருக்கு ஒரு இலட்சம் அரச வேலைவாய்ப்பு திட்டத்தில் நிரந்தர நியமனம் வழங்குமாறு ஜனாதிபதி செயலகம் பல்நோக்கு செயலணி திணைக்களத்தை பணித்துள்ளது.

ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் சந்திம விக்கிரமசிங்கவால் பல்நோக்கு செயலணியின் பணிப்பாளர் நாயகத்திற்கு கடந்த (29) அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் கொழும்பில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவர்கள், ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதன், வடமாகாண சுகாதாரத் தொண்டர்களின் அவல நிலை தொடர்பாக ஜனாதிபதிக்கு எடுத்துரைத்திருந்தார்.

வடமாகாண சுகாதாரத் தொண்டர்களுக்கு கடந்த 2019ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் காலத்தில் நியமனம் வழங்கப்பட்டிருந்தாலும் கூட அவர்களுடைய சேவை, அர்ப்பணிப்பு ஆகியவற்றை கருத்தில் கொள்ள வேண்டும். வடமாகாண சுகாதாரத் தொண்டர்கள் யுத்தம் மற்றும் இடர் காலத்திலும் அர்ப்பணிப்போடு சேவையாற்றியிருந்தனர்எனக் குறிப்பிட்டிருந்தார்.



அங்கஜனின் கருத்திற்கு ஒரு இலட்சம் வேலைவாய்ப்பு திட்டத்திற்குள் வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்களை உள்ளீர்க்க நடவடிக்கை எடுங்கள் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது செயலாளரை பணித்திருந்தார். இந் நிலையில் தற்போது வடக்கு மாகாணத்தில் 388 சுகாதாரத் தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2019ஆம் ஆண்டு நியமனம் கிடைக்கப்பெற்று பின்னர் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தால் நியமனம் இடைநிறுத்தப்பட்ட சுகாதாரத் தொண்டர்கள் தமக்கான நீதி கிடைக்கும் வரை வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக தொடர்ச்சியாக இரண்டு மாத காலமாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# வடக்கு வர்த்தகர்களின் அசௌகரியங்கள் களையப்பட வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்தல்

*மானிப்பாய் தினகரன் நிருபர்*

வடக்கு மாகாணத்தினை சேர்ந்த வர்த்தகர்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்கள் அனைத்திற்கும் நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தனவுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற க லந்துரையாடலின் போதே குறித்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

வர்த்தக அமைச்சில் இடம்பெற்ற விசேட சந்திப்பின் போது, வடக்கு வர்த்தகர்களினால் தன்னிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை வர்த்தக அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்ற கடற்றொழில் அமைச்சர், குறித்த கோரிக்கைகள் தொடர்பாக அவதானம் செலுத்தப்பட வேண்டியதன் அவசியத்தினையும் வலியுறுத்தினார்.



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கருத்துக்களை ஏற்றுக் கொண்ட அமைச்சர் பந்துல குணவர்த்தன, முன்னுரிமை அடிப்படையில் வடக்கு வர்த்தகர்களின் அனைத்து எதிர்பார்ப்புக்களும் நியாயமான முறையில் தீர்த்து வைக்கப்படும் என்று உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா – யாழ். வீதியில் டிப்பரை வழிமறித்து சாரதிக்கு வாள்வெட்டு

*வவுனியா விசேட நிருபர்*

வவுனியா, யாழ் வீதியில் பயணித்த டிப்பரை வழிமறித்து அதன் சாரதி மீது வாள்வெட்டு தாக்குதல் நடத்திவிட்டு மோட்டர் சைக்கிளில் வந்தவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

நேற்று மதியம் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, திருநாவற்குளம் பகுதியில் இருந்து ஏ9 வீதி வழியாக நகரை நோக்கிச் சென்ற டிப்பர் வாகனத்தை பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த நபர்கள் யாழ். வீதி, சோயா லேன் பகுதியில் பயணித்த டிப்பரை வழிமறித்து அதன் சாரதி மீது வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். குறித்த வாள்வெட்டுத் தாக்குதலில் டிப்பர் சாரதி படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்ட நபர்கள் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர். சம்பவ இடத்தில் மோட்டார் சைக்கிளின் கண்ணாடியும் உடைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது. சம்பவத்தில் வவுனியா, திருநாவலற்குளம் பகுதியைச் சேர்ந்த பிரணவன் (வயது 30) என்பவரே படுகாயமடைந்தவராவார்.இச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிசார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# கொடிகாமம் மரக்கறி சந்தையில் 04 கொரோனா தொற்றாளர்கள்

## சந்தை தற்காலிகமாக மூடல்



யாழ்ப்பாணம் கொடிகாமம் மரக்கறி சந்தை மற்றும் அதனை சூழவுள்ள வர்த்தக நிலையங்களில் நடத்தப்பட்ட எழுமாற்று பீ.சி.ஆர் பரிசோதனையில் 4 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் சந்தை தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை சுகாதார பிரிவினரால் சந்தை முடக்கப்பட்டிருப்பதுடன், தொற்று நீக்கம் செய்யப்பட்டு சந்தையில் உள்ள ஏனைய வர்த்தகர்களுக்கும் பீ.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. அத்தோடு இனிவரும் பீ.சி.ஆர் முடிவுகளின் அடிப்படையில் சந்தையை மீளவும் திறப்பது தொடர்பாக தீர்மானிக்கப்படும் என சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஏப்ரல் 21 போன்று மே 18 சுதந்திரமாக அனுஷ்டிக்க அனுமதிக்க வேண்டும்

ஏப்ரல் 21 போன்று மே 18 சுதந்திரமாக அனுஷ்டிக்க அனுமதிக்க வேண்டும் என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் ரெலோ இளைஞர் அணித் தலைவருமான சபா குகதாஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

கடந்த ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொது மக்களை நினைவு கூருவதற்கு பூரண சுதந்திரத்தை அரசு வழங்கியது.

இதுபோன்று 2009 மே 18 முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை தினத்தில் பாதிக்கப்பட்ட உறவுகள் தம் இறந்த உறவுகளை நினைவு கூர இடையூறுகள் புரியாது அச்சுறுத்தல்களை ஏற்படுத்தாது பூரண அனுமதியை வழங்க வேண்டும்.



இந்த நாட்டில் பாதிக்கப்பட்ட தரப்பினர் யாராக இருந்தாலும் மனித நேய அடிப்படையில் அவர்களது அடிப்படை உரிமைகளை மதிக்க வேண்டும். அதுவே உண்மையான ஜனநாயகப் பண்பு.அந்த வகையில் தெற்கில் யுத்த வெற்றியை கொண்டாடும் போது வடக்கு,கிழக்கில் மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை தடுத்தல் நீதி அல்ல.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை பெற்றுக் கொடுப்பதே நாட்டின் அமைதிக்கும் அபிவிருத்திக்கும் புதிய வழியை உருவாக்கும்.

# நாவந்துறை சந்தைக்கு முதல்வர் திடீர் விஜயம்

*மானிப்பாய் தினகரன் நிருபர்*

நாவந்துறை சந்தைக்கு நேற்று முன்தினம் திடீர் விஜயத்தை மேற்கொண்ட யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் அங்கு வியாபாரிகள் மற்றும் பொதுமக்களுடன் உரையாடி குறை நிறைகள் தொடர்பிலும் தேவைகள் தொடர்பிலும் கலந்து உரையாடினார். சம்பவ இடத்திற்கு நாவந்துறை பகுதி யாழ். மாநகர சபை உறுப்பினர்களும் உடனே வருகைதந்து முதல்வருடன் இணைந்து மக்களுடன் உரையாடி பிரச்சினை தொடர்பில் அறிந்து கொண்டார்.மேலதிக நடவடிக்கைகளை முன் எடுப்பதாக முதல்வர் கூறினார்.





# இராணுவத்தினர் கண்காணிப்பில்





*கிளிநொச்சி குறூப் நிருபர்*

கிளிநொச்சி நகருக்கு வருகின்ற பொது மக்கள் முகக்கவசம் அணியாதும் கொவிட் 19 சுகாதார நடைமுறைகளுக்கு மாறாகவும் வருகின்றவர்களை வழி மறித்து அவர்களை மீண்டும் திருப்பி அனுப்பும் செயற்பாடுகளை இராணுவத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி பெரும்பாலான வீதிகளில் இராணுவத்தினனர் நிறுத்தப்பட்டு பொது மக்களின் நடவடிக்கைகள் அவதானிக்கப்பட்டு வருகிறது. இதன் போது சுகாதார நடைமுறைகளை பின்பற்றாதவர்களுக்கு விளக்கமளிக்கப்படுவதோடு, எச்சரிக்கை செய்து திருப்பி அனுப்பி வருகின்றனர்.

# குடத்தனையில் கன்டர் வாகனம் மீது கடற்படையினர் துப்பாக்கிச் சூடு

## சந்தேக நபர்கள் தப்பியோட்டம்

*யாழ்.விசேட நிருபர்*

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு குடத்தனை வடக்கு பகுதியில் சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபட்ட வாகனம் மீது கடற்படையினர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.




கடத்தலில் ஈடுபட்ட நபர்கள் தப்பி சென்றுள்ள நிலையில் அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். மணல் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட வாகனமும்,கடத்தல்காரர்களின் மோட்டார் சைக்கிளும் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குடத்தனை பகுதியில் கடற்படையினர் சுற்றுக்காவல் (ரோந்து) பணியில் ஈடுபட்டிருந்த போது சந்தேகத்திற்கு இடமான முறையில் வீதியில் வந்த கன்ரர் ரக வாகனத்தை மறித்துள்ளனர்.

வாகனம் கடற்படையினரின் கட்டளையை மீறி சென்ற போது கடற்படையினர் துப்பாக்கி பிரயோகம் செய்துள்ளனர். அதன் போது வாகனத்தில் பயணித்தவர்களும், வாகனத்திற்கு வழி காட்டியாக சென்றதாக சந்தேகிக்கப்படும் மோட்டார் சைக்கிள் ஓட்டி ஒருவரும் தமது வாகனங்களை கைவிட்டு தப்பி சென்றுள்ளனர். அதனை அடுத்து கன்ரர் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றை கடற்படையினர் மீட்டதுடன், பருத்தித்துறை பொலிஸாருக்கும் தகவல் வழங்கினார்கள்.

தகவலின் பிரகாரம் சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் வாகனங்களை பொறுப்பேற்றதுடன், விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளனர்.தப்பி சென்றவர்களை கைது செய்வதற்குரிய நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளனர்.

# விற்பனை செய்த வாகனத்திற்கான மீதிப் பணம் பெறச் சென்றவர்கள் மீது தாக்குதல்

*சாவகச்சேரி விசேட நிருபர்*

விற்ற வாகனம் ஒன்றிற்கான மீதி பணத்தை கேட்கச் சென்றவர்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் ஒன்று வியாழக்கிழமை இரவு தென்மராட்சிகெற்பேலிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது ;

தென்மராட்சிகெற்பேலிப் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு வெளி மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் வாகனம் ஒன்றினை கடந்த சில மாதங்களுக்கு முன்பாக ஒரு தொகை முன்பணத்தை பெற்று விட்டு விற்பனை செய்துள்ளார்.

இந்நிலையில் குறித்த வாகனத்திற்கான மீதிப் பணத்தை கேட்க உதவிக்கு ஒருவரையும் அழைத்துக்கொண்டு வந்தவர் மீது வாகனத்தை வாங்கியவர் மற்றும் அவரது சகாக்கள் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. தாக்குதலுக்கு இலக்கானவர்கள் இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்து விட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கலைக் கதம்பம் சைத்திரியன்

# அகநானூறு தரும் அதிசயம்



எட்டுத் தொகை நூல்களில் ஒன்றான அகநானூற்றில் காதல், குடும்ப வாழ்வு தொடர்பான 400 அகத்துறைப் பாடல்கள் உள்ளன.

அகநானூற்றில் மிகப்பெரிய அதிசயம் பாடலின் தொகுப்பு முறையாகும். தமிழர்கள் கணிதத்தில் எவ்வளவு ஆர்வமும் கவனமும் செலுத்தினர் என்பதற்கு இந்த ஒரு சான்றே போதும்.

400 பாடல்களையும் 1,2,3,4,5,6 என்று எழுதினால், அதில் ஒற்றைப்படை எண்கள் உடைய பாடல்கள் எல்லாம் பாலைத் திணையாகவும் பத்து தொடர்ந்தனவெல்லாம் நெய்தலாகவும் நாலு தொடர்ந்தனவெல்லாம் முல்லையாகவும் இரண்டும் எட்டும் தொடர்ந்தனவெல்லாம் குறிஞ்சியாகவும், ஆறு தொடர்ந்தன வெல்லாம் மருதமாகவும் நூல் முழுதும் தொகுக்கப்பட்டுள்ளன..

**பாலை**

1,3,5,7,9,11...இவ்வாறு 397,399 வரை எல்லா ஒற்றைப்படை எண்ணுள்ள பாடல்களும் பாலைத் திணையைச் சேர்ந்த பாடல்களாக இருக்கும்.

**நெய்தல்**

10, 20, 30, 40, இவ்வாறு..390, 400 வரை பத்தில் முடியும் எண் பாடல்கள் அனைத்தும் நெய்தல் திணையைச் சேர்ந்த பாடல்களாக இருக்கும்.

**முல்லை**

4,14,24,34,44,54... 394 வரை இவ்வாறு நான்கு என்ற எண்ணுள்ள பாடல்கள் அனைத்தும் முல்லைத் திணையைச் சேர்ந்த பாடல்களாக இருக்கும்.

**குறிஞ்சி**

2,12,22,32,4...

. 8, 18, 28, 38...392, 398 வரை இவ்வாறு இரண்டு எட்டு என்ற எண்ணுள்ள பாடல்கள் அனைத்தும் குறிஞ்சித் திணையைச் சேர்ந்த பாடல்களாக இருக்கும்.

**மருதம்**

6,16,26,36...396 என்ற வரை இவ்வாறு ஆறு என்ற எண்ணுள்ள பாடல்கள் அனைத்தும் மருதத் திணையைச் சேர்ந்த பாடல்களாக இருக்கும்.

இப்படிச் செய்வதால் புத்தகத்தைப் பிரதிஎடுப்போர் தவறு செய்யும் வாய்ப்புகள் குறைவாகும். யாரேனும் ஒருவர் தவறு செய்தாலும் அதை எளிதில் கண்டுபிடித்துத் திருத்தி விடலாம். இப்படிப் பிரித்ததிலும் கூட 200+40+40+80+40 என்ற அழகைக் காணலாம்.

பிராமணர்கள் வாய்மொழியாகவே வேதத்தைப் பரப்பவேண்டும் என்ற கொள்கையினை உடையோராதாலால் அதில் இடைச்செருகல் வரக்கூடாது என்பதற்காக, பல்லாயிரம் வருடங்களாக, அதை கணித அடிப்படையில் கூட்டிக் கூட்டிச் சொல்லுவர்.

மனப்பாட சக்தியுள்ள ஒருவரைப் புகழும் போது, ''அவரா? அவர் அதைத் தலைகீழாகச் சொல்லச் சொன்னாலும் சொல்வாரே, அந்த அளவுக்குப் புலமை'' என்போம். இது போல பிராமணர்கள் பெரிய புலமை பெறும் போது அவர்களுக்கு 'கனபாடி'கள் என்ற பட்டமும் கிடைக்கும். இதே போல தமிழர்களும் எண் அடிப்படையில் பாடல்களை வகுத்தது அவர்களின் திறமைக்கு ஒரு சான்றெனில் அது மிகையாகாது.

அகநானூற்றில் 108 ஊர்களின் பெயர்கள் உள்ளன. 2000 ஆண்டுப் பழமையான ஊர்களை அறிய இது பெரிதும் உதவுகிறது. தமிழர்கள் மிகவும் தெய்வ நம்பிக்கை உடையவர்கள். ஆகையால் அலைவாய் (திருச்செந்தூர்), அரங்கம் (ஸ்ரீரங்கம்), கோடி (தனுஷ்கோடி), மதுரை, வேங்கடம் (திருப்பதி) முதலிய பல புண்ய க்ஷேத்திரங்களைக் குறிக்கத் தவறவில்லை.

அகநானூற்றில் குறைந்தது 14 நாட்டுப் பிரிவுகள் வருகின்றன. இப்போது நாம் நாடு என்றால் பெரிய நிலப்பரப்புடைய அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன் என்போம். 2000 ஆண்டுகளுக்கு முன் தமிழர்கள் இதைச் சிறு நிலப்பரப் பிற்கே பயன்படுத்தினர். எல்லா மொழிகளிலும் காலப்போக்கில் சொற்களின் பொருள் மாறும். ஆங்கிலத்திலும் கூட 400 ஆண்டுகளுக்கு முன் ஷேக்ஸ்பியர் பயன்படுத்திய சொற்கள் இன்று பொருள் மாற்றிப் பயன்படுத்தப் படுகின்றன.

இடையநாடு, குடநாடு, கொங்குநாடு, கோசர் நாடு, துளுநாடு, தொண்டை நாடு, பாணன் நாடு, புகார் நாடு, பூழி நாடு, மழவர் நாடு, மாறோக்கநாடு, வடுகர்நாடு, வேம்பிநாடு, வேளிர்நாடு முதலியன.

''நாடு'' என்னும் சொல் பொருள் மாறியது பற்றி எழுதியவுடன் வேறு ஒரு விஷயமும் நினைவுக்கு வருகிறது.

பல வெளிநாட்டுக்காரர்கள் ரிக் வேதத்தை மொழி பெயர்க்கிறேன் என்ற பெயரில் தத்துப்பித்து என்று உளறி வைத்துள்ளனர். இதை உளறல் என்று கண்டுபிடிக்க நீங்கள் பெரிய சம்ஸ்கிருத அறிஞராக இருக்க வேண்டாம். 20 வெளி நாட்டுக்காரர்கள் ரிக் வேதப் பாடல்களை மொழிபெயர்த்ததைக் கையில் வைத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொருவரும் என்ன சொல்கிறார்கள் என்று பாருங்கள். ஒன்றுக்கு ஒன்று சம்பந்தா சம்பந்தமே இராது.

திருக்குறளிலும் பதின்மர் உரை என்று பத்துப் பேர் எழுதிய உரைகள் உண்டு. அதில் பெரிய வேற்றுமைகளையோ கலாசார எதிர்மறை விளக்கங்களையோ காணமுடியாது. ஆனால் வேதத்துக்குப் பொருள் எழுத வந்தோருக்கு நம் கலாசாரம் தெரியாது என்பதைவிட அவர்களின் உள்நோக்கம் என்ன என்பதைப் பார்க்கையில் அவர்களின் குட்டு வெளிப்பட்டுவிடும். சாயம் வெளுத்துப்போகும்!

**அகநானூறு குறிப்பிடும் தமிழர்களின் தெய்வங்கள்:**

அருந்ததி, இராமன், இல்லுறை கடவுள், உமை, கண்ணபிரான், கவிர மலைத் தெய்வம், குபேரன், கொல்லித் தெய்வம், சந்திரன், சிவபெருமான், சூரியன், செல்லூர்த் தெய்வம், நடுகற் கடவுள், நள்ளியடுக்கத்துச் சூர்,

புகார்த் தெய்வம், பாழி அணங்கு, பொதியில் தெய்வம், மழுவாள் நெடியோன், முருகன், வேம்பினடிக் கடவுள், வேளூர் வாய்த் தெய்வம்.

இது தவிர ஏரி, குளம், காடு, மலை, குன்று, மரங்களில் உறையும் அணங்குகள் பற்றிய குறிப்புகளும் நிறைய உண்டு.

தமிழர்களைப் பற்றி சில அரசியல் கட்சிகள் தவறான பிரச்சாரத்தைச் செய்ததால் தற்கால இளைஞர்களுக்கு தமிழர்கள் என்போர் ஏதோ தனிப்பட்ட ஒரு இனம், அவர்கள் ஆகாசத்தில் இருந்து குதித்த உலக மஹாப் பழங்குடி மக்கள், அவர்களுக்கு வேறு ஒரு கலாசாரம் உண்டு என்ற எண்ணம் உண்டாகும் இவை எல்லாம் மஹா அபத்தம் என்பதை அறிய நீங்கள் மிகப்பெரிய தமிழ் அறிஞராக இருக்க வேண்டும் என்பது இல்லை.

சங்க இலக்கிய மேல் கணக்கு நூல்கள் 18 ஐயும் எடுத்துக் கொண்டு பத்துப்பாட்டையும் (10 நூல்கள்) எட்டுத்தொகையையும் ( எட்டு நூல்கள்) படியுங்கள். இமயம் முதல் குமரி வரை எல்லாம் ஒரே பண்பாடே என்று நீங்களே கட்டுரை எழுதத் துவங்கி விடுவீர்கள். திருநெல்வேலி பெட்டி வெல்லம், நெல்லை லாலகடை அல்வா, மணப்பாறை முறுக்கு, மானாமதுரை சாம்பார் சாதம், மதுரை நாகபட்டிணம் கடை காராச் சேவை, ஐயங்கார் மெஸ் புளியோதரை என்பது போல சில ''ஸ்பெஷல்கள்'' ஆங்காங்கே இருக்கத்தான் செய்யும். இது உலகம் முழுதும் உண்டு.

லண்டன்
சுவாமிநாதன் ...

கவிதை நூல் மீதான பார்வை

# சமுதாயம்சார் சிந்தனைகள் துல்லியமாக வெளிப்படும் 'ஊற்றெடுத்த உணர்வுகள்'

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேசத்தைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் ஹம்சபாலன் இயற்கையிலேயே கலையிலும் இலக்கியத்திலும் நாட்டம் கொண்டவர். கவிதை எழுதுவது இவருக்கு கைவந்த கலை.

சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகள், அசை வியக்கம் போன்றவை கவிதைகளில் ஆழ ஊடுருவி நிற்பதானது ஹம்சபாலனின் கவிதை எழுதும் திறனையும், அவருக்குள் இருக்கும் கவி ஆற்றலையும் வெளிப் படுத்துகின்றது.



2011 ஆம் ஆண்டு 'சிலம்புத்தாய்" எனும் பாமாலை நூலினை வெளியிட்டார். "ஊற்றெடுத்த உணர்வுகள்" கவிதை நூல் இவரது இரண்டாவது வெளியீடாக அமைகிறது. கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியீடு செய்யப்பட்டுள்ள இந்நூலுக்கான ஆசியுரைகளை முன்னாள் மாகாணக் கல்வி யமைச்சர் சி. தண்டாயுதபாணி உட்பட பலர் வழங்கி சிறப்பித்திருக்கின்றனர்.

நூலுக்கான அணிந்துரையை நீங்களும் எழுதலாம் ஆசிரியர் எஸ்.ஆர். தனபாலசிங்கம் வழங்கியுள்ள அதேவேளை, பின்னட்டைக் குறிப்பினை கலாசார உத்தியோகத்தர். வீ. குணபாலா வழங்கியுள்ளார். நூலுக்கான பதிப்புரையினை கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள முன்னாள் மாகாணப் பணிப்பாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்தினம் வழங்கியிருக்கின்றார். அவர் தமதுரையில் ஊற்றெடுத்த உணர்வுகள் நூலின் ஆசிரியரான. ஹம்சபாலனின் கவித்தவத் திறமையினைப் பாராட்டியுள்ளார்.

99 பக்கங்களில் வெளிவந்திருக்கும் இந்நூல் கைக்கடக்கமாக அழகிய அட்டைப் படத்துடன் வடிவமைப்புச் செய்யப்பட்டுள்ளதுடன் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இதனை வெளியிட்டுள்ளது.

நூலாசிரியர் ஒரு இளைஞர் துடிப்பான செயற்பாடும் தூர நோக்கும் கொண்டவர். அவரது சமுதாயம் சார் சிந்தனைகள் 'துடிப்பு" எனும் கவிதை மூலம் துல்லியமாக வெளிப் படுத்தப்படுகிறது..

**வறுமையின் ஓர்**
**வாய்ப்பாக**
**எழுதுகோலை உயர்த்தி**
**வாழ்வில் உயர்ந்திட**
**பணிவென்ற பேனா முனையால்**
**துணிவு கொண்டு**
**சுயமாக கவிதை புனைகின்றேன்.**

**கவிதை வரிகள்**
**எனது எழுச்சியை**
**நாடி நிற்கின்றது**
**தத்துவப் பொறிகளாய்**
**சமுதாயத்தில் சிலவற்றை**
**தேடிப் பார்க்கின்றது!**

துடிப்போடு தொடக்கமிட்டு நமக்கோர் விடியல் என்பதுடன் நிறைவு பெறும் இவரது 78 கவிதைகளும் பல்வேறு படிப்பினைகளையும் வழிகாட்டல்களையும் நமக்குப் பாடமாக சொல்லி நிற்கிறது.

துன்பம் நிறைந்த வாழ்க்கையை எப்படி வெற்றி கொள்வதென்பதை 'கலையும் துன்பப் புழுதி" எனும் கவிதை சொல்லி நிற்கிறது.

**களையும் துன்பப் புழுதி**
**துன்பம் நிறைந்த வாழ்க்கை**
**தானே தொடர்கின்றது**
**சிவந்த சூரிய கதிர்களாய்**
**சிதறிக் கிடக்கின்றது!**
**தோல்வி என்ற விம்பம்பட்டு**
**உடைந்து போனதோ**
**வண்ணக் கனவுகள்**
**துடைத்தெழு துயரை**



**படைத்திடு புதுயுகத்தை!**

எம்மை எதிர்நோக்கி வரும் தடைகளைத் தாண்டி செல்லுகின்றபோது வெற்றிப் பாதைகள் தானே திறந்து கொள்ளும் என்பது இங்கு வலியுறுத்தப்படுகிறது.

ஒவ்வொருவரும் தமக்கான விடியல் நல்லதாக, நன்மைகள் நிறைந்ததாக அமைவதையும் அதில் தமது எண்ணங்கள், ஆசைகள், கனவுகள் நிறைவேற்றப்பட்டு சந்தோசம் மலர்வதையும் பெரும்பாலும் விரும்புவர்.

இங்கு வாழ்வில் புதுவசந்தம் பூத்துக்குலுங்க புது நம்பிக்கையோடு காத்திருக்கின்றார் கவிஞர் ஹம்சபாலன்.

**மனதில் உன் நினைவுகள்**
**நெருங்கி வர வலிகளைக் களைந்து**
**வலிமை நிறைந்து உனக்காக**
**ஓர் கவிதை எண்ணத்தில் சிறகடித்து..**

**கவி வரிகளின் சிந்தனை**
**மனதைத் தொட்டு சிந்தித்து**
**செதுக்கிய சிற்பமாய் என்னுள்ளே!**
**எழுகின்ற புகழ் ஓங்க..**

அன்பாய் பேசும் வார்த்தையில் உதித்தெழுட்டும் எமக்கோர் விடியல் என கவிஞர் கவிதையினை அன்போடு இணைத்து நிறைவு செய்துள்ளார். கவியாளுமை, கவித்திறன் என்பவற்றில் இவர் வெற்றி பெற்றுள்ளார். அவருக்கு இதயம் நிறைந்த வாழ்த்துகள்!!!

கிண்ணியா
பீ.ரீ. அஸீஸ் ...

# "மைக்கலின் எழுத்தில் காதலும் ஒருவித கிறக்கமும் இருக்கும்"

'சிலுவைகளே சிறகுகளாய்' 'வீணையடி நீ எனக்கு' ஆகிய இருநூல்களும் சமகாலத்தினை பேசுகின்றன. சம்பவங்களை போலவே இந் நாவலில் வரும் பாத்திரங்களில் பலர் நிஜமான பாத்திரங்களாகவுள்ளனர் என திருகோணமலை சண்சைன் ஹோட்டலில் நடைபெற்ற வி. மைக்கல் கொலினின் இரு நூல்களின் அறிமுகவிழாவில் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த யாழ். மாவட்டச்செயலாளர் க. மகேசன் தெரிவித்தார்.

மைக்கல் கொலின் இயங்கியலுடன் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறார். அதுவே அவரது வெற்றியாகும். தாகத்தில் தொடங்கி மகுடம்வரை அவரது தொடர் ஓட்டம் முற்றுப்பெறாமல் பயணிக்கிறது.

எதிர்கால தமிழ் இலக்கிய வரலாற்றை மைக்கல் கொலின் என்ற பெயர் இல்லாமல் எழுதிவிடமுடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

நண்பர்கள் வட்டம் ஏற்பாடுசெய்து திருகோணமலை இலக்கிய ஆய்வாளர் திருமலை நவம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் தொடர்ந்தும் உரையாற்றிய யாழ் மாவட்ட செயலாளர்:

சிலுவைகளே சிறகுகளாய் (கவிதை நூல்) வீணையடி நீ எனக்கு (நாவல்) ஆகிய இருநூல்களும் சமகாலத்தினை பேசுகின்றன.

இந்த காலகட்டத்தினை கடந்துதான் நாங்களும் வந்திருக்கிறோம். மைக்கலின் எழுத்தில் ஒருவித கிறக்கமும் காதலும் இருக்கும். அதேவேளை எதற்கும் அடிபணியாத ஆக்ரோசமான கலகக்குரலும் அதில் இருக்கும். வீணையடி நீ எனக்கு நாவலில் வரும் ஒற்றைப்பனையை யாரும் மறந்துவிடமுடியாது.

இந்த ஒற்றைப்பனைக்கு கீழே நாங்களும் கூடிக்கதைத்திருக்கிறோம். சரித்திர முக்கியத்துவம் பெற்ற பனைமரம் இரவோடிரவாக காணாமல் போய்விட்டது.

சம்பவங்களை போலவே இந்நாவலில் வரும் பாத்திரங்களில் பலர் நிஜமான பாத்திரங்களாகவுள்ளனர். பேராசிரியர்கள் சி. மௌனகு, பாலசுகுமார், மற்றும் ஆங்கில விரிவுரையாளரான நண்பர் க. மகேஷ்வரன் ஆகியோர் பாத்திரங்களாகியுள்ளனர். அந்தவகையில் இது சமகால நாவலுக்குரிய தன்மையை பெற்றுவிடுகின்றது. என்றார்.







திருகோணமலை நூல் அறிமுக விழாவில் யாழ். அரச அதிபர் புகழாரம்

நூல்களின் முதல் பிரதியை திருமதி ராஜேஸ்வரி ராமநாதன் மாவட்டச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் கிழக்குப் பல்கலைக்கழக திருமலை வளாக முதல்வர் பேராசிரியர் வ. கனகசிங்கம், கவிதாயினி பாலையூற்று அஷ்ரபா நூர்தீன் ஆகியோர் சிறப்பதிதிகளாக கலந்து சிறப்புரையாற்றி னர்.கவிதை, நாவல் தொடர்பான விமர்சனங்களை கவிஞர்கள் திருமலை சி. காண்டீபன், லலிதகோபன் ஆகியோர் வழங்கினர். நிகழ்வில் செல்வி. கிரிஜா கனகரட்ணம் தலைமையில் திருமலை கலைஞர்கள் பங்குபற்றிய புல்லாங்குழல் இசை நிகழ்வும் நடைபெற்றது.

கவிஞர். தி. பவித்திரன் நிகழ்வை தொகுத்து வழங்க நூலாசிரியர் வி. மைக்கல் கொலின் நன்றியுரை ஆற்றினார். (ஸ)

# ரமழான்!



ஆன்மீகபெருவெளியில்
மறைவானஞானமாண்பியங்களை
தன்னகத்தேகொண்டது
அருள் நிறைரமழான்
பசித்து
தாகித்து
ஒருமித்து
ஓரிறையின்
ஆணையேற்று
ஐம்புலன்களை
அடக்கியதாய்
பாவங்களை
சுட்டெரிக்கும்
பாங்கானமாதமாம்
பர்ளானரமழானிலே!
இல்லாமையை
இல்லாதொழிக்க
ஈட்டியதிலிருந்து
ஈந்தளித்து
இறைநபிஅருளிய
இன்னமுதுமொழிதனை
இனிதாய் நிறைவேற்றிடும்
ஈகையின் மாதம் ரமழான்
பராரிகளின்
பசிதாகமறியா
பணம் படைத்ததோரின்
செருக்கழித்துஈமானிய
செல்வர்களாய்
செதுக்கியதுரமழான்
பௌதீகக்
கலவையானஎம்
சரீரத்தை
சீர்படுத்தி
பரிசுத்தப்படுத்தி
உளவியல் ரீதியாய்
உற்சாகப்படுத்திடும்
உன்னதமாதம் ரமழான்
அடுத்தவேளைக்கு
அருளாளன் துணை
நாடிநிற்கும்
நலிந்தோர்களின்
நலனிற்காக
நல்லபலதிட்டங்களை
வகுத்தமாதம் ரமழான்
ஏற்றத் தாழ்வின்றி
ஏழைகளைஅரவணைத்து
ஏற்றங்காணவைத்திடும்
ஏற்றமிகுமாதம் ரமழான்
அறிவுக் களஞ்சியம்
ஆன்மீகபொக்கிஷம்
அருள்மறைஅல்குர்ஆன்
அருளப் பெற்றமாதம் ரமழான்
ஆயிரம்
மாதங்களைவிட
சிறந்ததோர்
அற்புத இரவாம்
'லைலத்துல் கத்ர்'எனும்
இரவுதனை
தன்னகத்தேகொண்டமாதம்
தன்னிகரில்லாரமழான்
பகலில்
பசித்திருத்தலும்
இரவில்
நின்றுவணங்குதலும்
இல்லாதோருக்கு
பகிர்ந்தளித்தலும்
நோன்பிருத்தலின்
மாண்பியங்களாம்
நோன்பாளிக்கான
வெகுமதியாய்
'ரைஹான்'எனும்
சுவனவாயிலின்
வழியேகிட
உலகாளுபவன்
உரிமம் தந்த
மாதம் ரமழான்
அகத்தூய்மையாகி
ஆன்மீகநெறியிலாகி
அர்ரஹ்மானின்
ரஹ்மத்தில் மூழ்கிடச் செய்தது
அருள்மறைரமழான்
வானுறை
வல்லோனின்
வாழ்க்கைதிட்டமதில்
வளமும் நலமும்
நிறைந்திட்டதாய்
வரிசைமிகுரமழான்

மலாய்க்கவிடிவங்சோ

# கண்ணான ரமழானே...



நறுமணம்கமழும்நாட்களிலே
உள்மனம்இறைஞ்சும்சுஜ்தினிலே
ஷைத்தனியம்அஞ்சும்ஆதிக்கத்திலே
கண்ணியம்நிறைந்தரமழானிலே..

தென்பட்டபிறையோடு
பிணிபோக்குஜப்பாரே
புண்பட்டவாழ்க்கையை
சீராக்குவஹ்ஹாபே
கண்கெட்டபிறகாலே
கரம்எந்தமுடியாதே
உன்கிட்டேஅழுதோமே
ரைய்யானின்ரஹ்மானே...

பரிசுத்தம்உள்ளச்சம்
பதிவேட்டில்பதிவாயே
சதிபோடும்சூழ்ச்சித்தீ
சர்வத்தோடழிப்பயே
கண்ணீர்கொள்இஸ்திஃபார்
இதயத்தைஏற்பாயே
கல்போடுகுர்ஆனை
உயிராக்குகப்பாரே..

படைத்தாரின்சாந்திக்கு
இப்தாரில்கேட்டோமே
படியோடு கரைதாண்டா
தெளிவையும்கேட்டோமே
எளியோரின்வாழ்வுக்கு
ஒளியாக்ககேட்டோமே
தவக்கல்தேநீதானே
தயவொடுகேட்டோமே..

உன்வாசல்சந்திக்க
மறுவாய்ப்பு தந்தாயே
தஹஜ்ஜதில்தஃபாவில்
தணல்நீக்கவைத்தாயே
மறுமைதன்சிபாரிசில்
சிறந்திட்டநோன்பேநீ,
சன்மானம்இதுதானே
கண்ணானரமலானே..!

லைலாஅக்ஷியா

# மரங்களின் மொழி

காற்றுமரங்களுடன்பேசுகிறதா
மரங்கள்காற்றுடன்பேசுகிறதா
குழம்பிப்போகிறேன்நான்

இதுவரைகாலமும்
மரங்களுடன்எதுவுமேபேசாமலா
கிளையில்வசித்திருக்கும்பறவைகள்

சிலவேளைமரத்தின்மொழியை
பறவைகள்அறிந்திருக்குமா

மரம்என்னையும்பார்த்து
கிளைகளைஅசைத்தசைத்து
அழைப்புவிடுக்கிறதே
அதுஎன்னோடு
என்னமொழியில்பேசுமோ

மரங்களின்தாய்மொழி
என்னவாகஇருக்கும்

காலில்மிதிபட்டுநொறுங்குகையில்
வலிதாங்காதுஆயென்றுஅழுகிறதுசருகு
இதுயாருடையமொழியோ

ஜமீல்

திகதி 29.04.2021 வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4466
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 10,707,600.00
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 5 4 6 4 7 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,971,580.00

சம்பத லக்ன வரம
சீட்டிழுப்பு இலக்கம் : 003
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 11,605,480.00
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 2 5 2 7 1 2
வெற்றி இலக்கினம் கன்னி வெற்றி இலக்கங்கள் 17 18 80
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,102,066.20

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2761
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 5,942,420.00
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 16 25 27 50
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 69,155,584.00

Mega POWER மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 824
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,659,000.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 131,528,195.60
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து T சுப்பர் இலக்கம் 19 வெற்றி இலக்கங்கள் 25 50 57 78

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 503
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,260,260.00
ஆங்கில எழுத்து G வெற்றி இலக்கங்கள் 06 14 54 76
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 95,464,598.00

செவண
சீட்டிழுப்பு இலக்கம் : 333
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,123,790.00
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 02 04 26 56
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,000,000.00

29.04.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 801,831
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரு.37,298,550.00
ரு. 2,000,000.00 பரிசுகள் 02 ரு. 500,000.00 பரிசுகள் 03 ரு. 100,000.00 பரிசுகள் 35

- ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
- பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
- வெற்றி பெரும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

வாகன ஒழுங்கு, பஸ் போக்குவரத்து, ரெயில் பெட்டிகள் மற்றும் மோட்டார் கார் தொழிற்றுறை இராஜாங்க அமைச்சு

## தேசிய போக்குவரத்து வைத்திய நிலையம்

# கொள்முதல் அறிவித்தல்

2021ஆம் ஆண்டில் மருத்துவப் பரிசோதனைக் கருவித் தொகுதிகளின் வழங்கலுக்காக சீல் வைக்கப்பட்ட கேள்வி மனுக்களை தேசிய போக்குவரத்து வைத்திய நிலையம் பெற்றுக்கொள்ளவிருக்கின்றது. மருத்துவப் பரிசோதனைக் கருவித் தொகுதிகளின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பொருள் | விபரம் | தேவையான தொகை | வழங்கப்பட வேண்டிய காலம் | மீளப்பெற முடியாத வைப்பு | மீளப்பெறக்கூடிய கேள்வி மனு பிணை |
|---|---|---|---|---|---|
| போதை வஸ்து துரித பரிசோதனைக் கருவித் தொகுதி ( Rapid Drug Test Kit/Urine) | கேள்வி மனு விபரங்கங்களுக்கு அமைவான மருத்துவ பரிசோதனைத் தொகுதிகளின் வழங்கல் | 225,000 | கேள்வி மனு ஏற்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் | ரூ.3,000/- | ரூ.990,000/- |

கேள்வி மனு தொடர்பான ஆவணங்களை 2021 மே 03ஆம் திகதியிலிருந்து மே 17ஆம் திகதி வரை மு.ப. 9.30க்கும் பி.ப. 3.00க்கும் இடையே இல.170, ஹைலெவல் வீதி, நுகேகொடை என்னும் முகவரியிலுள்ள தேசிய போக்குவரத்து வைத்திய நிலையத்தின் கணக்கியல் பிரிவிலுள்ள கணக்காளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மீளப்பெற முடியாத வைப்புக் கட்டணமாக ரூ.3,000/- ஐ செலுத்துவதன் மூலம் இந்த ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். கேள்வி மனுவைச் சமர்ப்பிக்கும்போது, மீளப்பெறக்கூடிய வைப்புத் தொகை ஒன்று செலுத்தப்பட வேண்டும். இந்த மீளப்பெறக்கூடிய வைப்புத் தொகை இல்லாத கேள்வி மனுக்கள் நிராகரிக்கப்படும்.

தகுதியுள்ள மனுதாரர்கள் கேள்வி மனு ஆவணங்களுடன் கேள்வி ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள வேண்டும்.

சீல் வைக்கப்பட்ட கேள்வி மனுக்கள், இல.170, ஹைலெவல் வீதி, நுகேகொடை என்னும் முகவரியிலுள்ள தேசிய போக்குவரத்து வைத்திய நிலையத்தின் கணக்கியல் பிரிவுக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும் அல்லது அங்கு வைக்கப்பட்டுள்ள பெட்டிக்குள் இடப்பட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மருத்துவ ஆய்வுகூடப் பொருள்கள் (பொருள் இல.)" என்று குறிப்பிடப்பட வேண்டும்.

கேள்வி மனு சமர்ப்பித்தல் 2021 மே 18ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்பட்டு, அதன் பின் உடனடியாகத் திறக்கப்படும். கேள்வி மனுக்கள் திறக்கப்படும் வேளையில் மனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சமூகமளிக்கலாம்.

**தலைவர்,**
**திணைக்கள கொள்முதல் குழு,**
**தேசிய போக்குவரத்து வைத்திய நிலையம்**
**இல.170, ஹைலெவல் வீதி, நுகேகொடை.**
**தொலைபேசி: 0112 814862**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## உள்ளூராட்சித் திணைக்களம்

01. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள செயற்றிட்டத்தின் பொருட்டு வடமத்திய மாகாண வடமத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் தகுதி மற்றும் தகைமைகளைக் கொண்ட விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரல் மூலம் விலைக்கோரல் செயற்பாடுகள் இடம்பெறும். என்றாலும் 04/2016(iii) ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வேலைகளின் மதிப்பீட்டுப் பெறுகை பெறுமதி (VAT மற்றும் ஏனைய வரிகள் இல்லாமல்) 50 மில்லியன் ரூபாவுக்குக் குறைவாக இருப்பதனால் மாகாண முன்னுரிமை மற்றும் CIDA பதிவுத் தர முன்னுரிமை பிரயோகிக்கப்படும்.

03. ஒப்பந்தத்தை பெற்றுக்கொள்ளும் சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் கட்டிட நிர்மாணத் துறைக்காக நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள துறை மற்றும் தரத்தில் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

04. ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்கு கடந்த ஐந்து வருடங்களில் 3.5 மில்லியன் ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமதியைக் கொண்ட இதற்கு நிகரான கட்டிட வேலையை நிறைவு செய்திருத்தல் அல்லது கடந்த ஐந்து வருடங்களில் இதற்கு நிகரான மூன்று செயற்றிட்டங்களில் தொழில்நுட்ப அதிகாரியொருவரை (NCT Civil/NVQ 5) பணியிலமர்த்தியிருத்தல் என்பன தகைமைத் தேவைப்பாடுகளில் உள்ளடங்குகின்றன.

05. ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் அனுராதபுரம், ஹரிஸ்சந்திர மாவத்தை, மாகாண சபை கட்டிடத் தொகுதி, வடமத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரிடம் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். (தொலைபேசி: 025-2234728, தொலைநகல்: 025-2234728, மின்னஞ்சல்: info@lgd.nc.gov.lk) மற்றும் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 3.00 வரையான காலத்தினுள் பின்வரும் முகவரியில் கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

06. ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் 2021 ஏப்ரல் 30ஆம் திகதி முதல் 2021 மே 20ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 வரையான காலத்தினுள் அனுராதபுரம், ஹரிஸ்சந்திர மாவத்தை, மாகாண சபை கட்டிடத் தொகுதி, வடமத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றுடன் மீளளிக்கப்படாத கட்டணமாக 3500.00 ரூபா கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு ரொக்கப் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

07. விலைமனுக்களை 2021 மே 21ஆம் திகதி பி.ப. 1.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சுய விருப்பத்தின் பேரில் வருகை தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

08. விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட இறுதி நாள் முதல் 77 நாட்களுக்குச் (2021-08-06ஆம் திகதி வரை) செல்லுபடியாதல் வேண்டும்.

| இல. | வேலையின் விபரம் | மதிப்பீட்டுக் கிரயம் (ரூபா) | ஒப்பந்தக் காலம் | தேவையான தரம் | தேவையான விலைமனுப் பிணை முறி | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை முறித் தொகை | செல்லுபடியாகும் காலம் |
| 01 | எலஹர பிரதேச சபையிலுள்ள தியபெதுமவில் வாரச் சந்தையை நிர்மாணித்தல் | 5.50 மில் | 120 நாட்கள் | $C_6 - C_7$ கட்டிட நிர்மாணம் | 55,000.00 | 03-09-2021 |
| 02 | எலஹர பிரதேச சபையிலுள்ள அத்தனகடவலயில் வாரச் சந்தையை நிர்மாணித்தல் | 5.80 மில் | 120 நாட்கள் | $C_6 - C_7$ கட்டிட நிர்மாணம் | 58,000.00 | 03-09-2021 |
| 03 | எலஹர பிரதேச சபையிலுள்ள தியபெதும விற்பனை நிலையக் கட்டிடத்தின் மேல் மாடியை நிர்மாணித்தல் | 5.30 மில் | 120 நாட்கள் | $C_6 - C_7$ கட்டிட நிர்மாணம் | 53,000.00 | 03-09-2021 |

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**உள்ளூராட்சித் திணைக்களம்,**
**மாகாண சபைக் கட்டிடத்தொகுதி (தரைத் தளம்),**
**ஹரிஸ்சந்திர மாவத்தை,**
**அனுராதபுரம்.**

28-03-2021.

# கேள்வி பத்திர அறிவித்தல்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

## போட்டோ பிரதி சேவையினை வழங்கல்

இந்தத் திணைக்களத்தில் தீவு முழுவதும் அமைந்துள்ள கிளை அலுவலகங்கள் 47 இற்காக 2021/22 ஆம் வருடங்களுக்காக அலுவலகத்தில் உள்ள அரசாங்க கடித ஆவணங்களின் போட்டோ பிரதியினை வழங்குவதற்காக திணைக்களத்தின் கேள்வி சபையினால் 2021.05.24 ந் திகதி பி.ப.2.00 மணி வரை கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

02. கேள்வி ஆவணங்களுக்கு இணங்க கேள்வி கோரப்பட்டுள்ள அனைத்து அலுவலகங்களுக்கு அல்லது வலய அலுவலகங்களாக பட்டியலிட்டு அலுவலக குறிப்பில் வலயமாக கருதப்படும் அனைத்து அலுவலகங்களுக்கும் கேள்வியினை சமர்ப்பிப்பதற்கு இயலுமை உள்ளது. கேள்வி ஆவணங்களினை 2021.05.24 ந் திகதி மு.ப. 10.00 மணிவரை மீளளிக்கப்படாத ரூ.12,500/- பணத்தினை இந்த திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினை கணக்காளர் (வழங்கல்) இடம் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ள இயலும். மேலதிக விபரங்களினை கணக்காளர் (வழங்கல்) இடம் பெற்றுக் கொள்ள இயலுவதுடன் தொலைபேசி இலக்கம் 011- 3070870 ஆகும். தேவையாயின் கட்டணமின்றி கேள்வி ஆவணங்களினை இந்த அலுவலகத்தில் பரிசீலனை செய்து பார்க்க இயலும்.

03. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் கேள்வி நிபந்தனைகளின் பிரகாரம் ரூ.600,000.00 கேள்வி பாதுகாப்புடன் இரண்டு பிரதிகளுடன் கூடியதாக கேள்விப் பத்திரங்களினை முத்திரை இட்டு 2021 மே மாதம் 24 ந் திகதி பி.ப.2.00 மணிக்கு முன்பதாக இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் அல்லது பதிவு தபாலில் பதிவாளர் நாயகம் திணைக்களம், இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவை மாவத்தை, பத்தரமுல்லை என்னும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் வைக்கப்பட்டுள்ள உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டோ பிரதி சேவையினை வழங்குவதற்கான கேள்வி கோரல்-2021/13 என குறிப்பிடல் வேண்டும்.

04. 2021.05.24 ந் திகதி பி.ப.2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படுவதுடன் அந்நேரத்திற்கு பின்னர் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர் நாயகம்,**
**கேள்விச் சபையின்**
**தலைவர்.**

**பதிவாளர் நாயகம் திணைக்களம்,**
**இல. 234/A3,**
**டென்சில் கெப்பேகடுவை மாவத்தை,**
**பத்தரமுல்லை .**

# வட மத்திய மாகாண பாடசாலைகளில் இடம்பெற்ற நிதி மோசடிகள் குறித்து 38 பேரிடம் விசாரணை

*(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)*

வடமத்திய மாகாண பாடசாலை மாணவர்களின் மதிப்புக்களை மேம்படுத்துவதற்காக சேர்க்கப்பட்டதாகக் கூறப்படும், பல இலட்சம் ரூபா அரச நிதியை மோசடி செய்த சம்பவம் தொடர்பில் அதிபர்கள் உட்பட 38 பேரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, வாய்மொழிமூல வாக்குறுதிகளும் பெறப்பட்டுள்ளன.

அதிபர்கள், பிரதி அதிபர்கள், கடமை அதிபர்கள் வேலை பார்க்கும் அதிபர்கள், ஆசிரியர் ஆலோசகர்கள்,பாடசாலை மாணவர்கள், பாடசாலை அலுவலக உதவியாளர்கள் மற்றும் பாடசாலை காவலாளர்கள் ஆகயோரிடமே இந்த விசாணைகள் நடத்தப்பட்டுள்ளன.

இந்த விசாரணைகள் 19 நிலையங்களில் இடம் பெற்றுள்ளன. வடமத்திய மாகாண முன்னாள் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராக் கடமையாற்றிய அயோமி பதிரகேயின் தலைமையில் இந்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வடமத்திய மாகாண கல்வி திணைக்கள புத்த தர்மம் மற்றும் மதிப்புக்கள் பணிப்பாளர் சுமதி பால ராஜசிங்க என்பவர், இந்த நிதி மோசடி குறித்து நேரடியாக பொறுப்புக் கூற வேண்டுமென விசாரணைகளின் மூலம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

வடமத்திய மாகாண கல்வி பணிப்பாளர் நிர்மலா ஏகநாயக்க. மாகாண மேலதிக கல்வி பணிப்பாளர் அநோமா லால் பீரிஸ் மாகாண மேலதிக கல்வி பணிப்பாளர் (அபிவிருத்தி) அமிதா விதான பதிரன மற்றும் கல்வி திணைக்களத்தின் கணக்காளர் ஜீ.பி.சினேன் மிலிந்த உள்ளிட்டோர் மீதும் இதன் பொறுப்புக்ளைச் சுமத்தி, குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நடத்தப்பட்ட விசாரணையின் பின்னரே, வடமத்திய மாகாண கல்வி திணைக்கள புத்த தர்மம் மற்றும் மதிப்புக்கள் பணிப்பாளர் உள்ளிட்ட மேற்படி பெயர் பதவி குறிப்பிடப்பட்டோருக்கு எதிராக விசாரணை பிரிவின் பொறுப்பதிகாரிகள் குற்றப்பத்திரம் சமர்ப்பித்துள்ளனர்.

இவர்கள் ஐவரினுள் சுமதி பால ராஜசிங்கத்திற்கு மாத்திரம் குற்றப்பத்திரம் சமர்பிக்கப்பட்டு ஒழுங்கு விசாரணைகள் நடாத்தி தண்டிக்கப்பட்டாலும் மாகாண கல்வி பணிப்பாளர் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட ஏனையோருக்கு எதிராக ஒழுங்கு விசாரணைகள் நடாத்தப்பட்டு தண்டிக்கப்படவில்லை என மாகாண பிரதான செயலாளர் எச்.எம்.பி. பண்டார தெரிவித்தார்.

## லொறியுடன் துவிச்சக்கரவண்டி மோதி ஸ்தலத்தில் ஒருவர் உயிரிழப்பு

*(அநுராதபுரம் தினகரன் நிருபர்)*

துவிச்சக்கர வண்டியுடன் லொறியொன்று மோதி இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக கெகிராவ பொலிஸார் தெரிவித்தனர். யாழ்ப்பாணம் கண்டி ஏ 9 பிரதான வீதியின் கெகிராவ கித்துள்ஹிடியாவ பகுதியில் இச்சம்பவம்நேற்றிரவு (29)இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தில் கெகிராவ ஹித்துள்ஹிட்டியாவ பகுதியை வசிப்பிடமாக கொண்ட 56 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவருடைய சடலம் கெகிராவ வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. லொறியின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கெகிராவ பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## திறப்பனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கொரோனாவின் தாக்கம் தீவிரமாவதால் எச்சரிக்கை

*(கல்நேவ தினகரன் விசேட, திறப்பனை தினகரன் நிருபர்கள்)*

திறப்பனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயப் பிரிவில் கொரோனாத் தொற்றுக்குள்ளான ஐவர் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், மகன், இரு மகள்கள் என நால்வரும் திறப்பனை கமநல சேவை பெண் உத்தியோகத்தர் ஒருவரும் அடங்குவதாக சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் மேலும் தெரிவித்தது. கடந்த செவ்வாய்க்கிழமை (27) ஆம் திகதியே இவர்கள் இனங் காணப்பட்டுள்ளனர்.

இதில், ஒரு மகள் அநுராதபுரம் சுவர்ணபாலி பாலிகா மகா வித்தியாலயத்தில் கல்வி கற்பதுடன், மற்றைய மாணவன் திறப்பனை வித்தியாலயத்தில் கல்வி கற்பவராவார். இதில் முதலில் இனங் காணப்பட்ட நபருடன் தொடர்பில் இருந்த 56 குடும்பங்களைச் சேர்ந்த 152 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு சுய தனிமைப்படுத்தப்பட்டவர்களில் திறப்பனை ஆரம்ப பிரிவு பாடசாலையின் ஆசிரியைகள் இருவர் உட்பட அப்பாடசாலையின் இரண்டாம் வகுப்பில் கல்வி கற்கும் 31 மாணவர்களும் அடங்குவதாகவும் மேலும் சுகாதார பிரிவினர் தெரிவித்தனர். அத்தோடு மேலதிக வகுப்பில் கலந்து கொண்ட 21 மாணவர்களும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

### தென் மாகாண சபை

### தென் மாகாண பிரதான செயலகம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

தென் மாகாண பிரதான செயலகத்தின் சார்பில் பிரதான செயலக பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தங்களுக்காக தேர்ச்சியுடைய மற்றும் தகைமைகளுடனான விலைமனுதாரர்களிடமிருந்து வெவ்வேறான வகையில் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஒப்பந்த இலக்கம் | அளவு பத்திரத் தொகை (ரூபா) மில்லியன் | CIDA வகுதி | விலைமனுப் பிணை முறி (ரூபா) | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| 01 | முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனத்தில் நான்கு மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தல் (2ஆம் கட்டம்) | SP/CS/NCB/21/01 | 21.1 | C6/C5 | 200,000.00 | 4,000.00 |
| 02 | லபுதுவ B - 6 அரசாங்க விடுதியின் திருத்தவேலைகள் | SP/CS/NCB/21/04 | 4.0 | C8/C7 | 50,000.00 | 2,000.00 |
| 03 | லபுதுவ C - 4 அரசாங்க விடுதியின் திருத்தவேலைகள் | SP/CS/NCB/21/02 | 3.6 | C8/C7 | 45,000.00 | 2,000.00 |
| 04 | லபுதுவ C7-U1, C7-U2, C7-L1, C7-L2 இரண்டு மாடி அரசாங்க விடுதிகளின் திருத்தவேலைகள் | SP/CS/NCB/21/03 | 2.4 | C8/C7 | 30,000.00 | 2,000.00 |
| 05 | மாவட்டப் பொறியியலாளர் (கட்டிடங்கள்) மாத்தறை அலுவலகத்தை நிர்மாணித்தல் (2ஆம் படிநிலை) | SP/CS/NCB/21/05 | 20.7 | C6/C5 | 200,000.00 | 4,000.00 |

02. தேசிய போட்டி ரீதியான விலைக்கோரல் நடைமுறைக்கமைவாக விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். ஒப்பந்தத்தைக் கையளிக்கையில் தகைமை வாய்ந்த விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் இல்லாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் CIDA மேற்படி வகுதியின் கீழ் பதிவையும் கொண்டிருத்தல் வேண்டும்.

03. நிதி அமைச்சின் 2021-02-18ஆம் திகதிய 04/2016(iii)ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் இந்தப் பெறுகைகளின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 50 மில்லியன் ரூபாவுக்குக் குறைவாக உள்ளதால் ஒப்பந்தக்காரர்களின் மாகாண முன்னுரிமை மற்றும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் தர (CIDA Grade) முன்னுரிமை விலைமனுக்களை மதிப்பிடுகையில் கவனத்திற் கொள்ளப்படும். மேலும் 2021-01-01ஆம் திகதிய 03/2020(i)ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் ஏற்புடையதாகும்.

04. ஆர்வம் காட்டும் தேர்ச்சியுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்கள் மற்றும் விலைமனு ஆவணங்களை 2021-04-30ஆம் திகதி முதல் 2021-05-24ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மேற்படி கட்டணத்தைச் செலுத்தி காலி, எஸ்.எச். தஹநாயக்க மாவத்தையில் அமைந்துள்ள பிரதான செயலகத்தின் வழங்கல் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

05. விலைமனுக்களுடன் சமர்ப்பிக்கப்படும் விலைக்கோரல் பிணை முறியானது இலங்கையின் வர்த்தக வங்கியொன்றில் தென் மாகாண பிரதான செயலாளரின் பெயரில் பெற்றுக்கொண்ட 2021-09-25ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் பிணை முறி அல்லது பிரதான செயலகத்தின் கணக்கிடல் பிரிவிற்கு ரொக்கப் பணமாகச் செலுத்திய பின் வழங்கப்படும் பற்றுச்சீட்டை விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளாக சமர்ப்பிக்கப்படும் பிணை முறிகள் நிராகரிக்கப்படும்.

06. சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தத்திற்கு இயைபாக இரு நகல்களிலாலான விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அவற்றின் மூலப் பிரதியில் மூலப் பிரதியெனக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் நகல் பிரதியின் நகல் பிரதியெனக் குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுக்களின் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளை வெவ்வேறு உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து சமர்ப்பித்தல் வேண்டும்.

07. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விலைமனு இலக்கம் மற்றும் விபரங்களைக் குறிப்பிடுதல் வேண்டும். முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2021-05-25ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பெறுகைக் குழு, தென் மாகாண பிரதான செயலகம், எஸ்.எச். தஹநாயக்க மாவத்தை, காலி எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து கணக்காளர் (வழங்கல்கள்) அவர்களின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் பதிவு செய்ததன் பின் கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் 2021-08-25ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

08. விலைமனுக்கள் 2021-05-25ஆம் திகதி விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடைந்த உடனடுத்து பிரதான செயலகத்தில் இடம்பெறும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

09. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2021-05-12ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு தென் மாகாண பிரதான செயலாளரின் தலைமையில் தென் மாகாண பிரதான செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் இதில் கலந்துகொள்ளலாம்.

10. மேலதிக விபரங்களுக்கு,

a. மாவட்டப் பொறியியலாளர், மாவட்டப் பொறியியலாளர் (கட்டிடங்கள்) அலுவலகம், மாத்தறை (தொ.பே. 0412233934/0412222386)

b. மாவட்டப் பொறியியலாளர், மாவட்டப் பொறியியலாளர் (கட்டிடங்கள்) அலுவலகம், காலி (தொ.பே. 0914941546))

கவனிக்கவும் - கேள்வி அறிவித்தலை தென் மாகாண பிரதான செயலகத்தின் www.cs.sp.gov.lk எனும் இணையதளத்தில் பார்வையிடலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**தென் மாகாண பிரதான செயலகம்,**
**எஸ்.எச். தஹநாயக்க மாவத்தை,**
**காலி.**

**திகதி: 2021-04-29**
**தொலைநகல்: 091-2242697**

**தொலைபேசி இல.: 091-4944016/091-4946368**
**மின்னஞ்சல்: procurementplan1@gmail.com**

### இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

## நீர்ப்பாசன அமைச்சு

# கேள்வி அறிவித்தல்

(தேசிய ரீதியிலான விலைமனு கோரல்)

## மாதுருஓயா வலது கரை அபிவிருத்தி செயற்திட்டம்

திட்டப் பணிப்பாளர் மாதுரு ஓயா வலது கரை அபிவிருத்தி செயற்திட்டம். நீர்ப்பாசன அமைச்சின் கீழ் திட்டக் கொள்முதல் குழுவினால் பின்வரும் வேலைகளுக்காக 2021 மே மாதம் 25ம் திகதி மு.ப. 11.00 மணிவரை முத்திரை பொறிக்கப்படட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| உரு. இல. | விபரம் | ஒப்பந்த இல. | ஒரு தொகுதி கேள்விப் படிவத்திற்கான மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் | ஆகக் குறைந்த இக்டாட்/சீடா பதிவுத் தரம் மற்றும் துறை |
|---|---|---|---|---|
| 01 | 0+630 கி.மீ. முதல் 4+030 கி.மீ. வரை தம்மின்ன வலமண்டிய வீதியை மேம்படுத்துதல் (மதிப்பீட்டுப் பெறுமதி வட் வரியின்றி 123.00 மில்லியன் ரூபா மற்றும் ஒப்பந்தக் காலம் 301 நாட்கள்) | MORBDP/Con/RD/2021-11 | ரூபா 20,500.00 | C4 மற்றும் C3 பெருந்தெருக்கள் |
| 02 | 6+500 கி.மீ. முதல் 7+000 கி.மீ. வரை மாதுருஓயா பிரதான கால்வாயை நிர்மாணித்தல் (மதிப்பீட்டுப் பெறுமதி வட் வரியின்றி 107.00 மில்லியன் ரூபா மற்றும் ஒப்பந்தக் காலம் 301 நாட்கள்) | MORBDP/Con/MC/2021-14 | ரூபா 19,000.00 | C4 மற்றும் C3 நீர்ப்பாசனம் மற்றும் காணி வடிகாலமைப்பு |
| 03 | 12+430 கி.மீ. முதல் 13+300 கி.மீ. வரை மாதுருஓயா பிரதான கால்வாயை நிர்மாணித்தல் (மதிப்பீட்டுப் பெறுமதி வட் வரியின்றி 172.00 மில்லியன் ரூபா மற்றும் ஒப்பந்தக் காலம் 336 நாட்கள்) | MORBDP/Con/MC/2021-28 | ரூபா 27,000.00 | C4 மற்றும் C3 நீர்ப்பாசனம் மற்றும் காணி வடிகாலமைப்பு |
| 04 | 13+300 கி.மீ. முதல் 13+900 கி.மீ. வரை மாதுருஓயா பிரதான கால்வாயை நிர்மாணித்தல் (மதிப்பீட்டுப் பெறுமதி வட் வரியின்றி 181.00 மில்லியன் ரூபா மற்றும் ஒப்பந்தக் காலம் 336 நாட்கள்) | MORBDP/Con/MC/2021-29 | ரூபா 28,500.00 | C3 மற்றும் C2 நீர்ப்பாசனம் மற்றும் காணி வடிகாலமைப்பு |
| 05 | 13+900 கி.மீ. முதல் 14+492 கி.மீ. வரை மாதுருஓயா பிரதான கால்வாயை நிர்மாணித்தல் (மதிப்பீட்டுப் பெறுமதி வட் வரியின்றி 176 மில்லியன் ரூபா மற்றும் ஒப்பந்தக் காலம் 336 நாட்கள்) | MORBDP/Con/MC/2021-30 | ரூபா 27,500.00 | C4 மற்றும் C3 நீர்ப்பாசனம் மற்றும் காணி வடிகாலமைப்பு |

மேற்காணும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக அவ்வேலைகளுக்கு எதிரே காட்டப்பட்டுள்ள தரம் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தையுடைய குறித்த துறையில் ICTAD/CIDA நிறுவனத்தின் பதிவைக் கொண்டுள்ள கேள்விதாரர்கள் மட்டுமே இவ்விலைகோரலுக்குத் தகைமையுடையவர்களாவர்.

தகுதியுள்ள கேள்விதாரரால் தங்களது நிறுவனத்தின் கடிதத்தலைப்பில் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றை செயற்திட்டப்பணிப்பாளர், மாதுரு ஓயா வலதுகரை அபிவிருத்திச் செயற்திட்டம், நீர்ப்பாசன அமைச்சு, வெலிகந்த இற்கு 2021 மே 01ஆம் திகதி முதல் 2021 மே 24ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை ஒவ்வொரு கேள்விக்கும் மேற்காணும் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி இது தொடர்பான கேள்வி ஆவணத் தொகுதியைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விதாரர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட கேள்விகளுக்கு விலை கோரலாம் ஆனால் தெரிவானது அவர்களின் கொள்ளளவிற்கு ஏற்ப வரையறுக்கப்படும்.

2021 மே 01ஆம் திகதி முதல் 2021 மே 24ஆம் திகதி வரையான காலத்தில் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் செயற்திட்டப்பணிப்பாளர், மாதுரு ஓயா வலதுகரை அபிவிருத்திச் செயற்திட்டம், நீர்ப்பாசன அமைச்சு, வெலிகந்த அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

